
குடியிருக்க
நீ
வரவேண்டும்...
ரமணிசந்திரன்

# குடியிருக்க நீ வரவேண்டும்

ரமணிசந்திரன்

# அத்தியாயம் - 1

அந்தப் பெரிய நகைக்கடையைப் பார்த்ததும், திருமணப் பரிசாகத் தங்கைக்கு ஏதேனும் சிறப்பாக வாங்கிக் கொடுக்கலாமே என்று தோன்றிவிடச் சட்டென்று, சசாங்கன், அந்தக்  கடையினுள் நுழைந்துவிட்டான்.

மனதில் இருந்த உறுத்தல் முழுமையாக மறையாத நிலையில், அதை எப்படி ஈடு செய்வது என்று அதைப் பற்றியே ஆழ் மனது சிந்தித்துக்கொண்டே இருந்திருக்கும் போலும்! என்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம் என்று அதே யோசனை!

தொழில் விஷயத்தில் கூட, அவன் அப்படித்தான்.

இவ்வளவுதான் என்று முடிக்கவும் மாட்டான்., பிறகு யோசிக்கலாம் என்று முழுதாக ஒதுக்கவும் மாட்டான். இன்னும் என்ன, எப்படிச் செய்வது என்று ஊடுபாவாக, உள்ளூர ஓர் இழை அவன் மனதில் ஓடிக்கொண்டே இருக்கும். அது பற்றி அவ்வப்போது தோன்றும் சின்னச் சின்ன கருத்துக்களே, பின்னர் அவனுக்கு வெற்றியை ஈட்டித் தருவனவாகவும் அமையும்.

அதுவும் இந்த ஆறேழு மாத காலமாகத் தங்கையின் மனதை, அவன் எப்படி வருத்தியிருக்கிறான்! என்ன காரணம என்று புரியாமல், பாவம், அவள் எவ்வளவு வேதனைப் பட்டிருப்பாள்!

கிட்டே வந்து, என்ன என்று கேட்கக் கூட விடாமல், முசுட்டு முகத்துடன் இருந்ததை நினைக்கையில், அவனுக்கு மிகவும் அவமானமாக இருந்தது! இத்தனைக்கும், சிரிப்பும் விளையாட்டுமாக, எப்படி இருக்கும் வீடு, அது!

எப்படியோ, நல்ல வேளையாக அதற்கொரு முடிவு, தானாக வந்து சேர்ந்தது.             இல்லையென்றால், இன்னும் எத்தனை காலம், சுவர்ணாவின் தவிப்பு நீடித்திருக்குமோ?

பெயருக்கேற்றபடி தங்கமான குணம் படைத்த தங்கையின் துன்பம் தீரக் கடவுளாகப் பார்த்து, ஒரு தீர்வைக் காட்டினார்., அதைத் தொடர்ந்து, நல்ல விதமாக அவளது வேதனையும் தீர்ந்தது என்றாலும், இடைப்பட்ட காலத்தில் அவள் அனுபவித்த துன்பம், அனுபவித்ததுதானே? என்ன பிராயச் சித்தம் செய்தாலும், அதை ஈடுகட்ட முடியுமா?

ஒருபோதும் முடியாது என்றாலும், சின்னச் சின்ன முயற்சிகளால்,

செயல்களால் தங்கையின் மகிழ்ச்சியைக் கூட்ட, அவன் முயன்றுகொண்டேதான் இருந்தான்.

இப்போதும் அது போலத்தான்!

சுவர்ணாவுக்குப் பிடித்த மாதிரியாக ஏதாவது செய்யலாமே என்று எண்ணித்தான், அவன் நகைகளைப் பார்வையிடத் தொடங்கினான்.

ஆனால், உரிய விதமாக “ஃபோகஸ்” பண்ணிய விளக்கொளியில், பளபளவென்று அழகாக ஜொலித்த அந்த நகைகளில், சுவர்ணாவுக்குப் பொருத்தமானதாக ஒன்றைத் தேர்ந்தெடுக்குமுன், அவன் வியர்த்து, விறுவிறுத்துப் போனான்! இதமாகக் குளிர் பரவியிருந்த அந்த ஏசி அறையிலும்!

திருமணம் நிச்சயமான பின், அவ்வப்போது, தங்கைக்கு நகை, துணிமணி வாங்கச் செல்லும்போது, கூட வருமாறு கூப்பிடும் தாயின் நினைவு வந்தது!

ஒரே தங்கை., திருமணம் ஆகிப் போய்விட்டாலும், இது போலெல்லாம் அன்பு அண்ணனாக அவன் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்பதை மனதில் பதிய வைப்பதற்காகத் தாய் செய்யும் முயற்சி என்று, அப்போதெல்லாம் எண்ணிக் கொள்வான்.

“அம்மா, ப்ளீஸ்! சுவிக் குட்டிக்கு உங்களை விட, நான் நன்றாகவே செய்வேன். காட் ப்ராமிஸ்! அதனால், நீங்கள் இப்படியெல்லாம் என்னைப் பழக்கிவிடத் தேவையே கிடையாது என்று நேரடியாகச் சொல்லியும் இருக்கிறான்.

அதற்காக, அன்னையிடம் குட்டும் வாங்கியிருக்கிறான்.

“மக்கு, மக்கு!” என்று செல்லமாகக் குட்டி, “தங்கையிடம் உனக்கு உள்ள பிரியம் எனக்குத் தெரியாது என்றா நினைத்தாய்? அவள் என்ன கேட்டாலும்தான் வாங்கிக் கொடுப்பாயே! கேட்காமலே கூடச் செய்வாய்! ஆனால் என்ன, வாங்கிக் கொள்ளச் சொல்லிக் காசைக் கொடுப்பாய். அவளுக்கு உன்னைத் தெரியும். அதனால், அது உன் தங்கைக்கும் போதும். ஆனால், நாளைக்கு உனக்கென்று வருவாளே, அவளுக்குப் பொருத்தமாக ஒன்றை நீயாகப் பார்த்து வாங்கிப் பரிசாகக் கொடுத்தால், அந்த சுகமே, தனிடா! அதற்குத் தெரிய வேண்டாமா என்றுதான் இப்போது பயிற்சி கொடுப்பது!” என்று சரோஜினி விளக்கமும் சொல்லியிருக்கிறாள்.

அந்த “அவளு”க்கு வாங்கிக் கொடுப்பது . . .  இந்தப் பிறவியில் அவனுக்கு அந்த சுகம் கிட்டுமா?

இரு வகையில அந்த வாய்ப்பை இழந்தவன் ஆயிற்றே, அவன்!

உள்ளத்தில் இருந்ததை வெளியே வாய்விட்டுச் சொல்லாமல் இருந்ததாலும் . . . அதுதான் முக்கியமான காரணம் என்பது, ஆய்ந்து, ஆராய்ந்து இப்போது அவன் கண்டுபிடித்தது!

ஏனெனில், ஒரே ஒரு தரம், “ஒன்றுமே சொல்லாமல் சும்மாவே இருந்தால், நான் என்ன எண்ணுவது” என்று அவளும் வாயை விட்டாள்.

அவன் வாய்விட்டுச் சொல்லாதாலேயே, அவனுக்கு அந்த மாதிரி அன்பில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறாள் என்பதற்கு, அது ஒன்றுதான் ஆதாரம்!

அவளைச் சொல்லியும் குற்றமில்லை. மற்றவர் மனதுக்குள் புகுந்தா பார்க்க முடியும்?

அவன் வாய்மூடி இருந்த காரணத்தால் வந்தது ஒன்று என்றால், அடுத்தது, பதிலுக்குப் பதில் கொடுப்பதாகக் கட்டுப்பாடற்று, வாயில் வந்ததை உளறிக் கொட்டியது! தன் திறமை முழுவதையும், அவனை நோகடிப்பதில் அல்லவா, காட்டினான்!

ஒரு நல்ல குடும்பத்துப் பெண்ணுக்கு அந்த வார்த்தைகளைக் கேட்கும்போது, எப்படி இருந்திருக்கும்?

அதிலும், அவளைப் போலக் கொள்கையோடு வளர்ந்த பெண்ணுக்கு!

செழித்து வளர்ந்து வந்த அன்புச் செடியை வேரோடு கெல்லி எடுத்தது மட்டுமின்றி, அந்த இளம் வேரில் கொதிக்கும் வெந்நீரை ஊற்றி, முழுசாகச் சாகடித்தும் முடித்தாயிற்றே!

இனி, அவளுக்கு வாங்கிக் கொடுத்து மகிழும் அந்த இனிய வாய்ப்பு, சசாங்கனுக்கு எப்படிக் கிடைக்க முடியும்?

அந்த ரோஷக்காரி, பிடிவாதமாக, அவனைத் தன் மனதில் இருந்து எப்போதோ, தூக்கி வீசியிருப்பாள்! அவ்வளவு உறுதி அவளுக்கு உண்டுதான்!

ஆனால், அவளைத் தேடிக் கண்டுபிடித்து, அவளிடம் ஒரு தரம் மன்னிப்பேனும் கேட்க முடியுமானால் . . . அந்த வாய்ப்பேனும் அவனுக்குக் கிடைத்தாலே, எவ்வளவோ நிம்மதியாக இருக்கும்!

என்ன மாதிரிப் பெண்ணைப் பின்னாலேயே அலைந்து, வளைத்து, தன்னையே நினைக்க வைத்து, கடைசியில், என்ன வார்த்தை சொல்லிவிட்டான்!

அவளோ, கவரிமான் ஜாதி!

“ஹல்லோ, என்னடாப் பையா, என்ன வருங்காலக் கற்பனையா?” என்று முகத்தின் முன் தாயார் சொடக்குப் போடவும், பழைய நினைவில் இருந்த சசாங்கன் நடப்புக்குத் திரும்பி வந்ததும், “அட, நீங்கள்தான் அம்மா, மக்கு! என் வருங்கால மகாராணிக்கு என்றால், பொருத்தம் பார்ப்பதற்காக, ஒவ்வொன்றாகத் தேடுவேனா? நகைக் கடையையே, வாங்கி, வேண்டியதை எடுத்து அணிந்துகொள் என்று கொடுத்து விட மாட்டேனா?” என்று கேலி பேசியே சமாளித்ததும், எல்லாம் இப்போது நினைவு வந்து என்ன செய்வது?

அதையே தொடர்ந்து, “ஓஹோ, அப்படியா நினைத்துக் கொண்டிருக்கிறாய்? அந்த நகைக் கடையிலே, நானும் சுவியும் பீராய்ந்து, வேண்டியதை அமுக்கிக்கொண்டு, மிச்சத்தைத்தான் உன் ஆளுக்குக் கொடுப்போம், தெரியுமா? அதாவது, மிச்சம், மீதி இருந்தால்! “ என்று அம்மா போலியாக மிரட்ட, “ஹைய்யோ, செய்தாலும் செய்வீர்கள்! மாமியாரும், நாத்தனாரும் ஆயிற்றே! இந்தப் பொல்லாத மாமியார், நாத்தனாரிடம் இருந்து. என் மனைவியை எப்படிக் காப்பாற்றப் போகிறேனோ என்று பயம்ம்மாய் இருக்கிறதே! இந்தத் தொல்லைக்காகவே, பேசாமல், கல்யாணமே பண்ணிக் கொள்ளாமல் இருந்து விடலாம் என்று. . . .” என்றவன் வாக்கியத்தை முடிக்கு முன்பாகவே, சட்டென அவன் வாயைப் பொத்தி, “சீச்சீ! விளையாட்டாகக் கூட, அப்படிப் பேசாதேடா!” என்று தாயார் பதறியதும் கூட!

வேடிக்கைப் பேச்சைக் கூடத் தாங்கிக் கொள்ளாத தாயார், உண்மையாகவே, அவன் வாழ்க்கை முழுவதும் தனியனாகத்தான் இருக்கப் போகிறான் என்று தெரிந்தால், எவ்வளவு வருத்தப் படுவாள்!

ஆனால், அதற்காக . . அன்னையின் வருத்தம் தவிர்ப்பதற்காகக் கூட, அவனால், இன்னொரு பெண்ணை  மணப்பது பற்றி நினைக்கவும் முடியாது!

ஆனால் அவள் ஒரு வேளை, பெற்றோருக்குக் கொடுத்த வாக்குப்படி நடப்பதற்காக வேறு யாரையும் . . . ஊகூம்., மேற்கொண்டு எண்ணமிட மறுத்து, சசாங்கனின்  மனது மக்கர் செய்தது!

எண்ணித்தான் என்ன பயன்?

சம்யுக்தா அவளுடைய பிரியமான சினேகிதி! அவளது காதல் திருமணத்தையே நடத்தி வைத்தவர்களில், சுசியும் முக்கியமான ஒருத்தி! ஆனால், அவளிடம் கூடத் தன் முகவரியைக் கொடுக்காமல், ஆளே மறைவது என்றால், இந்த சசாங்கனோடு எந்தத் தொடர்பும் கூடாது

என்பதற்காகத்தானே?

போய்த் தொலைகிறாள் என்று ஆத்திரத்தோடு நினைத்தபோதே, வலிதான்! இப்போது தன் குற்றம் உணர்ந்த பிறகோ, தாங்க முடியாத மனவேதனை! ஒன்றும் செய்ய முடியாத, கையாலாகாத தவிப்பு தரும் துன்பம்!

“என்ன சார் வேண்டும்?” என்ற குரலில் திடுக்கிட்டு, நடப்புக்கு வந்தான் சசாங்கன்.

தங்கையின் திருமணம் நெருங்க, நெருங்க அவளைச் சந்தித்த அந்தத் திருமணமும், தொடர்ந்த நிகழ்ச்சிகளும் அடிக்கடி நினைவு வந்து, அவனை வாட்டி வதைப்பதும் அதிகமாகிக் கொண்டே போகிறது! அது, இயல்பாகக் கூட இருக்கலாம். ஆனால், இப்படிக் கடையில் வந்து நின்று, சொந்தப் பிரச்சினையில் ஆழ்வது, வடிகட்டிய முட்டாள்த்தனம்!

சட்டென சுதாரித்து, என்னவென்று கேட்ட கடைச் சிப்பந்தியிடமே, நகைத் தேர்வு பற்றிய தன் சங்கடத்தை எடுத்துச் சொன்னான் அவன்.

சிப்பந்தி, அவனைக் கடையின் ஒரு விற்பனைப் பெண்ணிடம் கொண்டுவிட, அவளிடம் தங்கையின் வெற்றிலை வடிவ முகத்தோற்றம் பற்றி வர்ணித்து, காதுகளுக்கும் கழுத்துக்குமாகப் பொருத்தமான ஒரு செட்டைத் தேர்ந்து எடுத்து முடித்தால், அதே போல இன்னொன்று சுவர்ணாவிடம் இருக்கிறதோ என்ற சந்தேகம், திடுமென அவனுக்கு வந்தது!

அதே போல, எப்போதோ ஒரு முறை அவள் அணிந்து பார்த்த நினைவு!

இதைச் சொல்லி, ஒன்றும் வாங்காமல் செல்லவும் மனம் வராமல், முழுப் பணத்தையும் கொடுத்து விடுவதாகவும், வீட்டில் காட்டிப் பிடிக்கவில்லை என்றால், அந்த விலைக்குக் கொஞ்சமும் குறையாமல் வேறு வாங்கிக் கொள்வதாகவும் கூறி, அந்த நகை செட்டை வாங்கிச் சென்றான் அவன்!

தாயார், தங்கை இருவருக்குமே, அந்த நகை செட்டைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சி!

“என்னடாப்பா, இந்த அம்மா, தங்கைக்குப் பயந்து, உன் ஆளுக்கு நகைக்கடை வாங்கிக் கொடுக்கும் யோசனையைக் கைவிட்டு, இப்படியே உதிரியாக வாங்கிவிட முடிவு செய்துவிட்டாயா?” என்று கிண்டலடித்த தாய்க்கு, ஒரு சிறு புன்னகையை மட்டும் பதிலாகத் தந்துவிட்டுப் போனான், மகன்.

ஏனெனில், கூடப் பேசிச் சிரித்து மகிழும் சக்தி, அப்போது அவனுக்குச்

சற்றும் இருக்கவில்லை! அதுவும், அவனுடைய வருங்கால மனைவி பற்றி வேடிக்கையாகப் பேசுவதென்ன, நினைக்கக் கூட அப்போது அவனுக்குப் பிடிக்கவில்லை!

ஆனால், திருமணம், குடும்பம் பற்றிய பேச்சை அடியோடு தவிர்த்து வந்த மகன், சற்றே இளகுவது போலத் தாய்க்குத் தோன்றிவிட, வாய்ப்பை விடாமல், மகளுக்கான வேலைகளைச் செய்யுமாறு, சரோஜினி மகனை ஏவலானாள்.

அதிலிருந்து, மனைவி, குடும்பம் என்று அவனுக்கு யோசனை வந்துவிடுமாம்!

தாயைப் புரிந்து வைத்திருந்ததாலேயே, சசாங்கனும் இதைச் சாதாரணமாகவே எடுத்துக் கொண்டான். பெரிதாக ஒன்றும் நடக்கப் போவதில்லை என்றாலும், அப்போதைக்குத் தாயின் அற்பத் திருப்தியைக் கெடுப்பானேன்?

அத்தோடு, தங்கைக்குச் செய்த அநியாயத்துக்கு, இந்த மாதிரிப் பிராயச்சித்தம் செய்வது போல, ஒரு கற்பனைத் திருப்தி வேறு!

ஆனால், அன்று தையல்காரம்மா தைத்து வைத்திருக்கும் சுரிதார் செட், பிளவுஸ்களை வாங்கி வருமாறு தாயார் ஏவவும், அது சற்று அதிகப்படியாகச் சசாங்கனுக்குத் தோன்றியது.

ஒன்று, பெண்களின் துணிகளை வாங்கி வந்து, அவனுக்குப் பரிச்சயம் இல்லை!

அது ஒரு கூச்சம் என்றால், அவன் வேலைக்குச் செல்லும் இடத்துக்கு நேர் எதிர்ப்புறமாகக் குறைந்தது அரைமணி நேரம் செல்ல வேண்டும்! அதைச் சொன்னால், நீதானே முதலாளி, உன்னை யார் கேட்பது என்று, அப்படியே பேச்சு தொடரும்.

எனவே, "என்னம்மா, நீங்கள்? நான் போய், பிளவுசை வாங்கி வருவதா? "சுவி போனால், சரியாக இருக்கிறதா என்று அணிந்து பார்த்தே வாங்கி வரலாமே. " என்று சொல்லிப் பார்த்தான்.

"அவர்கள் சரியாகத்தான் தைப்பார்கள்."

"அதில்லைம்மா. தைத்ததைப் பற்றி அந்த அம்மா ஏதாவது சொன்னால், எனக்குப் புரியாது. அத்தோடு, அங்கே . .யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்?" என்று, மேலும் தயங்கினான் அவன்.

"புரியவில்லையே!" என்று கண்களை விரித்தாள் சரோஜினி! "உன் தங்கைக்காக நீ ஒன்று செய்வதில், மற்றவர்கள் நினைக்க என்ன

இருக்கிறது?”

“அதில்லைம்மா. ஆனால், அந்தத் தையல்காரம்மா, சூப்பர்மார்க்கெட்டின் உள் கடைசியில் இருக்கிறார்கள். அங்கிருந்து, பெண்களின் துணிகளை எல்லோரும் பார்க்கத் தூக்கிக்கொண்டு வருவது என்றால் . . .”

“ஏண்டா? பார்க்கிற சின்னப் பெண்கள், இவன் ஏற்கனவே மாட்டியவன் என்று திரும்பிப் பாராமல் போய்விடுவார்களோ என்று பயமா?”

“அம்மா, ப்ளீஸ்!”

“அசட்டுப் பையா, தைத்த துணிகளைப் பெரிய பையில் போட்டுத்தான் தையல்காரம்மா தரப் போகிறாள். பைக்குள் இருப்பது பெண்கள் துணி என்று, யாருக்குத் தெரியும்? நீயாகச் சொன்னால் ஒழிய? நீ, என்ன, அதை டமாரம் கொட்டிப் பறை சாற்றிக்கொண்டா, வரப் போகிறாய்?” என்ற தாயாரின் கேள்விக்குச் சரியாகப் பதில் சொல்ல முடியவில்லை, அவனால்.

அவன் பேசாமலே இருந்திருக்கலாம் போலத் தோன்றியது. அதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல், தையல்காரம்மாவின் கைச் சீட்டை வாங்கிக்கொண்டு, கிளம்பினான்.

ஆனால், அவனது தயக்கம் சரியே என்பது போல, அந்தப் பெரிய “ஷாப்பிங் மாலி”ன் நுழை வாயிலிலேயே, மிக முக்கியமான சிலரை அவன் சந்திக்க நேர்ந்தது.

வருங்கால உறவினர். சுவர்ணாவுடைய வருங்கால மாமியார், மாமியாருடைய தங்கை, இன்னும் இரு உறவுக்காரப் பெண்கள்.

முகமன்கள் முடிந்ததும், இவர்களிடம் என்னவென்று சொல்வது என்று சசாங்கன் யோசிக்கும்போதே, “தையல்காரம்மாவிடம் வந்தீர்களா, தம்பி?” என்று மாமியாரம்மா, நேரடியாகவே தொடங்கிவிட்டாள்.

அவன் ஒப்புதலாக முறுவலிக்கவும், “நாங்களும் அவர்களிடம்தான் வந்தோம். நன்றாகத் தைப்பார்கள் என்று சம்பந்தியம்மா . . .  உங்கள் அம்மாதான் தம்பி, சொன்னார்களா, மருமகளுக்குப் பழக்கமான இடத்திலேயே தைத்துவிடலாம் என்று, கல்யாணச் சேலை, துணைப் பட்டு எல்லாவற்றுக்கும் இங்கேயே தைத்துவிட்டோம்! தைத்ததை வாங்க வந்தபோதுதான், உங்கள் வீட்டுக்கும் இன்றைக்குத்தான் முடித்துக் கொடுக்கப்  போவதாகச் சொன்னார்கள். தொழிலைப் பார்க்கிற பிள்ளை என்றாலும், தங்கை மேல் உள்ள பிரியத்தில், நீங்களே வந்துவிட்டீர்கள் போல! “ என்று மெச்சுதலாகப் பேசினாள், அந்தப்

பெரியவள்.

இப்போது சசாங்கனின் முறுவல் வெகு இயல்பாக வந்தது. கூட இருந்த மற்ற பெண்களிடமும் ஓர் இணக்கமான மனநிலையே உருவாகிவிட, எல்லோருக்குமே பொதுவான ஒரு புன்னகையோடு, “உங்களைப் பார்த்ததைச் சொன்னால், சுவர்ணா மிகவும் சந்தோஷப்படுவாள்!” எனறு தெரிவித்தான் அவன்.

விடை பெறுவது பற்றி அவன் யோசிக்கையிலேயே, “அவளும் வந்திருந்தால், எங்களுக்கு இன்னும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும். நல்ல வேளை! உங்களையேனும் பார்த்தோமே! ஆனால், உங்களுக்கெல்லாம், காலம் பொன்னாக இருக்கும். அதனால், நிறுத்தி வைத்து, வளவளக்கக் கூடாது. ஒன்று மட்டும் நினைவு வையுங்கள், தம்பி. உங்கள் தங்கை வாழப் போவதால், இனி, அந்த வீடும் உங்கள் வீடுதான். திருமணத்துக்குப் பிறகு, எந்த நேரம் சுவர்ணாவைப் பார்க்க வேண்டும் என்று தோன்றினாலும், நேரம், காலம், முறை எதுவும் பாராமல் நீங்கள், அம்மா, அப்பா எல்லோரும் வந்துவிடுங்கள். யோசிக்கவே வேண்டாம். சரிதானா? அப்போது . .. நாங்கள் கிளம்புகிறோம். டிரைவர் சீக்கிரமே காரைக் கொணர்ந்துவிடுவான். இங்கே சாலையில் நிறுத்தி வைக்க முடியாது. வரட்டுமா?” என்று அந்த அம்மாள் விடைபெற, மற்ற பெண்களும் விடைபெற்றுக் கிளம்பினார்கள்.

நல்ல மனிதர்கள்! முதல் பார்வையிலேயே, அவனுக்கும் பிடித்துப் போயிற்று! இந்தத் திருமணத்தைப் போய்ப் பல மாதங்களாகத் தடுத்து வைத்திருந்தானே!

காரணம் அவனே என்று தெரிந்துதான் இருக்கும்! ஆனால், அது பற்றி ஒரு வார்த்தை சொல்லாமல், நல்லதை மட்டும் குறிப்பிட்டுப் பேசிவிட்டுப் போகிறார்களே என்று உள்ளூர அவனுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று!

குற்றம் பாராட்டாத குணம்! தங்கை அங்கே நிம்மதியாக இருப்பாள்!

உள்ளே போய், சுவர்ணாவின் துணிமணிகளை வாங்கிக்கொண்டு திரும்பி வந்தால், கைகளில் பைகளுடன், தங்கையுடைய வருங்கால உறவுக் குடும்பம், இன்னமும் “மாலு”க்கு வெளியே இருந்த மரத்தடியில் தான் நின்று கொண்டிருந்தது!

மரியாதை நிமித்தம் என்பதை விட, என்ன காரணமோ என்ற அக்கறையிலேயே, அவசரமாக அவர்களை நெருங்கி, விவரம் கேட்டான் அவன்.

“காரில் ஏதோ சின்ன பிரச்சினையாம், தம்பி. “ஸ்டார்ட்” ஆக மாட்டேன் என்கிறதாம். இதோ, சரிபண்ணி, வண்டியைக் கொண்டு வந்து விடுகிறேன் என்கிறான், டிரைவர். ஏதேனும் டாக்சி வரச்சொல்லிப் போகலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். “ என்றாள், சுவர்ணாவுடைய மாமியார்.

“இப்போது சொன்னாலும், டாக்சி வரவும் பத்து இருபது நிமிஷங்கள் ஆகும், அத்தை. அதை விட, என் காரில் ஏறுங்கள். உங்கள் வீட்டில் கொண்டு விட்டுவிட்டுப் போகிறேன். “ என்று அழைத்தான் அவன்.

“உங்களுக்கு ஒன்றும் தொந்திரவில்லையே?” என்று கேட்டுவிட்டு, டிரைவரிடம் விவரம் தெரிவித்துவிட்டு, அவனது காரில், அவர்கள் ஏறினர்.

அனாவசியமாக பிகு பண்ணி நேரத்தை வீணடிக்காமல், மணமகன் வீட்டார் நடந்துகொண்ட விதமும் அவனுக்குப் பிடித்தது!

அவனுடைய தங்கையின் தேர்வு பிரமாதம்தான்! அவனுக்குத்தான் தாமதமாக . . . போகட்டும். இப்போதாவது புரிந்ததே!

சுவர்ணாவுடைய மாமியார், அவ்வப்போது அவனிடமும் பேச்சுக் கொடுத்தாலும், பெரும்பாலும் தன் உறவினதோடுதான் பேசிக் கொண்டிருந்தாள்.

சுவர்ணா எவ்வளவு நல்ல பெண், அந்தக் குடும்பம் எவ்வளவு பண்பானது, பெண்ணுடைய அண்ணன் எப்படி, இன்னும் பல்வேறு விவரங்களை எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தாள்!

கடைசியாக, அவனது தங்கைப் பாசம், தொழில் திறமை . .இன்னும் எத்தனையோ சொல்லி, அவனைக் காது மடல் வரை, சிவக்கடித்து தான், அவனுக்குச் சிரமமாக இருந்தது!

“எங்கள் சுவர்ணாவிடம், இந்தத் தம்பிக்கு உயிர்ப்பா! ஆறு மாதங்களாக, நம் பையனின் நடவடிக்கையை அலசி, ஆராய்ந்து பார்த்து, அதன் பிறகே தீபன் சுவர்ணா திருமணத்துக்குச் சம்மதம் சொன்னார்! ஆனால், அந்தக் குடும்பமே, உயர்வானது, அண்ணி! தீபனுக்கு, இப்படிப் பட்ட உறவினர் அமைவதே, எனக்கு சந்தோஷம்!” என்றாள் அந்தத் தாய், மகிழ்ச்சியோடு!

உண்மையில் நடந்தது என்ன? இவர்கள் எண்ணுவது என்ன?

“காதல், கீதல் என்கிற பேச்சுக்கே இந்த வீட்டில் இடம் கிடையாது. அப்படி யாரும், அந்தப் பேச்சை எடுப்பதானால்,நான் இந்த வீட்டில் இருக்க மாட்டேன்! “

இப்படியெல்லாம் அடாவடியாகச் சொல்லியல்லவா, இந்த ஆறு மாதங்களாக, இந்தத் திருமணத்தைச் சசாங்கன் தடுத்து வைத்திருந்தான்!

நல்லவேளை! இப்போதேனும், அவனுக்குக் கண் திறந்ததோ, இந்தத் திருமணமும், நல்லபடியாக நடக்கப் போகிறதோ! அதெல்லாம் தெரியாமல் . . கடவுள் புண்ணியத்தில், இவர்கள், இப்படியே நினைத்துக் கொண்டிருக்கட்டும்!

காரின் பின்புறமிருந்து, கிளுகிளுவென்று லேசான சிரிப்புச் சத்தமும், “வாயை மூடிக்கொண்டு, சும்மா இரு! அவர்களை வைத்துக்கொண்டே, இப்படிப் பேசக் கூடாது!” என்ற அதட்டலும், “அவள் சொன்னதில் என்ன தப்பு? எனக்கு மட்டும் ஒரு பெண் இருந்தால், சுதா சொன்னது போலத்தான் செய்வேன்! “ என்றாள் பெரியவள், சுவர்ணா மாமியார்.

“அதில்லைக்கா. இப்போதுதான் ப்ளஸ் டூ முடித்திருக்கிறாள். அதற்குள் என்னமாக வாய் பேசுகிறாள், பாருங்களேன்! கல்யாணம், அது, இது என்று! இதே, பெரியவளைப் பாருங்கள், நாமாக இந்தப் பேச்சை எடுத்தால் கூட, அந்த இடத்திலேயே இருக்க மாட்டாள்! “

“அடுத்து, நாம் எல்லோரும் சேர்வது, சுசி திருமணத்தில்தான் இருக்கும். சீக்கிரமாகப் பார்க்கத் தொடங்கிவிடு, ரஞ்சி!” என்றாள் பெரியவள்.

“நானாக்கா, மாட்டேன் என்கிறேன்? அந்தப் பேச்செடுத்தாலே ஓடுகிறாள். பிடித்து வைத்துக் கேட்டதில், இன்னும் கொஞ்ச காலம் வேலை பார்த்தால், அதிலே உயர் அதிகாரி நிலைக்குப் போய் விடலாமாம் , அதனால், இப்போதைக்குத் திருமணப் பேச்சே வேண்டாம் என்கிறாள். இப்போதே, சுசிக்கு இருபத்து மூன்று ஆகிறது! இன்னும் எவ்வளவு காலம் தள்ளிப் போடுவது? நீயும், அத்தானும், அவளிடம் கொஞ்சம் சொல்லுங்கள், அக்கா!” என்று தமக்கையிடம் கேட்டுக்கொண்டாள், அந்த “சுசி”யுடைய தாயார்.

சிரிப்பு வந்தது, சசாங்கனுக்கு! பெற்ற மகளிடம் பேசுவதற்கு, ஆள் தேடுகிறார்களே! மகள், ரொம்பவும் அழுத்தக்காரி போலும்! பெரிய ராங்கிக்காரியாகவும் இருக்கலாம்.

கூடவே இன்னோர் எண்ணமும் வந்தது.

அவனும்தான் திருமணப் பேச்சே வேண்டாம் என்கிறான். அப்படியானால், அவன் என்ன, ராங்கிக்காரனா? கிடையாதே!

திருமணம் வேண்டாம் என்பதற்கு, அந்தப் பெண்ணுக்கு என்ன காரணமோ?

என்ன காரணம் என்பது, அந்த “சுசி”யைப் பார்த்ததும், சசாங்கனுக்குப்

புரிந்தது!

அந்த சுசியின் விரிவாக்கம், சுசரிதா என்பதும்! முன்னைப் போலவே, எதிர்பாராத சந்திப்பு!

# அத்தியாயம் - 2

ஓரிரு முறை, சென்றுவந்து பழக்கப்பட்டுவிட்டதால், மணமகனின் வீட்டு வாசலிலேயே, சசாங்கன் காரைக் கொண்டுபோய் நிறுத்தினான்.

துணி, சாமான் பைகளை எடுப்பதில் உதவி செய்தவனிடம், "உட்கார்ந்து, ஒரு தம்ளர் பழச்சாறு குடித்துவிட்டுப் போகலாம்தானே, தம்பி. சுவர்ணாவுடைய அண்ணனை, வயிற்றுக்கு ஒன்றும் கொடுக்காமல் அனுப்ப மனம் வரமாட்டேன் என்கிறது! ஆனால், இப்போதே எதற்கேனும் அதிகத் தாமதம் என்றால், சும்மா வெளிப்படையாகச் சொல்லி விடுங்கள், தம்பி. நான் தப்பாக எடுத்துக்கொள்ள மாட்டேன்! " என்றாள், தீபனுடைய தாயார், அன்னபூரணி.

மனதாரச் சொன்ன வார்த்தைகள். தங்கைக்கு வர இருக்கும் மாமியார் என்பதை விடவும், வெளிப் பூச்சற்று அந்த அம்மாள் பேசிய விதம் மனதைத் தொட, "உங்கள்

வீட்டில் குடிப்பதற்கு என்ன, அத்தை?" என்றவாறு, கையில் இருந்த பையை வாங்க வந்த, அந்தப் பெண் சுதாவிடம் கொடுக்காமல், தானே உள்ளே கொண்டுபோய் வைத்தான்.

ஆனால், அன்னியர் வருகை கண்டோ, என்னவோ, ஹாலில் இருந்த யாரோ, வேகமாக உள்ளே சென்று மறையவும், சற்று சங்கடமாகவும் உணர்ந்தான். வீட்டினர் இலகுவாக இருந்ததைக் கெடுத்துவிட்டோமோ என்றிருந்தது!

"ஆனால், கொஞ்சம் சீக்கிரம் கொடுங்கள், அத்தை. "

முகம் மலர்ந்து, "இதோம்மா!" என்று உள்ளே நோக்கி, "சுசிம்மா, சுவர்ணா அண்ணன் வந்திருக்கிறார். காலையில் எடுத்த ஆப்பிள் பழச்சாறு, ஃப்ரிஜ்ஜில் இருக்கும். கொஞ்சம் எடுத்து வாம்மா!" என்று குரல் கொடுத்தாள் அன்னபூரணி.

"ரஞ்சி, சற்றுச் சீக்கிரமாகக் கொண்டுவரச் சொல்லும்மா!" என்று, உட்புறம் சென்ற தங்கையிடமும் சொல்லி அனுப்பினாள்.

சீக்கிரமே, பழச்சாறு வந்தது. ஆனால், "மணியோசை வரும் முன்னே" என்பது போல, பழச்சாறு வந்துகொண்டிருந்தபோதே, அதற்கும் முன்பாகக் குரல் ஒன்று, "புதிய துணிகளை உள்ளே வைத்துவிடாதீர்கள், அம்மா. இந்தத் தையல்காரம்மா எப்படித் தைத்திருக்கிறார்கள் என்று நான் பார்க்க வேண்டும். நன்றாக இருந்தால், நானும் அவர்களிடமே கொடுக்கலாம் அல்லவா? அப்படியே வைத்திருங்கள். பழச்சாறைக்

கொடுத்துவிட்டு, இதோ, உடனேயே வந்துவிடுகிறேன்!" என்று, தெளிவாக, அழுத்தமாகச் சொல்வது கேட்டது!

அந்த அழுத்தமான குரல் . . . உடனே போய்விடப் போவதாக அந்தக் குறிப்பு, எல்லாம் அவனுக்காகச் சொல்லப்பட்டதா?

அவனைத் தயார்ப்படுத்த? அல்லது, ஒரு முன்னெச்சரிக்கையாக ?

அத்தோடு, அந்தக் குரல்!

அழகான தட்டில், குளிர் பானக் குவளைகளோடு வந்தவளைப் பார்த்ததும், சசாங்கனுக்கு எல்லாமே நிச்சயமாயிற்று! கூடவே, அப்பாடி என்று பெரும் ஆறுதலில் உடல், உள்ளம் எல்லாம் இறுக்கம் தளர்ந்து இலகுவாயின.

கடந்த ஆறு மாதங்களாக, அவளை எப்படித் தேடினான்!

கடைசியாக உறவுக்காரியாக அல்லவா, ஆகப் போகிறாள்!

பார்த்தாயிற்று! இனிமேல், அவளைத் தனிமையில் சந்திப்பதும், கடினம் அல்ல.

அல்லது, கடினம்தானோ?

வருகிறேன் , ஆனால், நிற்கமாட்டேன் என்பது போலக் குறிப்புக் கொடுத்த விதம்!

காரிலிருந்து இறங்கும்போதே அவனைப் பார்த்துவிட்டு, அவள்தான் ஹாலில் இருந்து, உள்ளே ஓடி மறைந்திருக்கிறாள்!

இப்படி ஓர் உறவுக்காரன் ஆகப் போகிறவனை ஒரேயடியாகத் தவிர்க்க முடியாது என்று புரிந்துதான், இந்த அறிவிப்பெல்லாம்!

சொன்னது போலவே, பழச்சாறு குவளையை அவன் முன்னே வைத்துவிட்டு, அவனை நிமிர்ந்தும் பாராமல், வேகமாக உள்ளே சென்று மறைந்தும்விட்டாள், அவள்.

ஆனாலும் அவளைப் பார்த்துவிட்டதால் எப்படியும் . . . .

ஏதேதோ திட்டங்கள் அவனுள் சுழலுகையில் சுவர்ணா மாமியார் பேசினாள்.

அறிமுகம் செய்வதற்காக வாயைத் திறந்துவிட்டு, அதற்குள் சுசரிதா சென்றுவிடவே, சற்றே அசடு வழிய, "அவள், என் தங்கையுடைய மூத்த பெண், சுசரிதா. சுசிக்குக் கொஞ்சம் கூச்சம் அதிகம், தம்பி. என் தங்கை, தங்கை கணவரின் வளர்ப்பும் காரணம். சுசரிதா என்று பெயர் வைக்கக் காரணமே, அவளைப் பற்றித் தப்பாக ஒரு வார்த்தை கூட வந்துவிடக்

கூடாது என்றுதான் என்று சொல்லிச் சொல்லியே வளர்த்தார்களா? இயல்பான பேச்சு கூட, அவளுக்கு இல்லாமல் போய்விட்டது! பாருங்கள், புதிதாக வந்தவரிடம் அறிமுகம் செய்து வைக்குமுன், உள்ளே ஓடிவிட்டாள்! மரியாதை இல்லை என்று நினைத்து விடாதீர்கள். ரொம்பவும் அருமையான, அன்பான பெண். அவள் வந்ததில் இருந்து, எனக்கு எவ்வளவு உதவியாக இருக்கிறாள் தெரியுமா?" என்று தங்கை மகளுக்குப் பரிந்து, அன்னபூரணி அம்மாள் விளக்கம் சொன்னாள்.

இதெல்லாம், சசாங்கன் அறியாதது இல்லை. மற்றபடி, அவர்களுக்கு இடையே அந்த மாதிரி ஈர்ப்பு இருந்தும், இருவரும் சகஜமாகப் பழகுவதற்கு, அவ்வளவு காலம் ஆகியிராதே!

அந்தத் தாமதம் நேர்ந்திராவிட்டால், அடுத்து நிகழ்ந்த தவறுகளுக்கு வாய்ப்பே இருந்திராது!

இருவரும், விஷயத்தைப் பார்த்த விதமே, வேறாக இருந்திருக்கும்! இப்படி மாறுபட்ட கோணங்களில் பாராமல், ஒன்றுபட்ட, ஒரே நோக்குடன் பார்த்திருப்பார்கள் . . .

இப்போது இதையெல்லாம், அவன், சுசரிதாவிடம் பேசியாக வேண்டுமே!

அன்று என்ன மாதிரி மனநிலையில் இருந்தான் என்பதை விளக்கி, அவளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமே!

அவளும் பேசினாள்தான். சொல்லத் தகாத வார்த்தைகளை, அவளும் கொட்டத்தான் செய்தாள். பதிலுக்குப் பதிலாக!

ஆனால், தப்பை உணர்ந்துகொள்ள, அவனுக்குக் கிடைத்த வாய்ப்பு, அவளுக்குக் கிடைத்திருக்காது! எனவே, அவளது கோபம், அப்படியே நின்று போயிருக்கும்!

நின்று போயிருக்கிறது என்பது, நன்றாகவே தெரிகிறது!

ஆனால், இப்போது அவள் உறவாகப் போகிறதால் எளிதாக அவளைச் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் கிடைக்கும்., மனதில் இருக்கும் கோபத்தில் சுசரிதா விலகிப் போனாலும், பிடிவாதமாக அவள் பின்னோடு துரத்திச் சென்று, பிடித்து நிறுத்தி, விளக்கம் சொல்லிப் புரிய வைத்துவிடலாம்., எப்படியும், அவள் மனதிலும் அன்புதானே? சீக்கிரமே, எல்லாம் சரியாகிப் போகும் என்று தோன்றிய மகிழ்ச்சி, தோன்றிய விரைவிலேயே மறைந்து போயிற்று!

இது, சுவர்ணாவின் புகுந்த வீடு. இங்கே சசாங்கன் என்ன செய்வது என்றாலும் தங்கையின் மகிழ்ச்சி, மதிப்புக்குக் குந்தகம்

நேர்ந்துவிடாமல், கவனித்துச் செய்ய வேண்டும்!

ஏற்கனவே இந்தத் திருமணத்தைத் தடுத்து, ஆறு மாதங்கள் அவளை வருத்தியது மட்டுமின்றி, கல்யாணம் ஆன பிறகும், அவளது நிம்மதியைக் குலைத்து விடக்கூடாது!

அழகான பெண்ணைக் கண்டதும் மருமகளுடைய அண்ணன் அலைகிறான், அத்து மீறுகிறான்  என்பது போல, எந்த அவப் பெயரும் வந்து, அவளை நோகடித்து விடக் கூடாது!

அதுவும், அன்னபூரணி அம்மாளுடைய தங்கை மகள் எனும்போது, சுசரிதா, சுவர்ணாவிற்கு நாத்தனார் முறையே ஆகிறாள். அதாவது, முழுக்க முழுக்க இந்த

வீட்டுப் பெண்!

அவளைத் "துரத்திச் சென்று பிடித்து நிறுத்தி" என்பதெல்லாம், இங்கே நடக்க முடியாத, நடக்கக் கூடாத காரியம்!

வரும்போது அண்ணபூரணி அம்மாள் புகழ்ந்த புகழ்ச்சி நிலைக்க வேண்டும் என்றால், ஒரு கௌரவமான உறவினனாக சசாங்கனை மட்டுமல்ல, அவனுடைய தங்கையையுமே அந்தக் குடும்பம் மதித்து நடத்த வேண்டும் என்றால், அவன், சுசரிதாவைப் பார்வையால் தொடர்வது கூடத் தப்புதான்!

அதையுமே, எந்நேரமும் பெண்களை வெறித்து, வெறித்துப் பார்க்கிறான் என்று தப்பாகத்தான் சொல்வார்கள்! யாராவது "நல்லதற்குச் சொல்லுகிறவர்கள்" மூட்டை கட்டி எடுத்துப் போய்ச் சொல்லியே தீர்வார்கள்! எனவே, ஓர் உறவுக்காரப் பெண்ணிடம் சாதாரணமாகப் பழகுகிற அளவுகூட, சுசரிதாவிடம் அவனால் நெருங்கிப் பேச முடியாது!

எது எப்படியானாலும், இதுவரை, சுசரிதா எங்கே இருக்கிறாள் என்றே தெரியாமல் தவித்தது போல, இனியும் வேதனைப்படத் தேவையில்லை என்பதே, அவனுக்குப் பெரும் நிம்மதிதான்.

என்ன, கொஞ்சம் பொறுமையோடு இருந்து, நிதானமாகச் செயல்பட்டால், எல்லாம் சரியாகிப் போகும்!

அதில், அவனுக்கு நம்பிக்கையும் அவனுக்கு இருந்தது! வேலையைக் காட்டித் திருமணம் இப்போது வேண்டாம் என்று சுசரிதா சொல்வதே, ஒரு நல்ல அறிகுறி அல்லவா? அவனைத் தவிர, வேறு யாரை மணப்பதற்கும், அவளுக்குப் பிரியமில்லை என்றுதானே, அதற்குப் பொருள் கொள்ள வேண்டும் என்று நிம்மதி அடையும்போதே,

அப்படியின்றி, அவள் ஆண்களையே வெறுத்துவிட்டாளோ என்று அவனது மனம் கலங்கவும் செய்தது! வெகுவாகவே!

ஏனெனில், அவன் பயன்படுத்திய வார்த்தைகள் அப்படி!

சுவர்ணா, தீபனின் திருமணத்தை வெகு சிறப்பாக நடத்த வேண்டும் என்பது, அவளுடைய பெற்றோரின் ஆசை.  அண்ணனைப் பற்றியோ, கேட்கவே தேவையில்லை!

பாசமே அதிகம் உண்டு. இப்போது பிராயசித்தமாகவும் எண்ணிச் செயல்பட்டுக் கொண்டிருந்தான்!.

பணத்தைக் கணக்குப் பாராமல், உயர்வாக மட்டுமே இருக்க வேண்டும் என்று கருதி ஏற்பாடு செய்திருந்ததாலோ என்னவோ, நாதசுரத்திலிருந்து, திருமண மண்டப அலங்காரம், உணவு முதலிய எல்லாமே, மிகவும் சிறப்பாகவே அமைந்துபோயின.

முன் தினம் மாப்பிள்ளை அழைப்பு முடிந்து, இரவில் மணமகளுக்குப் பட்டுக் கட்டுவதில் இருந்து, மறுநாள் காலைக்குச் சிற்றுண்டி வகை, மதியத்துக்குக் கல்யாணச் சாப்பாடு, இரவு வரவேற்புக்கு வேறு விதமான விருந்து என்று, ஒவ்வொரு நேரத்துக்கும், ஒவ்வொரு விதமாக உணவு தினுசுகள்.

நகரத்தில் மிகவும் புகழ் பெற்ற நாதசுரக் கலைஞர்களை ஏற்பாடு செய்தார்கள். வரவேற்பின் போது கச்சேரியும் அப்படித்தான்!

எல்லாமே, குடும்பத்தினர் நால்வருமாகச் சேர்ந்து அமர்ந்து, கலந்து பேசித் திட்டமிட்டது. அதை, மணமகன் குடும்பத்தாரிடமும் காட்டி அபிப்பிராயம் கேட்க, சிறு மாற்றமும் இன்றி, அவர்களும் அதை அப்படியே ஒப்ப, எல்லாவற்றையும் முன்கூட்டியே ஏற்பாடு செய்துவிட்டதால், கடைசி நேரத்துப் பரபரப்பு எதுவுமின்றி, திருமண நிகழ்ச்சிகள்  அனைத்தும், உரிய விதமாகச் சிறப்பாக நடைபெறலாயின.

ஆனால், ஒவ்வொரு சடங்கும் நடக்க நடக்க, இது போன்ற சிறப்புகள் எதுவுமின்றி, யார் வந்து, என்ன ஆகிவிடுமோ என்ற பயத்தில், அவசர அவசரமாக நடந்தேறிய, இன்னோர் திருமணம்தான், சசாங்கனுக்கு நினைவு வந்துகொண்டே இருந்தது.

அவன், சுசரிதாவைச் சந்தித்ததே அங்கேதானே?

முதலில் இந்த நாதசுர இசை!

இப்போது, நாலா திசைளினும் கேட்கும்படியாகக் கம்பீரமாக  வாசித்துக் கொண்டிருந்த ஜோடி நாதஸ்வரத்தைப் பார்க்கையில், அன்று சின்ன

சிடி ப்ளேயரில், சிறு கரகரப்புடன், தெருத் திரும்புமுன்னே கேட்ட இசைதான், துல்லியமாக அவன் காதில் ஒலித்தது!

தலையைக் குலுக்கி, பிடிவாதமாக மனதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான், அவன்! இது பழசை நினைத்துக் கலங்குகிற நேரமில்லை!

மணப் பெண்ணுடைய சகோதரன் என்ற முறையிலும், திருமணத்தைப் பொறுப்பேற்று நடத்துகிறவன் என்ற விதத்திலும், எண்ணத்தைச் சிதற விடாமல், முழுக் கவனத்துடன் செயல்பட வேண்டியவன் சசாங்கன்! ஏற்ற பொறுப்பில் குறை நேர விடுகிறவன் அவனில்லை!

சுவர்ணாவுக்கு மாப்பிள்ளை வீட்டுப் பட்டு உடுத்தி, இரவு விருந்து முடிந்து, எல்லோரும் அவரவர் இடங்களில் முடங்கும்வரை, அவனுக்கு வேலை சரியாக இருந்தது.

பிறகும், சமையல்காரர், பூ அலங்காரம் செய்கிறவர்களிடம் ஏதாவது தேவைப் படுகிறதா என்று விசாரித்துவிட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகளையும் பார்த்துவிட்டுத் திரும்பிவந்து படுக்கையில் உடலைச் சாய்த்தபோது, அவனது உடலைப் போலவே, மனதும், களைத்துத் தளர்ந்துவிட்டது போலும்.

அவ்வளவு நேரமாகக் கட்டுப்பாடாக ஒதுக்கி வைத்திருந்த நினைவுகள், முட்டி மோதிக்கொண்டு தலைதூக்கி ஆட்டம் போடலாயின அதைத் தடுப்பது இப்போது அவனுக்கு மிகவும் சிரமமாக இருந்ததோடு, தடுப்பதற்கு அவன் பெரிதாக முயற்சி பண்ணவுமில்லை.

அடி பட்ட புலி, வலிக்க வலிக்கத் தன் காயங்களை நக்கிக் கொடுப்பது போல, முன்னே நடந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக நினைவு வர, வர, வலித்தாலும் ஒரு சுகமாகவும் உணர்ந்தான் சசாங்கன்.

நாதஸ்வர ஓசை தெரு திரும்பும்போதே காதில் விழுந்து, இதுதான் இடம் என்று அவனுக்குக் காட்டிக் கொடுத்தது!

காரைச் சற்று மெதுவாக ஓட்டி, நோட்டமிடுகையில், நோஞ்சானாக ஓரளவு வளைந்து நின்ற இரண்டு வாழை மரங்கள், செல்ல வேண்டிய இடத்தை இன்னமும் தெளிவாகத் தெரியப்படுத்தின.

வாழை மரங்களின் அருகே நின்ற சில பைக்குகளும், ஸ்கூட்டர்களும், ஒரு டாக்சியும் கூட!

பரவாயில்லை. கிளம்புவதற்குக் கொஞ்சம் தாமதம் ஆன போதும், எங்கே, எங்கே என்று தேடி அலையத் தேவையின்றி, நண்பனின் திருமணத்துக்கு எளிதாக வந்தாயிற்று என்று எண்ணமிடும்போதே,

அவனுக்குச் சிறு துணுக்கமும் உண்டாயிற்று!

சசாங்கனைப் போலவே, இன்னும் மற்றவர்களும் இதே போல, இலகுவாக இடத்தைக் கண்டுபிடித்து வந்துவிடுவார்கள்தானே?

அப்படி வந்துவிட்டால், தகராறுதானே?

“இந்தத் திருமணத்துக்கு, அழைப்பிதழ் அச்சடிக்கவில்லை, சசி. இதோ, நாங்கள் இருவரும் கையெழுத்திட்டிருக்கும் கம்ப்யூட்டர் பிரின்ட் அவுட்தான். இடம்கூட, இந்தக் காலனியில் என்று மட்டும்தான் குறித்திருக்கிறோம். புதிதாக வளர்ந்து வரும் குடியிருப்பு என்பதால், தெளிவான முகவரி எழுதுவதும் சிரமமே. ஆனால், நான் சொல்லுவதை வைத்துச் சற்றுத் தேடினாலே, நீங்கள் வந்துவிடலாம். வேண்டாதவர்கள், இடத்தைக் கண்டுபிடிப்பதே கடினம்! அது, ஓர் அதிகப்படி வசதி! ஏதோ விவரம் கசிந்து போய் அவர்களை எட்டினாலும், அலைந்து, திரிந்து இடத்தைக் கண்டுபிடித்து வருமுன், திருமணமே முடிந்துவிடும்!” என்று சொல்லியே, மணமகன் அவனது திருமணத்துக்கு சசாங்கனை அழைத்திருந்தான்.

இப்படி வாழை மரமும் நாதசுரமுமாக ஏற்பாடுகள் செய்தால், கண்டுபிடிப்பது எல்லோருக்குமே எளிதுதானே?

ஒரு வேளை, இரு வீட்டாரின்  சம்மதமும் கிடைத்துவிட்டதா?

நேற்று மாலைக்குப் பிறகா?

காரை ஓரமாக நிறுத்திவிட்டு, யோசனையோடு கட்டிடத்தின் உள்ளே சென்றபோது, மங்கள இசையை மீறிக்கொண்டு, “சளபுள”வென்று கேட்ட குரல்களில், மத்திய வயதுக் குரல் எதுவுமில்லை!

ஹாலுக்குள்ளும், அப்படிப்பட்ட வயதில் யாரும் இருக்கவில்லை!

அப்படியானால், வெளியே கட்டியிருந்த வாழை மரங்களும், இந்த நாதசுர ஓசையும், அதிகப்படிதான்! வம்பை விலை கொடுத்து வாங்குகிற அளவுக்கு அதிகம்!

வேலையோடு, நிர்வாகத்திலும் வசுந்தரன் கெட்டிக்காரன் என்று, இந்தக் கிளையின் பொறுப்பை, அவனிடம் கொடுத்துப் போவதாக எண்ணியது, எந்த அளவு சரியாக இருக்கக் கூடும் என்று, சசாங்கனுக்கு இப்போது ஒரு சிறு யோசனை ஓடியது.

ஆனால், இது போல வாழ்வின் முக்கியமான, பெரிய திருப்பத்தின் நடப்புகளைக் கொண்டு, ஒருவனை எடை போட முடியாது.

அலுவலகத்துக்குள் புகுந்துவிட்டால், அவனது வேலையில் பழுது சொல்ல முடியாது! அவனுக்கு அது தானே, தேவை?

அத்தோடு, இந்த நிகழ்வுகளில் சிலது அவன் அறியாமலே கூட நடந்திருக்கலாம்.

நண்பர்களாகக் கூடிச் செய்யும் மணவிழா! ஆளுக்கொரு வேலையாக எடுத்துச் செய்கிறார்கள் என்று வசுந்தரன் அவனிடம் தெரிவித்திருந்தான். மணவிழா நடக்கும் இடத்தின் அலங்காரத்தை ஏற்றுச் செய்கிறவனின் சிறு பிழையோ, என்னவோ?

அப்படித்தான் இருக்க வேண்டும் என்று கூடி இருந்தோரின் பேச்சு வார்த்தை சொன்னது.

“ஏய், விளக்குகளுக்குத் திரி, எண்ணை எல்லாம் என் பொறுப்பாய்ப் போட்டு வைத்து விட்டேன்ப்பா. ஏற்ற வேண்டியதுதான் பாக்கி. என்ன சாஸ்திரிகளே, விளக்குகளை ஏற்ற வேண்டிய நேரம் சொல்லுங்கள் ஏற்றி விடுகிறேன். தீப்பெட்டியைக் கையிலேயே வைத்திருக்கிறேன். “ என்றாள் ஒருத்தி.

“காருக்குறிச்சி சிடி முடியப் போகிறது. அடுத்து, இன்னொன்று . .நா . .நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் ரொம்ப நன்றாக இருக்கும் என்று கடையில் சொன்னார்கள் என்று வாங்கி வந்தேன். போட்டு விடட்டுமா? அல்லது, இதையே மறுபடியும் ஓட விடட்டுமா?” என்று கேட்டது, இன்னொரு குரல். “எப்படியும், இந்த நாதசுரம் இல்லாது போனால் , கல்யாணக் களையே போய்விடுகிறதுப்பா!”

“அதே போலத்தான் வாசலில் வாழை மரங்களும். யாரோ வண்டியில் எடுத்துப் போய்க் கொண்டிருந்ததில் இரண்டைக் கொணர்ந்து, கட்டச் சொன்னேன்!” என்றான் இன்னொருவன்.

ஆக, இவன்தான் வாழை மரத்துக்குப் பொறுப்பு போலும்!

எப்படியும், பெண்ணும், பிள்ளையும் சட்டப்படி வயது வந்தவர்கள்! திருமணத்தைத் தடுக்க வாய்ப்பில்லை! வீண் ரசாபாசம் இல்லாமல் நடந்துவிட்டால் நன்றாக இருக்கும்! பின்னொரு காலத்தில் நினைத்துப் பார்க்கையில், எல்லாம் இனிப்பாகவே இருக்கட்டுமே!

இப்படி நினைத்தவாறே இன்னும் முன்னே சென்றால், சற்று நேரம், அவனது கண்கள் இமைக்க மறந்துபோயின.

நிறைய உதிர் பூக்கள் நிரம்பிய ஒரு தட்டைக் கைகளில் ஏந்தியவாறு  ஓர் இளம் பெண் . . . அழகி . . . பேரழகி வந்து கொண்டிருந்தாள்.

உச்சி முதல் பாதம் வரை ஒரு பெண் இவ்வளவு அழகாக இருக்க முடியுமா?

பின் புறம் கிளிப் போட்டு அடக்கி வைக்கப்பட்ட அடர் கூந்தல். , அழகான பிறை நெற்றி, பளிச்சிடும் பெரிய கண்கள், செதுக்கினாற் போல உதடுகள், எழிலான மெல்லிய மேனி, கொடியிடை . . .. இத்தனை மாதங்கள் . . .கிட்டத்தட்ட ஓர் ஆண்டு கழிந்த பிறகும், அன்று பார்த்த அந்தத் தோற்றம், எவ்வளவு தெளிவாக மனதில் வருகிறது?!

ஆனால், என்றேனும் அந்த உருவை மறந்தால் அல்லவா, நினைவென்று தனியாக வருவதற்கு? மறக்க விரும்பிய காலத்திலேயே முடியாதது., பிறகு ஏங்கி மறுகிய காலத்திலா மறந்திருக்கும்?

இன்றைக்கும், அன்று கண்ட அந்த அழகில் எந்தக் குறைவும் இல்லை! உடல் சற்று மெலிந்து தெரிந்தாலும், அதுவும் அழகாகத்தான், கண்ணைப் பறிப்பதாகத்தான் இருந்தது!

பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் போல ஆவலைத் தூண்டுவதாக. . . அன்று போலவே!

“அய்யர் சார், உதிர் பூ இவ்வளவு போதுமா? இன்னொரு தட்டிலும் உதிர்த்துக் கொண்டு வந்து வைக்கட்டுமா?” என்று, குயில் கூவியது போல அவள் கேட்ட பிறகுதானே, அன்று அவனுக்குச் சுயநினைவு ஓரளவேனும் திரும்பியதே!

குரலும் இவ்வளவு இனிமையாக இருக்கிறதே என்று பிரமிப்புடன் சசாங்கன் நின்று பார்க்கையிலேயே, “போதும்மா. உங்களுக்கெல்லாம் தலையில் வைப்பதற்கு வேண்டிய . . . தலையிலே பின்னலையே காணோமே, பூ வைப்பீர்கள்தானே? வைப்பீர்கள் என்றால், வேண்டிய பூவை எடுத்துக்கொண்டு, மீதியை வீணாக்காமல், இந்த இரண்டு விளக்குகளுக்கும், தண்டிலே சுற்றி விடும்மா. அல்லது . . .” என்று திருமணம் நடத்த வந்த சாஸ்திரிகள் கூற, அவள் ரோஷத்துடன் குறுக்கிட்டாள்.

“அய்யர் சார், வாழைநாரும், ரிப்பனும் கட்டிய பின்னல் இருந்தால்தான் பூ வைக்க முடியும் என்பதெல்லாம், அந்தக்காலம்! ஒரு ஹேர்ப்பின்னைக் கொண்டு, பத்து சென்டிமீட்டர் கூந்தலிலே கூட, நாங்கள் அழகாகப் பூவை வைத்துக் கொள்வோமாக்கும்! இவ்வளவு பூவைக் கூட, அழகாகச் சூட்டிக் கொள்வோம்! பார்க்கிறீர்களா?” என்று சாஸ்திரிகளுக்குச் சவால் விட்டாள், அந்த அழகி.

சாஸ்திரிகள் சண்டைப் பிரியர் அல்ல போலும்! “அதற்கென்னம்மா?

பெண்கள் தலையில் பூ இருந்தால், பூவுக்குமே, அது தனி அழகுதானே? வைத்துக்கொண்டு வாருங்கள். வந்து, மாலைகளை ஒரு தட்டிலே கசங்காமல் எடுத்து வையுங்கள்! அப்புறமாக, நான் கொண்டு வந்த பூஜைப் பொருட்களை எடுத்து வாருங்கள் . . .” என்று, செய்ய வேண்டியவற்றை வரிசையாகச் சொன்னார்.

“இதோ அய்யர், சார்!” என்று அவருக்கு, அவள் வாக்களித்த போது மின்னலாய் ஒரு பார்வை அவனைத் தீண்டியதோ என்று சசாங்கனுக்கு ஒரு சந்தேகம்! ஆனால், பின்னர் அது தொடராது போகவும், அந்தப் பார்வை அவனது ஆசையில் விளைந்த கற்பனை மட்டுமேதான் என்று எண்ணிக் கொண்டான்.

ஆனால், அது கற்பனை அல்ல , அவள், அவனைப் பார்க்கத்தான் செய்தாள் , ஆனால் உடனேயே கண்களைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் என்று, பின்னொரு நாளில் அறிந்தபோது, அவளது மனக் கட்டுப்பாடு, அன்றே அவனை வியக்க வைத்தது!

அதுவே, இப்போது அவனுக்கு அச்சத்தையும் அளித்தது!

அதேபோல மனதைக் கட்டுப்படுத்தி, அவனை அடியோடு ஒதுக்கி விடுவாளோ?

# அத்தியாயம் - 3

மேலும் படுத்திருக்க முடியாமல் எழுந்து, குறுக்கும் நெடுக்குமாக அந்த அறைக்குள்ளேயே சற்று நேரம் நடந்து பார்த்தான் சசாங்கன்.

உடல் அலுத்து, அதனால் தூக்கம் வரக் கூடுமோ என்ற ஆசை!

ஆனால், கண்ணில் உறக்கம் சிறிதும் பரவுவதாக இல்லை என்று உணர்ந்ததும், படுக்கையிலேயே அமர்ந்து, பழைய கதையைப் புரட்டலானான் அவன்!

ஆனால், அந்த நினைவுகளை, அவன் ஒன்றும், தேடிப் பிடித்து எண்ணிப் பார்க்கத் தேவை இருக்கவே இல்லை! அவை தானாக மலர்ந்து விரிந்து மணம் பரப்பின!

அவள் . .சுசரிதாவிடம் எப்போதேனும், ஏதேனும் இளக்கம் தென்பட்டதா?

யோசிக்கும் பாவனையில், மீண்டும் பழைய கதையை உருப் போட்டது, அவனது மனது!

அன்று முதல் பார்வையில் சசாங்கன் எண்ணியது போல, அவள் பெண்ணுடைய தோழியே! கல்யாணப் பெண் சம்யுக்தாவோடு, அதே வேலை பார்க்கும் மகளிர் இல்லத்தில் வசிக்கிற பெண்களுள் ஒருத்தி! நெருங்கிய தோழியும் கூட!

தோழி, வசுந்தரனோடு அவளது காதல் கதை, பின்னர் வந்த பிரச்சினைகள் என்று, அனைத்தையும், பின்னர், அவர்கள் இருவருமாக நெருங்கிப் பழகிய காலத்தில், சுசரிதா, சசாங்கனிடம் சொல்லியிருக்கிறாள்.

சசாங்கனும், வசுந்தரனுமே கூட நண்பர்களே என்பதால், சம்யுக்தா வசுந்தரன் ஜோடி பற்றிப் பேசுவதில், இவர்கள் இருவருக்குமே தயக்கம் வந்தது இல்லை.

சுசரிதாவும், சம்யுக்தாவும் சிறு வயதில் ஒன்றாகப் படித்தவர்களாம். இப்போது வேலை பார்க்கும் பெண்கள் விடுதியில் ஒன்றாகத் தங்க நேரவும், சாதாரணப் பழக்கம், இப்போது நெருக்கமான நட்பாக மாறிவிட்டது!

சம்யுக்தாவும் வேலை நிமித்தமாகவே பங்களூரு வந்திருந்தாள். இந்த விடுதியில் தங்குவது வரை, அவளுடைய பெற்றோர் அவளோடு கூடவே வந்திருந்து, ஏற்பாடு செய்துவிட்டுத்தான் போனார்கள்.

வீட்டு நினைவில் தனிமையில் வாடியிருந்த சம்யுக்தாவுக்கு, விடுதியில்

சுசரிதா நல்ல துணையாகிப் போனாள்.

வெளியே வசுந்தரன்!

முதலில் வேலை நிமித்தமாகவே, வசுவை . . வசுந்தரனைப் பார்த்ததையும், கண்டதும் காதல் கொண்டுவிட்டதையும், பற்றிக் கதை கதையாக, சுசரிதாவிடம் சொல்லுவாள்.

பங்களூரின் சுற்றுலாத் தலங்கள் அத்தனையிலும் இருவருமாகச் சென்று கால் பதித்தார்கள். மைசூர் அரண்மனையில் கை கோத்து நின்றது, பிருந்தாவன் கார்டனில் வைத்து, வசுந்தரன் திருமணம் புரியக் கேட்டது, எல்லாமே பற்றி அவள் கூறக் கூற, சுசரிதா விழி விரியக் கேட்டிருப்பாள்.

கேட்டுவிட்டு, “உன் வீட்டில் . . . உன் பெற்றோர் இதற்கு ஒத்துக் கொள்வார்களா, சம்யூ?” என்று ஆச்சரியமாக வினவியிருக்கிறாள்.

ஏனெனில், சுசரிதாவுடைய பெற்றோரின் வளர்ப்பு முறையே வேறாயிற்றே!

ஆனால், சம்யுக்தாவுக்குப் பெற்றோர் சம்மதம் பற்றிச் சர்வ நிச்சயம்.

“எப்படியும் திருமணம் என்று ஒன்றைச் செய்தாக வேண்டும்! அதற்கு இவ்வளவு ஆகும்., அவ்வளவு வேண்டும் என்று, நிறைய நியாயமான சந்தோஷச் செலவுகளைக் கூடச் செய்யாமல் சேர்க்கிறார்கள். இப்போது, எந்தச் செலவும் இல்லாமல், நல்ல மாப்பிள்ளை கிடைத்தால், அவர்களுக்குக் கசக்குமா, என்ன?” என்று உறுதியாகக் கூறினாள், அவள்.

“ஆனால், அவர்? வசுந்தரன் வீட்டில் எப்படி?” என்று, சுசிக்கு அப்போதும் கலக்கமே!

ஆனால், காதலில் மூழ்கியிருந்த ஜோடிக்கோ, அதில் சற்றும் சந்தேகமே இருக்கவில்லை!

“மகனிடம் மிகுந்த பிரியமாம். சுந்தர் வார்த்தைக்கு, அவர்கள் வீட்டில் மறு வார்த்தையே கிடையாதாம்! குடும்பத்தில் மற்ற யாரும் படித்தவர்கள் இல்லை என்பதால், சுந்தருக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற எண்ணம்! அதனால், அவரது முடிவை எல்லோருமே, அரசுச் சட்டம்போல, அப்படியே ஏற்றுக் கொள்வார்கள் என்கிறார்! அதிலும், நானும் படித்து வேலை பார்க்கிற பெண் என்பதால், அவர்கள் வீட்டு ராஜாவுக்கு ஏற்ற ராணி என்று, என்னையும் மதிப்பும் மரியாதையுமாக ஏற்றுக் கொள்வார்களாம் . “ என்று சம்யுக்தா சொன்னதையும்

ஆச்சரியத்துடனேயே கேட்டுக்கொண்ட போதும், ஏனோ அதை, சுசரிதாவால் முழுமையாக ஒத்துக்கொள்ள முடியவில்லை!

வெள்ளைத் துணியில் சிறு கறையும் பளிச்சென்று பெரிதாகத் தோன்றும் , அதனால் பெண்கள் அடுத்த இனத்தாரோடு எச்சரிக்கையோடு பழகவேண்டும் என்று சொல்லியே அவளுடைய பெற்றோர், அவளை வளர்த்திருந்ததால், தோழியின் பேச்சில் அவளுக்கு நம்பிக்கை வர மறுத்தது!

தன்னாலானது என்று அவள் எச்சரித்ததை, சம்யுக்தா காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை!

காதல் வானில் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்த இருவரும் தரைக்கு இறங்க வேண்டிய நேரமும் வந்தது.

விஷயத்தை அறிந்தபோது, இருவருடைய குடும்பத்தினருமே, இந்தக் காதலை ஆவேசத்துடன் எதிர்த்தனர்!

அது மட்டுமல்ல! தாயாருக்கு உடம்பு மிகவும் சரியில்லை என்று காரணம் காட்டி, உடனே வீட்டுக்கு வருமாறு, இருவருக்குமே “சம்மன்” வந்தது!

ஒரு காலத்தில், இதை நம்பி, பிள்ளைகள் விழுந்தடித்துக்கொண்டு, வீட்டை நோக்கி ஓடியிருக்கலாம். ஆனால், விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட இந்தக் காலத்தில், இருவருமே செல்லைப் பயன்படுத்தி, ஊரிலே நம்பத் தகுந்த மற்றவர்களிடம், வீட்டு நிலைமை பற்றி விசாரித்தார்கள்.

வீட்டில் எல்லோரும் நல்ல சுகமே என்பதோடு, இரு வீடுகளிலும், கல்யாண ஏற்பாடு தீவிரமாக நடப்பதும் தெரிய வந்தது!

ஏதாவது காரணம் சொல்லி வீட்டுக்கு வரவழைத்துவிட்டால், அப்புறம், ஏதாவது சொல்லி, அவர்கள் விருப்பம்போலத் திருமணம் செய்து வைத்துவிடும் திட்டத்தில் இரு

வீட்டாரும் இருப்பது, வசுந்தரன், சம்யுக்தா இருவருக்குமே புரிந்து போயிற்று!

முள்ளை, முள்ளால் எடுப்பது போல, இவர்களும் பதிலுக்குத் திட்டம் போட்டார்கள்.

திருமணத்தையே முடித்துவிட்டால், அப்புறம், பெற்றவர்களே ஆனாலும், அவர்களால் என்ன செய்ய முடியும்?

அவசர அவசரமாக, வெளியே தெரியாமல், திருமணத்துக்கு ஏற்பாடு செய்தார்கள்.

இளம் ரத்தம் பாயும் தோழர், தோழியர் அவர்களால் ஆன உதவியைச் செய்தார்கள்!

ஓர் அலுவலகத்தையே பொறுப்பெடுக்கப் போகிறான், தனக்கு நல்லது எது என்று அவனுக்குத் தெரியாதா என்பது, அவர்களுக்கு!

அதே போல, வெளியூரில் வந்து, தங்கி, வேலை பார்த்துச் சம்பாதிக்கிறவள். யாரை மணப்பது என்று முடிவெடுக்க அவளுக்கு மேல், யாருக்கு உரிமை இருக்க முடியும் என்று, சம்யுக்தையுடைய தோழியர் கேட்டார்கள்!

உடனேயே திருமணத்தை நடத்தி விட வேண்டியதுதான் பெண்ணும் பிள்ளையும் முடிவு செய்துவிட, இரு சாராரின் நட்பினரும் உதவி செய்ய, இன்னும் சிறிது நேரத்தில் திருமணம் என்கிற நிலைவரை, வந்தாயிற்று!

திருமணத்துக்கு நாலு நாட்களுக்கு முன்புதான், வசுந்தரன், சசாங்கனைத் தேடி வந்ததே!

நண்பன் என்றாலும், விவரத்தையெல்லாம் அவன் சொன்னதும் அப்போதுதான்.

சசாங்கனுக்கு மிகுந்த, மிதமிஞ்சிய வியப்பு!

வியப்பு, அவர்களது காதலில் இல்லை. வசுந்தரன், சம்யுக்தா காதலைப் பல தினங்களாகவே, அவனும் சிறு முறுவலுடன் பார்த்துக்கொண்டு இருப்பவன்தான்.

ஆனால், திருமணத்தை முடிப்பதற்கான இந்த அவசரம், ரகசியம்தான் அவனுக்குப் புரியவில்லை. காரணம் என்று நண்பன் சொன்னதை, முழுதாக நம்பவும் முடியவில்லை.

பிறந்ததில் இருந்து,  பெற்றோரின் பாசத்திலேயே முக்குளித்திருந்த அவனுக்கு[, மக்களின் மகிழ்ச்சிக்குத் தாய், தந்தையர் முட்டுக் கட்டை போடக் கூடும் என்பதே அதிசயமாக இருந்தது!

அதுவும், காதல் திருமணங்கள் பெருகிவிட்ட இந்தக் காலத்திலா?

வசுந்தரனுடைய தந்தை, அதிகம் படிக்காதவர்தான். அண்ணனும் அப்படியே! ஆனால், உலகம் தெரியாதவர்கள் அல்ல. முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் கடை வைத்து வியாபாரம் செய்கிறவர்களுக்கு, மக்களின் மனப்போக்கும் கட்டாயம் தெரிந்துதானே இருக்கும்?

“அவர்களுக்கும், உன் மகிழ்ச்சிதானேப்பா, முக்கியம்? எடுத்துச்

சொல்லிச் சம்மதம் வாங்கப் பாரேன், வசு? ஒரு நல்ல காரியத்தை அவர்களை எதிர்த்துக்கொண்டு செய்வானேன்? “ என்று நண்பனிடம் சொல்லிப் பார்த்தான்.

வசுந்தர் அவனுக்கு வெறும் நண்பன் மட்டுமல்ல. நிறுவனத்தின் பங்களூரு கிளையைத் தொடங்கி, அதை ஒரு நிலைக்குக் கொண்டு வந்ததும், அவன் பொறுப்பில்தான், விட்டுப் போவதாகவும் ஏற்பாடு. அந்த அளவுக்கு, நண்பனின் கெட்டிக்காரத்தனத்தில் அவனுக்கு நம்பிக்கையும் இருந்தது!

ஆனாலும், பெற்றோரை ஒதுக்கிவிட்டுச் செய்யும், இந்தத் திருமணத்தில், அவனுக்கு முழு உடன்பாடு உண்டாகவில்லை. அவசரப் படுகிறானோ என்ற ஐயம்! வாழ்வு, தொழில் இரண்டுக்குமே, நிதானம் மிகவும் அவசியம் ஆயிற்றே!

“என் சந்தோஷம்தான் அப்பா, அம்மாவுக்கும், ஏன், என் அண்ணனுக்குமே மிக முக்கியம் என்று எனக்குத் தெரியும், சசி! ஆனால், என் மகிழ்ச்சி எங்கே இருக்கிறது என்று, அவர்களுக்குப் புரியவில்லை! அவர்களுக்குப் புரியாததை, எனக்குத்தான் தெரியவில்லை என்று நினைக்கிறார்கள். நாலுநாள் பக்கத்தில் இருந்து பார்த்ததில் அவளிடம் மயங்கிவிட்டேன் என்று நினைக்கிறார்கள். கூடவே, சம்யூ அலுக்கி, குலுக்கி என்னை மயக்கிவிட்டாள் என்று . . . அவளைப் பற்றி ரொம்ப அசிங்கமாக வேறு பேசுகிறார்கள்!

“நான் என்ன, அந்த அளவு ஏமாறுகிறவனா? இப்போதும், அம்மாவுக்கு மிகவும் உடம்பு சரியில்லை., உயிருக்கே ஆபத்து., உடனே வா என்று அவசரமாகக் கூப்பிடுகிறார்கள். கடைசி நேரத்து முகமுழிக்காகவாம். இவர்கள் எண்ணுகிற மாதிரி ஏமாளியாக நான் இருந்திருந்தால், விழுந்தடித்துக்கொண்டு உடனே ஊருக்குக் கிளம்பிப் போயிருப்பேன். அங்கேபோனதும், உடனே ஏதோ ஒரு பெண் கழுத்தில் தாலியைக் கட்டாவிட்டால், தூக்கில் தொங்கிவிடுவேன் என்கிற மாடல் மிரட்டல் நடக்கும்! அவர்களுக்காக மனம் பிடிக்காத ஒருத்தியை மணந்துகொண்டு வாழ்க்கை முழுவதும் அவதிப் பட்டிருப்பேன். பாவம், அந்தப் பெண்ணுக்கும் கஷ்டம்தானே? புத்திசாலித்தனம் இருந்ததால்தானே, தப்ப முடிந்தது?”

லேசாகப் புருவம் உயர்த்திக் கேள்வியும் வியப்புமாக சசாங்கன் நோக்கவும், “ஆமாம்ப்பா. நம் கோகுல் இல்லை, நம்மோடு கிரிக்கெட் விளையாட வருவானே, அவனைக் கூப்பிட்டு, என் பெயர் சொல்லாமல், எங்கள் வீட்டுப் பக்கம் போய், அம்மாவைப் பார்த்துவிட்டு வரச்

சொன்னேன். அம்மா தரும் கெட்டி மோர் அவனுக்குப் பிடிக்கும். வழக்கம் போல மோரைக் கொடுத்துக் குசலம் விசாரித்தார்களாம். வீட்டில் கல்யாண ஏற்பாதெல்லாம் தடபுடலாக இருக்கிறதாம். "நீ சொல்லவே இல்லையே" என்று கேட்கிறான். அதன் பிறகுதான், நாங்கள் இந்த முடிவுக்கு வந்தோம்! " என்றான் வசுந்தரன்.

"உன் ஆள் வீட்டில்? அங்கேயுமா கூடாது என்கிறார்கள்! படித்தவர்கள் என்றாயே! "

"படித்து என்ன பயன்? அப்பா, அம்மா என்று ஆனபின், அடிப்படைக் கருத்து, கிட்டத்தட்ட எழுத்துப் பிசகாமல், இதே கதைதான்! அதே "அம்மா சென்டிமென்ட்"! அதே முகமுழி! கொஞ்சம் மாற்றிக் கூடவா, சிந்திக்கக் கூடாது?"

வசுந்தரனின் எரிச்சலான குரலில், சசாங்கனுக்குச் சிரிப்பு வந்தது! கூடவே, சந்தோஷமாகவும் இருந்தது!

"நண்பன் என்பதற்காக, பங்களூர்க் கிளைக்கு அந்த வசுந்தரனைத் தலைமை நிர்வாகி ஆக்குகிறாயா என்று சற்று நிதானமாய் யோசித்துச் செய்." என்று, தந்தை எச்சரித்து உண்டு.

ஆனால், வசு கெட்டிக்காரன், சட்டென ஏமாற மாட்டான் என்று தெளிவாகக் காட்டிவிட்டான் அல்லவா?

கூடவே, ஓர் எதிர்ப்பில் துவண்டு போகாமல், அதிரடி வேலை செய்து, தன் எண்ணத்தை நிறைவேற்றுகிறான்!

முறுவலித்து, "ஏதேனும் உதவி வேண்டுமானால் சொல்லு., செய்கிறேன்." என்று தன் ஒப்புதலைத் தெரிவித்தான் சசாங்கன்.

முகம் மலர, அவன் கையைப் பற்றி, "நீ வந்து கலந்துகொண்டால் போதும்! மற்றதெல்லாம், மற்ற நண்பர்கள், அவளுடைய சினேகிதிகள் எல்லோருமாகப் பார்த்துக் கொள்வார்கள்." என்றுவிட்டுப் போனான் வசுந்தரன்.

வசுந்தரனுக்குப் போலவே, அந்தத் தோழமைக் கும்பலில் நாலு பேருக்கு சசாங்கன் முதலாளி. கலந்து, ஒன்றாய் நின்று வேலை செய்வது, சற்றே நிரடக் கூடும் என்று நண்பன் நினைப்பது புரிந்தது. அதுவும் சரிதான்.

வசுவே, மற்றவர் முன்னிலையில், சசாங்கனுக்கு மரியாதைப் பன்மை கொடுத்துதான் பேசுவான். எனவே, அவர்கள் எல்லோரும் ஒரே மாதிரி சேர்ந்து கலகலக்கும்போது, அவன் மட்டும் கொம்பு முளைத்தவனாகத் தோன்றிவிடலாம்!

நண்பனின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து, கிட்டத்தட்டத் திருமண நேரம் நெருங்குகையில்தான், சசாங்கன் அங்கே சென்றான்.

சென்று பார்த்தபோதுதான், வேலை மும்முரமாகத்தான் செய்திருக்கிறார்கள் என்பது தெரிந்தது! வாழையும், நாதஸ்வரமும் கொஞ்சம் அதிகப்படி! மற்றபடி, சாஸ்திரிகள் வரை ஏற்பாடு செய்திருந்தார்கள்!

பதிவுத் திருமணத்துக்குக் கால அவகாசம் போதாது என்று, முறைப்படியாகத் திருமணத்தை நடத்துவதாக, வசுந்தரன் சொல்லியிருந்தான்.

இதைப் பின்னர் எளிதாகப் பதிவு பண்ணி விடலாம்! பண்ணி விடுவதாகவும் இருக்கிறார்கள்.

சசாங்கன் இன்னான் என்று பலருக்குத் தெரியும் என்பதால், அவனைக் கண்டதும், உற்சாகக் கூச்சல் சற்று அடங்கிப் போயிற்று.

ஆனால், உதிரிப் பூத் தட்டை எடுத்து வைத்துக்கொண்டு, “என்ன சாஸ்திரிகளே, எனக்கும் ஏதாவது வேலை கொடுங்கள். ஆனால் ஒன்று, இந்தப் பூவை மாலையாகக் கட்டி எடுத்து வா., கோலம் போடு என்று அது போல உருப்படியான வேலைகள் எதையும் சொல்லிவிடாதீர்கள்! நமக்கெல்லாம், உதிர்க்கத் தெரியுமே தவிர, கட்டுவது போன்ற ஆக்க வேலைகள் தெரியாது! ஆதி மனிதன் வாரிசு! பிய்த்துப் போடத்தான் தெரியும்! “ என்று வெண்பற்கள் தெரிய அவன் சிரிக்கவும், மற்றவர்களும் அதில் கலநது கொண்டனர்.

அப்புறமென்ன? பனி உருகிப் போயிற்று!

எல்லாப் பனியும் உருகிவிட்டபோதும், ஒரு ஜோடிக் கண்கள் மட்டும் அவனை நிமிர்நது பார்ப்பதில்லை என்று, பிடிவாதமாகத் தரையிலேயே பார்வையைப் பதித்து வைத்திருந்தன!

“பாலிஷ் பண்ணாத தரையைக்கூடச் சிலபேர்  என்னமாய், உற்று, உற்றுப் பார்க்கிறார்கள் பார்! கிராமத்தில், மாட்டுச் சாணி மெழுகிய தரைக்கு, இது பிரமிப்பாக இருக்கிறது போல!” என்று சின்னக் குரலில், அவளுக்குக் கேட்கும் விதமாகக்  கிண்டலடித்தான், சசாங்கன்.

கண்கள் பளிச்சிட, “பசுவின் சாணியில், கிருமிகளை அழிக்கும் சக்தி இருக்கிறது என்று, கண்டு பிடித்திருக்கிறார்களாம்! இதில் ஏதேனும் இருக்குமா என்ற ஆராய்ச்சிதான்!” என்று சட்டெனப் பதில் சொல்லிவிட்டு, உடனே நாக்கைக் கடித்தவள், அதன் பிறகு சற்று நேரம் காணாமலே போய்விட்டாள்.

ஆக, அவள் ஒன்றும் ஒரேயடியாக உம்மணாம் மூஞ்சியில்லை! நகைச்சுவை உணர்வும் இருக்கிறது என்று எண்ணியவனுக்கு உற்சாகமாக இருந்தது!

அவனுடைய குடும்பத்தில் எல்லோருமே வேடிக்கைப் பேச்சில் பிரியம் உள்ளவர்கள். அவனுடைய அன்னையே, "கடைக்குப் போகலாமா?" என்று சும்மாக் கேட்க மாட்டாள். "வயதாகி விட்டதா? இந்தப் பர்சைத் தூக்க முடியவில்லையப்பா. அதனால், அதை இன்றைக்குக் கொஞ்சம் கனமற்றதாக்கிவிட்டு வரப் போகிறேன்!" என்றுதான் கூறுவாள்.

அப்பாவும், "ரொம்ப ஊதிவிடாதேம்மா. அப்புறம் காருக்குள் ஏறுவது ரொம்பக் கஷ்டமாகிவிடும்." என்று சிரிப்பார்.

அதற்கு, மகனோ, மகளோ, "அதனால் என்னப்பா? செல்லப் போகிற சில நூறு கடைகளுக்குள் நடந்து நடந்தே மெலிந்துவிடப் போகிறார்கள்! அவ்வளவுதானே?" என்பார்கள்.

"காலே வலித்தாலும், கடைகளுக்குப் போய்க் காசைக் கரியாக்குவதை, அம்மா விடமாட்டாள் என்று, அருமைப் பிள்ளைகள் இருவரும் என்ன தெளிவாகப் புரிந்து வைத்திருக்கிறீர்கள்! என்ன கெட்டிக்காரத்தனம்!" என்று, கண்களை அகல விரித்து வியப்பார் தந்தை.

"காசைக் கரியாக்குகிறேனா? நீ வாங்கி வந்த பட்டு ஷர்ட் அருமை., சைனாவுக்குப் போன போது வாங்கிவந்தீர்களா என்று எல்லோரும் கேட்கிறார்கள் என்று பெருமைப் பட்டது, இங்கே யார் என்று தெரியவில்லையே!" என்பாள் தாயார்.

"வாங்கி வந்த பிறகு, வேறு என்ன செய்வதாம்?" என்று ரகசியம் பேசுகிற பாவனையில் தெளிவாக முணுமுணுத்துவிட்டு, ஒரு கட்டு நோட்டை எடுத்து வந்து கொடுப்பார் தந்தை. "பிடித்தது எதையும் பணம் குறைகிறது என்று வாங்காமல் வந்துவிடாதே!" என்று

ஒரு "ஷாப்பிங்" போவதற்கே இத்தனையும் நடக்கும் வீட்டில், இவள் நன்றாகப் பொருந்திப் போவாள் என்று தன் போக்கில் நினைத்துவிட்டுத் திகைத்தான் சசாங்கன்!

யார் என்றே தெரியாத ஒருத்தி! பொதுவான அறிமுகத்தில், சுசரிதா என்று, அவளது பெயர் மட்டுமே, அவளைப் பற்றி அவன் அறிந்தது!

முதல் தடவையாகப் பார்க்கிறான். முதல் பேச்சு . . அதுவும், நேரடி உரையாடல் என்றுகூடச் சொல்ல முடியாது.

இவள், தன் வீட்டுக்குப் பொருத்தம் என்று எப்படி எண்ணினான்?

எப்படி எண்ணினானோ? ஆனால், எண்ணிவிட்ட பிறகு, அதை அசட்டு எண்ணம் என்று, அவனால் உதற முடியவில்லை!

பெண்ணை உலக அதிசயமாகக் கருதும் விடலைப் பையனைப் போல, அவனது கண்கள், அவளையே தொடர்ந்தன.

ஆனால், அவள் அவனைத் திரும்பியும் பார்த்தாளில்லை!

அல்லது பார்த்தாளோ?

மற்றபடி, அவன் எங்கே இருந்தாலும், அவனுக்கு எதிர்க்கோடியில் அவள் இருப்பது, எப்படி சாத்தியம்? அவன் அருகே வருவதை அறியாமல், எப்படி விலகிப் போக முடியும்?

அவனுடன் பேசவும், பழகவும் பல பெண்கள் முயன்று அவன் பார்த்திருக்கிறான். நெருங்கிப் பழகவுமே!

ஆனால், இந்த விலகல் . . நிச்சயமாக அவள் விலகித்தான் போனாள்., அது உறுதி! இந்த விலகல், அவனுக்குப் புதிதாக இருந்ததோடு, மனதுள் உறுத்தலாகவும் உணர்ந்தான் சசாங்கன்!

அப்படியென்ன பொல்லாத தொற்று நோயாளி போல, அவனை ஒதுக்கி விலக்குகிறாள்?

அல்லது பொல்லாத வில்லனைப் போல!

அவன், ஒன்றும் அப்படி ஓநாய் ரகம் அல்லவே! இதை, எப்படி அவளுக்குத் தெரிவிப்பது?

விஷயத்தைத் தெளிவுபடுத்தும் காரணமாகவே, இரண்டு மூன்று முறை சுசரிதாவை நெருங்க முயற்சித்தான் அவன்.

ஆனால், அவள் அவனை நிமிர்ந்து பார்த்தால் அல்லவா? அவனது உடை, கால்களைப் பார்த்தே ஒதுங்கிப் போய்க் கொண்டிருந்தாள் அவள்.

கடைசியாக, இன்னும் கொஞ்சம் பொரி எடுத்து வருமாறு, சாஸ்திரிகள் சொல்ல,

திருமணத்துக்காக வாங்கிய பொருட்களை வைத்திருந்த அறைக்கு அவள் செல்வதைப் பார்த்துப் பின் தொடரப் போன சசியை, அவனது செல் இசையெழுப்பித் தடுத்தது!

எடுத்துப் பார்த்தால், அழைத்தது தந்தை.

இந்தச் சளபுள சத்தத்தில் நின்று பேச முடியாது என்று, பக்கவாட்டுத் தாழ்வாரத்துக்குச் சென்று, சுந்தரத்துடன் பேசலானான்.

தொழில் பற்றிய பேச்சு. தந்தையுடன் பேசி முடித்ததும், யாரோ வேகமாக வருவதை உணர்ந்து செல்லை மூடிப் பைக்குள் வைத்தவாறே, திரும்பிப் பார்த்தான் அவன்.

“மிஸ்டர் சசாங்கன்!” என்று அவசரமாக அழைத்தபடி வந்தவள் சுசரிதா!

ஓடி ஓடி ஒதுங்கிய அதே சுசரிதா!

அவனுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை! கண்களையுமே!

# அத்தியாயம் - 4

யாரோ வருவதை உணர்ந்து திரும்பிப் பார்த்த சசாங்கனுக்கு, அங்கே சுசரிதா வருவதைப் பார்த்ததே, ஆச்சரியம்தான். அவனை நிமிர்ந்து கூடப் பாராமல், விலகிச் சென்று  கொண்டிருந்தவள் ஆயிற்றே!

அங்கே தான் இருப்பது தெரியாமல் வருகிறாளோ என்று எண்ணமிட்டு முடிக்கு முன்பாக, அவனையே அவள் அழைக்கவும், அவன் வியப்புக் கடலிலேயே மூழ்கிவிட்டான் எனலாம்!

என்னையா கூப்பிட்டாய் என்று கேட்க வாயெடுத்துவிட்டுச் சட்டென சுதாரித்தான் அவன்.

சசாங்கன் என்பது உன் பெயர்தானா, இல்லையா, அந்தப் பெயர் சொல்லித்தானே அழைத்தேன் என்று கேட்டால் எத்தனை லிட்டர் அசடு வழிய வேண்டியிருக்கும்?

அவன் வீட்டுக்குப் பொருந்துகிறவள் என்றால், கேட்கவும் செய்வாள்!

தொண்டை கமறல் போல லேசாகச் செறுமி, சமாளித்துவிட்டு, “என்ன விஷயம்?” என்று இயல்புக் குரலில், சாதாரணமாக வினவினான் அவன்.

“அங்கே ஒரே தகராறு, சார்! மணமக்கள் இருவருடைய பெற்றோரும் வந்து, காச்சு மூச்சென்று ஒரேயடியாகக் கத்துகிறார்கள். நீங்கள் வந்து, ஏதாவது சொல்லி, அவர்கள் மேலே பேசவிடாமல், தடுத்து நிறுத்துங்கள்! வாருங்கள். சீக்கிரம்!” என்று அவனை அவசரமாக அழைத்தாள் அவள்.

அவளோடு நடந்தபடி, “இருவருடைய வீட்டாரும் எப்படி வந்தார்களாம்?” என்று வினவினான் அவன்.

“பிள்ளைகளான இவர்களுக்கு இருக்கும் புத்திசாலித்தனம், இவர்களைப் பெற்ற பெரியவர்களுக்கும் இருக்கும்தானே? கடைசியாகப் பார்த்துக்கொள்ள வா என்ற பிறகும் வரவில்லை என்றதும் சந்தேகம் வந்திருக்கிறது! தெரிந்தவர்கள் மூலமாய் விசாரித்திருப்பார்கள் போல. இந்தப் பகுதிக்கு வந்ததும் . . “

“வாழைமரமும், நாதஸ்வரமும் நேரே உள்ளே கூட்டி வந்துவிட்டனவாக்கும்!”

“சொன்னால் கேட்டால்தானே? அதெல்லாம் இல்லாவிட்டால், திருமணம் போலத் தோன்றவில்லையாம். ஆனால், இவைகள்

இல்லாவிட்டாலும், வெளியே நிற்கும் கார், பைக் வண்டிகளே போதும்! எப்படியோ வந்து சேர்ந்து விட்டார்கள்! இனி, அவர்களைச் சமாளித்தாக வேண்டும்!" என்று வேகமாகப் பேசினாள் சுசரிதா.

"ஆனால் . . . ." என்று ஒரு கணம் தயங்கினான் சசாங்கன்.

"என்ன சார்?"

"இல்லை . . . இரு வீட்டிலும் மூத்த தலைமுறை என்கிறாய்! அவர்கள் நான் சொல்லிக் கேட்பார்களா? அத்தோடு, எங்கள் குடும்ப விஷயம். நீ யார் குறுக்கிட என மாட்டார்களா? அதற்கு என்ன செய்வது?" என்றான் அவன்.

எதிராளி பேசப் பேச, அங்கேயே, அதற்குரிய பதிலைக் கண்டுகொள்ளலாம்தான். ஆனால், இவள் எந்த அளவு யோசிக்கிறாள் என் தெரிந்துகொள்ள, அவனுக்கு ஆசையாக இருந்தது.

"கட்டாயம் சொல்லத்தான் செய்வார்கள்!" என்று அவளும் ஒத்துக் கொண்டாள்.

ஆனால் உடனேயே, "பாருங்கள் சார். சம்யுக்தாவும், வசுந்தரனும் உண்மையாகவே காதலிக்கிறார்கள். ஆழமான அன்பு! எனவே, எப்படியும் திருமணம் செய்வார்கள்! பெற்றோர் தடுத்தாலும், அவர்கள் கண் முன்னாலேயே அவர்களை மீறியே செய்வார்கள். அப்படியொரு திட்டமும் இருக்கிறது என்று சம்யூ சொன்னாள்! காலம் என்பது, மறக்க, மன்னிக்க வைப்பது! எனவே, எப்படியும் கொஞ்ச காலம் கழித்து, இரு பெற்றோரும் கூட, இவர்களை ஏற்று சமாதானமாகிப் போய்விடத்தான் போகிறார்கள்! இப்போது கண்ட வார்த்தைகளைக் கொட்டி விட்டால், அப்படிச் சமாதானம் ஏற்படும் வாய்ப்பு, அடியோடு அடைபட்டே போய்விடலாம் இல்லையா? அதனால், அவர்களது பேச்சு முற்றிவிடுமுன், நீங்கள் போய், ஏதாவது பண்ணுங்கள், சார். நீங்களும் இளைய தலைமுறையே என்றாலும், எப்படியும் நீங்கள் "பாஸ்" நிலையில் இருப்பவர். வேலை பார்க்கும் எங்களை விட, எங்களுக்கே வேலை கொடுக்கும் மரியாதைக்குரிய தொழிலதிபர் என்கிறபோது, உங்கள் வார்த்தைக்கு அதிக மதிப்பு இருக்கும்!" என்று அவனிடம் வாதாடினாள் சுசரிதா.

மறுக்க முடியாத பேச்சு!

அவன் யோசனையாகப் பார்க்கும்போதே, "ப்ளீஸ், சார்!" என்று அவள் பெரிய விழிகளில் சிறு கெஞ்சலுடன் நோக்கவே, "காற்றிலேறி அவ்விண்ணையும் சாடுகிற " வேகத்தோடு கிளம்பினான் சசி!

அவள் சொன்னது சரியாக இருந்து, அவன் தன் குரலில், சற்று அதிகம் அழுத்தம் கொடுத்து, தான் யார் என்பதைச் சொல்லி, விஷயம் என்ன என்று விசாரிக்கவும், இரு பெரியவர்களும், தங்கள் கோப தாபங்களை அவனிடம் தெரியப் படுத்தலாயினர்!

மொத்தத்தில், இரு பெற்றவர்களுமே, ஒன்றும் அறியாக தன் குழந்தைப் பிள்ளையை, அடுத்தவர் வாரிசு மடக்கி, மயக்கித் திருமணம் செய்வதாகவே குற்றம் சாட்டினர்.

அவர்களுடைய மகனோ, மகளோ கை நிறையச் சம்பாதிக்கிற பணத்துக்காக!

இந்தப் பண விவகாரம் பற்றி எதுவும் பேச, சசாங்கன் விரும்பவில்லை!

ஏனெனில், இருவர் வருமானங்களும் சேர்கையில், அது ஒரு பெரிய தொகையாய், வரும் , நாளைக்குக் குடும்பம் பெருகும்போதும், குறையின்றி வாழ முடியும் என்று, இருவரும சேர்ந்து முடிவெடுத்ததாக அவனிடம், ஏற்கனவே வசு சொல்லியிருந்தான்.

எனவே, அந்தப் பெரியவர்கள் குற்றம்சாட்டியது போல, ஏதோ ஒரு வகையில், இருவரின் வருமானங்களும்கூட, இந்தத் திருமணத்திற்குக் காரணமே!

ஆனால், எதிர்கால சுகத்தைப் பற்றி மணமக்கள் அலசி ஆராய்ந்து முடிவு செய்வதில் தப்பென்ன?

சும்மாவேனும், ஓட்டைக் குடிசையில், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு,

“சந்தோஷ”மாக வாழ்வதில் சசாங்கனுக்குக் கொஞ்சமும் நம்பிக்கை கிடையாது! வயிற்றைப் பசி கிள்ளும்போது, காதலோ, களிப்போ, எங்கிருந்து வரும்?

எனவே, மணமக்கள் இருவரும் சேர்ந்து, எதிர்கால வரவு செலவுக் கணக்கையும் ஆராய்ந்து, மணந்துகொள்ள முடிவெடுத்தது குறித்து, அவனுக்கு மகிழ்ச்சியே!

அத்தோடு, வருமானத்துக்காகத்தான் திருமணம் என்று அந்தப் பெரியவர்கள்

சொன்னதும் தவறே! வசுந்தரும், சம்யுக்தாவும் உண்மையாகவே நேசிப்பவர்களும் கூட!

ஆனால், அதைச் சொன்னால், இந்தப் பெரியவர்கள் இப்போது இருக்கும் மனநிலையில் ஒப்ப மாட்டார்கள் என்று, சசாங்கனுக்குப்

புரிந்தது!

அது மட்டுமல்ல. சுசரிதா சொன்ன பிற்கால நல்லுறவைப் பற்றியும், அவர்களிடம் சொல்லிப் பயனிராது என்றே, அவனுக்குத் தோன்றியது!

திருமணத்தையே நிறுத்த வந்திருப்பவர்கள். அவர்களிடம் போய், சிலபல ஆண்டுகள் கழித்து ஏற்படக் கூடிய நல்லுறவைப் பற்றி எடுத்துச் சொல்லி, என்ன  பிரயோசனம்?

காது கொடுத்தே கேட்க மாட்டார்கள்!

எனவே, விஷயத்தை வேறு விதமாக அணுகினான், அவன்.

“பாருங்கள் சார்! இந்த இருவருமே, சட்டப்படியான உரிய வயதைத் தாண்டியவர்கள்! ஆளுக்கு இரண்டு தேர்தல்களில், குறைந்த பட்சமாக, ஒரு தேர்தலிலேனும் ஓட்டுப் போட்டவர்கள்! ஒரு நாட்டின் தலைவிதியையே மாற்றும் உரிமை உடைய இவர்களுக்குச் சொந்த வாழ்வை என்ன செய்வது, எப்படி அமைப்பது என்று தெரியாதா? தெரியும் என்று நம்புங்கள்! அதைவிடவும், இரண்டு பேருமே மேஜர்கள் என்பதால், நீங்கள் தகராறு செய்தால், அது உங்களுக்குத்தான் ஆபத்தாக முடியுமே தவிர, உங்களால், இந்தத் திருமணத்தை ஒருபோதும் தடுக்கவே முடியாது!  அப்படியிருக்க, ஏன் அனாவசியமாக மூக்கை நுழைத்துக் கேவலப் படவேண்டும்?” என்று கேட்டான் அவன்.

அவன் கேட்டதற்குக் கொஞ்சம் பலன் விபரீதமாக இருந்தது!

“பதவி பெரிதாக இருந்தாலும், சின்ன வயது என்பதற்கு ஏற்ப, பொறுப்பில்லாமல் பேசுகிறீர்கள்.” என்றார்கள் இரு சாராரும்.

“சார், எங்களுக்கும், எங்கள் மகன் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதுதான்! ஆனால், இந்த இரண்டு பேருக்கும் ஒத்தே போகாது, சார். இன்றைக்குத் தாய் தகப்பனை மறக்கடித்து விட்டதாக, அந்தப் பெண் கனவு கண்டு கொண்டிருக்கலாம். ஆனால், எங்கள் வசுப் பையனுக்கு, கொஞ்ச நாளைக்கு ஒரு தடவை, அவனுடைய தாயைப் பாராமல் இருக்கவே முடியாது! வந்து, தாயின் கையால் இரண்டு வாய் சாப்பிடாமல், எப்படி இருப்பான்? இதை யோசிக்க, உங்களுக்குத் தெரியவில்லையே!” என்று, ஓரளவு அமைதியாகவே சொன்ன வசுந்தரனுடைய தந்தை, அத்தோடு நிறுத்தியிருக்கலாம்.

அப்படியின்றி மேலும் தொடர்ந்து, “அது மட்டுமா? இரண்டு பேரின் ஜாதி வேறு, பழக்க பழக்கங்கள் அத்தனையும் வேறு வேறு! வண்டியில், ஒரு பக்கத்தில், குதிரையையும், மறுபக்கம் கழுதையையும் பூட்டினால், வண்டி எப்படி ஓடும்?” என்றும் ஆணித்தரமாகக் கேட்டார் .

முதலில் ஆத்திரமாக முறைத்தபோதும், உடனே முகம் ஏளனமாக மாற, "அதேதான் நான் கேட்பதும்! எங்கள் மகளைத் தரம் இறங்க விட எங்களுக்குப் பிடிக்கவில்லை! விட மாட்டோம். குதிரைக்குக் குதிரையைத்தான் ஜோடி சேர்க்க வேண்டும். என் மகள் முட்டாள்த்தனமாக, எதையோ பிடித்திருக்கிறாள்! " என்றார் சம்யுக்தாவுடைய தாயார், நக்கலாக.

ஏதோ கல்லூரியில் விரிவுரையாளர் அந்தப் பெண்மணி.

"ஏய், யாரைக் கழுதை என்கிறாய்?" என்று வசுந்தரன் தந்தை ஏக வசனத்தில் கத்த, "நீ யாரைக் கழுதை என்றாய்?" என்று அந்தப் பெண்மணியுடைய கணவர் முன்னே வர, ஏதேது, இவர்களது பேச்சை நிறுத்த முடியாதது மட்டுமின்றி, அடிதடியில் இறங்காமலும் தடுக்க முடியாது போலிருக்கிறதே என்று, சசாங்கனே ஒரு கணம் மலைத்துத்தான் போனான்.

இவர்களைச் சமாதானப்படுத்துவது, இயலுகிற காரியமா?

ஆனால், சுசரிதா பார்த்த பார்வை?

விழிகளைச் சுழற்றியபோது, அதே கவலையும் பயமுமான அதே பார்வையை மீண்டும் அவன் காண நேர்ந்தது.

தோழிக்கான கவலை! தோழியின் பிற்காலத்தை எண்ணிக் கவலை! பயம்! இதைப் போக்கியாக வேண்டாமா?

கூடவே, அந்தப் பக்கம், கலங்கி நின்ற அவனுடைய தோழனுக்காகவும்தான்!

"போதும், போதும்!" என்று கைகளை அழுத்தமாகத் தட்டி, அடிதடியில் இறங்கப் போனவர்களின் கவனத்தை ஈர்த்தான் அவன்! "மரியாதைக்குரிய பெரியவர்கள் என்று எனக்கு எண்ணம். தயவு பண்ணி, அதற்கு ஏற்றாற் போல நடந்துகொள்ளுங்கள், சார். முதலில், என் பேச்சைக் கொஞ்சம் கவனியுங்கள்! என் பேச்சைக் கூட விட்டுவிடலாம். குட்டி குட்டியாக நாடுகளை வைத்திருந்த அந்தக் காலத்திலேயே,"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று இன்றைய நமக்காக எழுதி வைத்திருக்கிறார்களே, அதையேனும் யோசித்துப் பார்க்கலாமில்லையா? அந்தக் காலத்திலேயே இப்படி எழுதினார் என்றால்,  உலகத்தையே "குளோபல் வில்லேஜ்" என்கிற இந்தக் காலத்தில், இந்த ஜாதிப் பேச்சு, உங்களுக்கே ஒரு மாதிரியில்லை?" என்று கேட்டான்.

"எங்களுக்கு நன்றாகத்தான் இருக்கிறது! இப்போது நீங்களெல்லோரும்

பிரமாதமாகப் பேசுவீர்கள், சார். ! ஆனால், நாளைக்குக் கலவன் ஜாதியோடு பிள்ளைகள் பிறக்குமே,. அதை என்ன செய்வதாம்?”

“பிள்ளை வரை யோசிக்கிறீர்கள்! இங்கே, இவ்வளவு ரசாபாசம் ஆன பிறகு, இவர்களுக்கு இன்னோர் இணை கிடைக்குமா? இருவரும் தனி மரங்களாக நிற்பதுதான், உங்கள் ஆசையா?” என்று கடுமையான குரலில் கேட்டான்.

ஒரு கணம் திருதிருவென விழித்தாலும், உடனேயே சமாளித்து, “தனி மரமாக நிற்கிற நிலைமை, எங்கள் பையனுக்கு வராது! பத்துப் பேர் க்யூவில் நிற்பார்கள்!” என்றது வசுந்தரின் சுற்றம்.

“பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்படி, எங்கள் வீட்டைப் பெரிய பெரிய குடும்பத்தினர் எல்லாம் மொய்ப்பதை, நீங்கள் நேரில் வந்து பார்க்க வேண்டும்!” என்றது, சம்யுக்தையுடைய உறவு!

“ஆயிரம் பேர்  ஒற்றைக் காலில் வரிசையில் நின்று தவம் கிடந்தாலும், இவர்கள் இருவரும், ஒருவரை ஒருவர்தான் மணப்பார்களே தவிர, வேறு யாரையும் நிமிர்ந்துகூடப் பார்க்க மாட்டார்கள்! இரண்டு பேரும் வாழ்க்கை முழுவதும் குடும்ப சுகமே இல்லாமல் துறவிகளாக வாழ வேண்டும் என்கிறீர்களா?” என்றெல்லாம் சசி சொன்னதை ஏற்காமல், இரு தரப்பாரும் சத்தத்தை உயர்த்தினார்கள்.

அவரவர் மக்களைப் பற்றிப் பெற்று வளர்த்த அவர்களுக்குத் தெரியுமாம்! பெற்றவர்கள் தேர்ந்தெடுத்து வைத்திருக்கும் இணையை மணந்து, சந்தோ . . ஷமாக வாழ்வார்களாம்.

கண்ட கண்ட சின்னப் பசங்கள் எல்லாம் உள்ளே வந்து விழுந்து, அவர்களுடைய மக்களின் வாழ்க்கையைக் கெடுக்க வேண்டாமாம்!

முதலில் அவனுக்குக் கொடுக்கப்பட்ட மரியாதை, காற்றில் இட்ட கற்பூரமாகக் காணாமல் போய்க் கொண்டிருந்தது!

கடைசித் துருப்பாக சசாங்கனும் குரலை உயர்த்தினான்.

திருமணத்தைப் பொறுப்பேற்று நடத்தக் கூடியிருந்த நண்பர்களில் சிலரை அழைத்து, “இவர்களிடம் சமாதானப் பேச்செல்லாம் சரிப்பட்டுவராதுப்பா! பேசாமல், போலீசுக்குப் போய் விடுவது மேல். இது, திருமணம் நடப்பதற்காக வாடகைக்கு எடுக்கப் பட்டிருக்கும் புது வீடு! இங்கே, இவர்களுக்கு இடையே சண்டை, தகராறு வேண்டாம். இரு வீட்டாருமே, அவரவர் பிள்ளையை அடுத்தவர்  மயக்கித் திருமணம் செய்ய முயற்சி செய்வதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். அதாவது, ஒரு குற்றம் பற்றிய புகார். குற்றம் என்றால், அதை உரியவர்கள்தான்

விசாரிக்க வேண்டும்!  நான் போலீசுக்கு ஃபோன் பண்ணப் போகிறேன். அவர்களிடம் உங்கள் குற்றச்சாட்டைச் சொல்லுங்கள். காவல் அதிகாரி என்ன முடிவை எடுக்கிறாரோ, அதன்படி எல்லோரும் நடந்து கொள்ளலாம்! இப்போது . . " என்று பைக்குள் இருந்து, தன் செல்லை வெளியே எடுத்தான்.

"என்ன போலீசைக் கூப்பிடவா?"

சில கணங்கள் அங்கே முழு அமைதி நிலவியது!

மணமக்கள் இருவருமே வயது வந்தவர்கள். ஓட்டுப் போட்டவர்கள். போலீஸ் வந்தால், திருமணத்தைத் தடை செய்ய வந்தவர்களுக்குத்தான் ஆபத்தாகிப் போகும்!

அரசு வேலை பார்க்கும் பெண்ணுடைய பெற்றோருக்கு, இது போலீஸ் பிரச்சினை ஆவது நல்லதல்ல! அதுவும், தவறு அவர்களது ஆவது!

அதேபோல, ஓரளவு பெரிய அளவில் வியாபாரம் நடத்தும் பையன் தந்தைக்கும், அவருடைய மூத்த மகனுக்குமே, எந்தக் காரணத்தினாலும் போலீஸ் கடைக்குள் வந்து நிற்பது பிடிக்கவில்லை! பல்லாண்டு காலமாக நல்லவிதமாக வளர்த்து வைத்திருக்கும் கடைப் பெயர் கெட்டுவிடும் என்று அஞ்சினார்கள்.

அத்தோடு போலீஸ் வந்தால், அவர்கள் சட்டப்படிதான் நடப்பார்கள். மணமக்கள் இருவரும் வயது வந்தவர்கள் என்பதோடு, நல்ல வேலையிலும் இருப்பவர்கள்.

இப்போதுதான் பதினெட்டு தாண்டியபிறகு, அறியாப் பிள்ளைகளோ, உலகம் தெரியாதவர்களோ கிடையாதே. எனவே, சட்டப்படி, காவல் தறையினர் மண மக்களுக்கு ஆதரவாகத்தான் இருப்பார்கள். எத்தனை திரைப்படங்களில் பார்க்கவில்லை?

அவர்களே கூட இருந்து, இந்தத் திருமணத்தை நடத்தியும் வைப்பார்கள்!

"போலீசைக் காட்டி மிரட்டுகிறீர்களா?" என்று ஆத்திரமாகக் கேட்டபோதும், கேட்ட குரலே சற்று மெலிந்து விட்டிருந்தது!

மெல்ல,  இரு குடும்பங்களுமே ஜகா வாங்கின! சசாங்கன் எதிர்பார்த்ததும் இதுதானே?

"என்னவோ? பெரிய நிலையில் இருந்தாலும், வயதுக் கோளாறு உங்களுக்கும் இருக்கிறது! அனுபவஸ்தர்களாகச் சொல்லுகிறோம். இந்தக் கல்யாணம் ஒரு நாளும்  உருப்படப் போவதில்லை! சொல்வதைச் சொல்லிவிட்டோம். இன்னமும் பிடிவாதம் பிடித்தால்,

உங்கள் பொறுப்பில் செய்யுங்கள். இவர்களின் நல்லதற்கும், கெட்டதற்கும் நீங்கள்தான் பொறுப்பு! இதற்கு மேல், போலீஸ் கீலீஸ் என்று போய், அது வேறு கேவலப்பட வேண்டாம்.ஏதோ வந்ததற்கு, எப்படியோ நன்றாக இருக்கட்டும் என்று, அட்சதையைப் போட்டுவிட்டுப் போகிறோம்! ஆனால், அதைச் சமாதானமாக நினைத்து, வீட்டுப் பக்கம் யாரும் எட்டிக்கூடப் பார்க்க வேண்டாம். இனி, அவர்கள் யாரோ? நாங்கள் யாரோ?" என்பது, இரு சாராரின் பேச்சின் கருத்தாக முடிந்தது!

வேறு வழியில்லாமல் செய்ததுதான்.

ஆனால், சபித்துவிட்டுச் செல்லாமல், அரை மனதாகவேனும் பெரியவர்கள் ஆசீர்வதித்துவிட்டுப் போனது, எல்லோருக்கும் ஆறுதலை அளித்தது!

உறவு வெண்டாம் என்று வெட்டிவிட்டது வருத்தமே என்றாலும், அது எதிர்பார்க்கப் பட்டதே! எப்படியும், ஆசி கூறும் விதமாக, அட்சதையைப் போட்டுவிட்டதால், இனி இந்தத் திருமணத்தை இல்லை என்று சொல்ல முடியாது!

அந்த அளவில் மகிழ்ச்சியுற்று, மணமக்கள் சசாங்கனுக்கு நன்றி கூறினர்.

சசாங்கனின் விழிகள் அவசரமாக சுசரிதாவைத் தேட, கண்ணாலேயே "பிரமாதம்" என்று பாராட்டினாள் அவள்.

மெய்யாகவே, அந்த விண்ணைத் தொட்டுவிட்ட பூரிப்பு அவனுக்கு!

என்ன, ஒரு சின்னப் பிள்ளை மாதிரி, இந்தச் சின்னப் பெண்ணின் பாராட்டில் இவ்வளவு சந்தோஷப் படுகிறோம் என்று, சசிக்கே கொஞ்சம் வெட்கமாகக் கூட இருந்தது!

நிறுவனத்தின் இரண்டு கிளைகளை அடி முதல் தொடங்கி வளர்த்து வைத்திருக்கும் இளம் தொழிலதிபனின் அமர்த்தல், கம்பீரம் எல்லாமே காணாமல் போய்விடத் துள்ளிக் குதிக்கத் தோன்றியது அவனுக்கு!

எந்த வகையில் வரக் கூடுமோ என்று அஞ்சிக் கொண்டிருந்த பெரிய தடைகள் எல்லாம், எப்படியோ அகன்று போய்விட்ட மகிழ்ச்சியில், மணமக்களைக் கேலி செய்வதும், சிரிப்பும் விளையாட்டுமாகக் கல்யாணம் கோலாகலமாக நடந்தது!

எல்லோருமே பேசினார்கள்., சிரித்தார்கள்., பரிமாறினார்கள்., விருந்துண்டார்கள்!

இந்த நண்பர்கள் எல்லோருமாகச் சேர்ந்து, மணமக்களுக்கு ஒற்றைப்

படுக்கையறை "ஃப்ளாட்" ஒன்றை வாடகைக்கு எடுத்து, அதில் பாத்திரம் பண்டங்கள் கூட வாங்கி வைத்திருந்தனர்.

அங்கே போய், பால் காய்ச்சி, புதுத் தம்பதியின் குடித்தனத்தையும் எல்லோருமாகத் தொடங்கி வைத்தனர்.

புதுக் கணவனும் மனைவியும் சேர்ந்து திட்டமிட்டு, நட்பினருக்காகச் சில விளையாட்டுப் போட்டிகள் வைத்து, வென்றவர்கள் மட்டுமின்றி எல்லோருக்குமே பரிசுகள் கொடுத்தார்கள்.

சுற்றம் போலத் துணையிருந்து திருமணத்தை நடத்தி வைத்ததற்கான நன்றி  செலுத்தல் என்று புரிந்து, எல்லோருக்கும் கண்கள் பனித்தன!

ஆனந்தமாகப் பேசிக் கொண்டிருந்துவிட்டு, இருள் பரவத் தொடங்கியதும், மணமக்களைத் தனியே விட்டுவிட்டு, எல்லோருமாகக் கிளம்பினர்.

தற்செயலாகவோ, வேண்டும் என்றோ, அவரவர் பைக், ஸ்கூட்டர்களில், இருவர், மூவராகச் சேர்ந்து எல்லோரும் கிளம்பிவிட, சுசரிதா மட்டும் தனியே நின்றாள்.

அவளும் சசாங்கனும்.

அன்று முழுவதும், எல்லோருமே சேர்ந்தே கும்மாளமிட்டபோதும், மற்ற நேரங்களிலும், தன் பார்வை சுசரிதா பக்கம் அடிக்கடி போனதைக் கவனித்தே மற்றவர்கள் இப்படிச் செய்திருப்பார்களோ என்ற சந்தேகம் சசாங்கனுக்கு!

அவனுக்கு உள்ளூர மகிழ்ச்சிதான்.

அவனாக எந்தப் பெண்ணின் பின்னேயும், இதுவரை சுற்றியது கிடையாது! சொல்லப்போனால், அவனைச் சுற்ற முயன்றவர்களிடமிருந்து, சாமர்த்தியமாக விலகி, ஒதுங்கிப் போய்த்தான் அவனுக்குப் பழக்கம்!

ஆனால், இந்த சுசரிதாவைப் பார்க்க அவனுக்குப் பிடித்தது! அவளது குரலைக் கேட்கவும் பிடித்தது! அவள் இருக்கும் இடத்தில் இருக்கவும் ரொம்பவே பிடித்தது!

ஆனாலும், அவனாக அவளிடம் போய் வழிந்தானில்லை.

இப்போதும், அவனாகப் போய், சுசரிதாவை நான் கொண்டு விடுகிறேன் என்று நிற்கவில்லை. தானாக வந்த வாய்ப்பு! அதைச் செய்வதிலே சந்தோஷம் !

ஆனால், சுசரிதா என்ன சொல்லுவாளோ என்று சிறு யோசனையும்

அவனுக்கு இருந்தது!

ஏனெனில், எல்லோரையும் போலக் கலகலத்தபோதும், இரு வீட்டுப் பெரியவர்களையும் சமாளித்து அனுப்பியபோது கண்ணால் பாராட்டியது தவிர, அவள் விலகித்தான் போனாள் எனலாம்.

எப்படியும் அவளைத் தனியே விட்டுவிட்டுப் போவது, அநாகரீகம்!

இங்கிருந்து, அவளது பெண்கள் விடுதிக்கு அவளைக் கூட்டிச் செல்வது, ஒன்றும் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடிய விஷயமுமில்லை!

ஸ்கூட்டரில் சென்ற இரு தோழியருக்கக் கையாட்டி விடை கொடுத்துவிட்டுத் திரும்பியவளிடம் சென்று, "வருகிறீர்களா சுசரிதா, உங்களை விடுதியில் கொண்டு விட்டுவிட்டுப் போகிறேன்." என்று அழைத்தான்.

ஆனால், "வேண்டாம் சார். இங்கிருந்து கொஞ்ச தூரம் போனால், ஆட்டோ கிடைக்கும். நான் அதிலே போய்க் கொள்வேன். " என்றாள் அவள்.

சாதாரணமாகச் சொன்ன போதும், அது மறுப்புதான் இல்லையா?

மறுப்பு என்பதை மறைக்க, அவள் முயற்சிகூடச் செய்யவில்லை!

மட்டம் தட்டப்பட்டுவிட்ட உணர்வு அவனுக்கு.

"ஏன்?" என்று கேட்ட ஒற்றைச் சொல்லில் ஆத்திரம் கொப்பளித்தது!

# அத்தியாயம் - 5

பொதுவாக சசாங்கன் வலியப் போய், அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுகிறவன் அல்ல!

அதிலும், மூத்த தலைமுறையிடம் மதிப்பும் மரியாதையும் காட்டுகிறவன்!

அவனே போய், அதுவும் ஒன்றல்ல, இரண்டு ஜோடிப் பெரியவர்களிடம், சற்றுக் கடுமையாகவே பேசியிருக்கிறான்.

ஏன்?

இந்த சுசரிதா வந்து கேட்டதால்தானே?

அப்படியிருக்க, அவன் ஏதோ வில்லனைப் போலவும், அவனது காரில்  ஏறினால், அவளுக்கு என்னவோ ஆகிவிடும் போலக் காரில் ஏற மறுக்கிறாளே என்று அவனுக்கு ஆத்திரம் வந்தது!

அந்த ஆத்திரத்தைச் சற்றும் மறையாத குரலிலேயே, காரணம் கேட்டான் சசாங்கன்.

அவளது மறுப்பு அவனுக்குப் புரியாதது போலவே, அவனது சினமும் கேள்வியும் சுசரிதாவுக்குப் புரியாது போக, அவள் விழித்தாள்.

பிறகு, “ஏன் என்றால்? இங்கே பொதுவாக ஆட்டோவில் போய்வந்து எனக்குப் பழக்கம்தான். அதனால், அதிலேயே போய்விடுவேன் என்றேன்.” என்று பதிலுரைத்தாள்.

பெரிதாக அரும் பதவுரை சொல்ல வந்துவிட்டாள் என்று உள்ளூரக் கடுத்தபடி, “நான் அதைக் கேட்கவில்லை.!” என்றான் சசாங்கன். தொடர்ந்து, தன் கேள்விக்கான விளக்கத்தையும் சொன்னான். “ காரில் கொண்டு விடுகிறேன் எனும்போது, எதற்காக நடந்துபோய், ஆட்டோவைத் தேடிப் பிடித்து, அதற்கு வேறு ஏன் காசு செலவு செய்ய வேண்டும் என்று கேட்டேன்.” என்றான் தெளிவாக! “ஆட்டோ ரிக்ஷாக்காரர்களுக்குத் தர்மம் செய்வதாக, ஏதேனும் வேண்டுதலா?”

கண நேர அமைதியின் பின், “அனாவசியமாக அடுத்தவருக்கு ஏன் சிரமம் என்றுதான்.  . . .தயவு பண்ணிக் கார்தானே சுமக்கப் போகிறது எனறு சொல்ல வேண்டாம். ப்ளீஸ்.” என்றாள் அவள்.

“தயவுபண்ணி”, “ப்ளீஸ்” என்றெல்லாம் வார்த்தைகளைப் பயன்படுத்தியபோதும், அவளது குரலோ, முகமோ, அந்த

வார்த்தைகளுக்கு உரிய நயத்தைச் சற்றும் காட்டவில்லை!

சும்மா, இது இப்படித்தான் என்று எந்த வித உணர்ச்சியும் இல்லாமல் அறிக்கை வாசிப்பது போன்ற பாவனை!

அவளை நேராக நோக்கி, “ஏன்? ஓர் இரண்டு மூன்று கிலோமீட்டர் தூரம், பொதுச் சாலையில் செல்லுமுன், உன்னை என்ன பண்ணிவிடுவேன் என்று இப்படி என்னோடு வர மறுக்கிறாய்?” என்று, சற்றுச் சுள்ளென்றே கேட்டான் சசாங்கன்!

மீண்டும் புரியாமல் கேள்வியாய் நோக்கியவள், பெரிய விழிகளில் யோசனையோடு, அவனை ஒரு தரம் ஆழப் பார்த்தாள்.

பிறகு நிதானமாக, “நீங்கள் நினைத்தது போல, எந்த எண்ணமும் எனக்கில்லை. ஆனால், இப்படி வெளியூருக்கு வேலை பார்க்க என்று வரும்போது, என் பெயருக்குச் சிறு பழுதுகூட ஏற்பட்டு விடாமல், மிகுந்த கவனத்துடன் இருப்பேன் என்று, என் பெற்றோரிடம் வாக்களித்துவிட்டு, அதன் பிறகுதான் கிளம்பினேன். இந்த நேரத்தில், உங்கள் காரிலே போய் விடுதியில் இறங்குவது, அந்த வாக்குறுதிக்குச சற்றும் சரி வராது! அதனால், உங்கள் கார் எனக்கு வேண்டாம். தேவையுமில்லை. “ என்றவள் அவனைச் சுற்றிக்கொண்டு நடக்கத் தொடங்கினாள்.

அவள் சற்று தூரம் செல்லுமுன் ஒரு காலி ஆட்டோ அந்தப் பக்கமாக வர, அதை நிறுத்தி ஏறிக்கொண்டு போய்விட்டாள் சுசரிதா.

திகைத்து நின்றவனின் முகத்தில், தன்னையறியாமல் சிறு முறுவல் மலர்ந்தது!

ஆக, அவனிடம், அவளுக்கு எந்த வெறுப்பும் இல்லை! பெற்றோருக்குக் கொடுத்த வாக்கில் கவனமாக இருக்கிறாள்.

அவ்வளவே!

இன்னும் சொல்லப் போனால், வாக்குச் சுத்தம் உள்ளவளாக இருக்கிறாள் என்று, அவள் மீது நன் மதிப்புதான் உண்டாயிற்று!

நல்ல பெண். மிக மிக நல்ல பெண். அவளது வாக்கு சுத்தத்துக்கு நாமும் மரியாதை கொடுக்க வேண்டும், உடைக்க முயற்சிக்கக் கூடாது என்று எண்ணினான் சசாங்கன்.

அவளது நல்ல பெயருக்குப் பழுது ஏற்படாமல் காக்க வேண்டும் என்று எண்ணும்போதே, அவளை விட்டு அடியோடு ஒதுங்குவதும் முடியாது என்று அவனுக்குத் தெரிந்து போயிற்று!

வாழ்க்கை முழுதுக்கும் சுசரிதாதான் என்றும், ஓரிரு நாட்களிலேயே அவன் மனதில் கிட்டத்தட்ட நிச்சயப்பட்டுவிட்டது!

அதற்கு மேல் எப்படி ஒதுங்குவது?

ஆனால், வெளிப்படையாக அவள் தெரிவித்த, "பெற்றோருக்குக் கொடுத்த வாக்கு" அவனை வெகுவாக நிதானிக்க வைத்தது!

சும்மா அவளைச் சுற்றுவது, அவளிடம் எதிர்மறையான உணர்வுகளையே தூண்டி விடக் கூடும்! அவளது வாக்குறுதியைச் சசாங்கன் அலட்சியப்படுத்துவதாக அவள் எண்ணிவிடக் கூடாது!

ஓரிரு தினங்கள் அவளைத் தூர நின்றே கவனித்தான் அவன்.

மூன்றாம் நாள், சுசரிதா வேலை முடிந்து, களைப்புடன் விடுதிக்குத் திரும்பி வந்தபோது, பஸ் நிறுத்தத்துக்குச் சற்றுத் தூரத்தில், கையில் குளிரூட்டப்பட்ட இரு பழச்சாறு பாக்கெட்டுகளுடன் அவளை எதிர்கொண்டான் சசாங்கன் .

"ஹாய், ரொம்பக் களைத்துத் தெரிகிறாய். இங்கே பொது வீதியில் நின்று, இதைக் குடிப்பதில் ஒன்றும் தப்பில்லையே? சீல் உடைக்காத பாக்கெட் . நானும் அறிமுகம் ஆகாத அன்னியனில்லை! இந்தச் சாறு பிடிக்கும்தானே?" என்று புன்னகையோடு கேட்டான்.

ஓய்ந்து வந்தவளுக்கு, இன்னும் இரண்டு தெரு நடந்து சென்று, அங்கே முகம் கழுவிவிட்டு, சாப்பாட்டு அறைக்குப் போய், காஃபியோ, டீயோ கேட்டு, அதைத் தயாரித்து வரும்வரை காத்திருந்து குடிப்பது, இப்போது கொடும் சோதனையாகத் தோன்றியது!

இவன் ஒன்றும் யாரோ அல்ல. மரியாதைக்குரிய தொழிலதிபன்! அவளுடைய தோழியுடைய கணவனுக்கு நெருங்கிய நண்பனும் கூட!

அவள் யோசிக்கும்போதே, "உன்னோடு வேலை பார்க்கும் ஒருவரோடு பேசுவது, ஏதோ ஒரு குளிர்பானம் அருந்துவது போலத்தானே, சுசரிதா? அதைக் கூடப் பெயரைக் கெடுப்பதாகச் சொல்ல முடியுமா?" என்று கேட்டான் அவன்.

வேலை இடைவெளிகளின் போது, வெளியே போய், ஒரு சமோசாவோ, பர்கரோ உண்டு, காஃபி, கோக் போல அந்த நேரத் தேவைக்கு ஏதாவது பருகிவிட்டு வருவது உண்டுதான். கூட வருவோரில், ஆண் பெண் பேதம் பார்ப்பதும் கிடையாதுதான்.

அந்த இடத்தில், அப்படிப் பார்ப்பதுதான், குறையாகத் தோன்றும்!

அதற்கு மேல் தயக்கம் காட்டவில்லை அவள்.

ஸ்ட்ராவையும், பானப் பாக்கெட்டையும், ஒரு “நன்றி.”யுடன் வாங்கிப் பாதி குடித்த பிறகே அவளுக்கு ஒழுங்காகப் பேச்சு வந்தது எனலாம்!

“ரொம்பத் தாங்க்ஸ், சார். இன்றைக்குக் கொஞ்சம் வேலை அதிகம். பயங்கரக் களைப்போடு வந்தேன்! இப்போது, எவ்வளவோ நன்றாக இருக்கிறது!” என்றுவிட்டு, மீதி பானத்தையும் அருந்தலானாள் சுசரிதா.

“ஒரு வேலையாக இந்தப் பக்கம் வந்தேன். இங்கேதான் உங்கள் விடுதி என்று ஞாபகம். புது மணமக்கள் எப்படி இருக்கிறார்கள் என்று கேட்டுப் போகலாம் என்று வந்தேன்.” என்றான் அவன்.

தலை சரித்து நோக்கி, கண்களில் குறும்புபப் பளபளப்புடன், “அவர்கள் தேனிலவிலிருந்து, இன்னும் திரும்பி வரவில்லை என்பதாக, எனக்கு ஞாபகம்! உங்களுக்கு . . . . “ என்றாள் அவள், சிறு முறுவலுடன்.

உன் அலுவலகத்தில் பணி புரிகிறவன், தேனிலவிலிருந்து அவன் இன்னும் வராதது, உனக்குத் தெரியாதாக்கும் என்று மறைமுகமாகக் கிண்டலடிக்கிறாள்!

ரசித்து, “வராதது தெரியும். ஆனால், சுக லாபங்கள் பற்றித் தோழிகள் அரட்டை அடித்திருக்கக் கூடும் என்று எண்ணினேன் . . .” என்று சமாளித்தான் சசாங்கன்.

லேசாகச் சிவந்த கன்னங்களில் குழி விழ, “அரட்டைக்கெல்லாம் அவ்விடத்தில் அவகாசம் கிடைக்கவில்லை போலத் தெரிகிறது!” என்று அவள் கூற, அவளது அந்தக் குறும்பையும், அவன் ரசித்துச் சிரித்தான்.

சிரித்துவிட்டு, “பரவாயில்லை. இன்று போல என்றும் இப்படியே இருக்கட்டும்!” என்று ஆசீர்வதிப்பது போல, அவன் பாவனை செய்ய, இப்போது ரசனை அவளதாகிப் போனது.

அந்தச் சிரிப்பு முடிந்து, இன்னும் எதற்கு நிற்கிறான் என்ற யோசனை அவளுக்கு ஏற்படும் முன்னரே, “இந்தப் பக்கம் வந்தால் மீண்டும் சந்திக்கிறேன்!” என்று விடை பெற்றுக் கிளம்பினான் சசாங்கன்.

காரின் சிவப்பு விளக்கு, கண்ணுக்கு மறையும்வரை, அவள் அங்கிருந்து அகலவில்லை. அதன் பிறகும், பாழச்சாறு குடித்துக் களைப்பு அகன்றதாலோ, என்னவோ, விடுதிக்குத் திரும்பிச் செல்லுகையில், சுசரிதாவின் நடையிலே, சிறு துள்ளல் இருந்தது!

அடுத்து ஐந்து நாட்களில், சசாங்கன், சுசரிதாவை மறுபடியும் சந்தித்தான்.

அப்போது அவனிடம், பழச்சாறு பாக்கெட்டுடன், துண்டமிடப்பட்ட பீட்சாவும் இருந்தது.

அலுத்து வந்தவளுக்கு, அவை தேவாமிருதமாக இருந்தன.

“எப்படித்தான் விடுதி வரை சென்று, அங்கே தரப் போகிற, காரம் தவிர வேறு சுவையற்ற எதையோ, தொண்டையில் சிக்காமல் எப்படித்தான் உண்ணப் போகிறோமோ என்று கவலைப் பட்டுக்கொண்டே வந்தேன்! ரொம்ப ரொம்ப நன்றி, சார்!” என்றாள் அவள், மனதை மறையாமல்!

முத்துப் பற்கள் பீட்சாவில் பதிவதைப் பார்த்தவாறே, கூடச் சேர்ந்து தானும் ஒரு துண்டை உண்டபடி “இன்று வேலை அதிகமா?” என்று பரிவுடன் கேட்டான் சசாங்கன்.

அவளது இடது கை, கூந்தலைப் பரபரப்புடன் படிய வைப்பதைக் கண்டதும், தலையசைத்து, “பார்ப்பதற்கு எப்போதும் போலவே . . .கண்ணாடி பார்ப்பது உண்டுதானே? மிகவும் அழகாகவேதான் இருக்கிறாய். ஆனால், கண்ணில் களைப்பு தெரிவதால் கேட்டேன்.” என்றான் இயல்பான உரையாடல் குரலில்.

கூந்தலை ஒதுக்கி விட்டுக் கொண்டிருந்த கை தானாக இறங்கிவிட, “அந்த “மிகவும்”மை என் கண்ணாடி சொன்னது இல்லை.” என்று புன்னகைத்தாள் சுசரிதா. “வேலைக் களைப்பு உண்டுதான். ஆனால், அந்த வேலைக்காகத்தானே, இவ்வளவு ஊதியமும். நீங்களும்தான், கொடுக்கிற சம்பளத்துக்கு வேலை வாங்காமல் விடுவீர்களா, என்ன?” கண்ணில் சிரிப்புடன் அவள் கேட்கவும், லேசாகக் கை தூக்கி, “அம்பேல்!” என்று அவன் நகைக்க, அவளும் அதில் இணைந்தாள்.

ஒரு கணம் சிரிப்பு மறைய, “இந்தப் பக்கம், உங்களுக்கு அடிக்கடி வேலை இருக்கும் போலத் தெரிகிறதே!” என்று, கவனப் பார்வையுடன் கேட்டாள், சுசரிதா.

பரவாயில்லை! ஆள் உஷார் பார்ட்டிதான் என்று உள்ளூர மெச்சிக் கொண்டான் சசாங்கன்.

“ஆமாம். “ஸ்டெப் இன்” என்று இந்த ஊர் முழுக்க அங்கங்கே கிளைகளோடு பெரியதாக “சூப்பர் மார்க்கெட்” இருக்கிறதில்லையா? அதை வாடிக்கையாக்கிக் கொள்ள முயற்சிக்கிறேன். அதன் உரிமையாளர் வீடு இந்தப் பக்கம்தான். அந்த வேலையாக, அவரைப் பார்க்கத்தான், அடிக்கடி வந்து போக வேண்டியிருக்கிறது.” என்று,

அவளது முகம் தெளிவடைவதைப் பார்த்தபடி, புன்னகையோடு முடித்தான், அவன்.

மறுபடியும் முகம் பொலிவடைய, “முயற்சி வெற்றி பெற என் வாழ்த்துக்கள்!” என்றவள், சட்டெனக் கண்கள் பளிச்சிட, “ஆக, அந்த “நெல்லுக்கிறைத்த நீர்தான், வாய்க்கால் வழிந்தோடி” வழியிலே இந்தப் புல்லுக்கும் கொஞ்சம் பொசிகிறதாக்கும்! எப்படியும், பழச்சாறு, பீட்சா எல்லாவற்றுக்கும் தாங்க்ஸ், சார்! வரட்டுமா? நெல்லுக்கு இன்னும் எத்தனை நாள் நீர் இறைக்கிறீர்கள் என்று பார்க்கலாம்! “ என்று சிரித்த முகத்துடனேயே கிளம்பிவிட்டாள் .

சசாங்கனுக்குக் காற்றில் பறப்பது போல இருந்தது!

பார்க்கலாம் என்று, அவளே சொல்லுகிறாளே!

நல்ல வேளையாகச் சுசரிதாவிடம் சொல்வதற்கு, அவனுக்கு ஒரு சாக்கு இருந்தது! ஆனால், அது கிட்டத்தட்ட முடிவாகிவிட்ட ஒப்பந்தமே. தேனிலவிலிருந்து வசுந்தரன் திரும்பி வந்ததும், அவனையும் அழைத்துக்கொண்டு போய்க் கையெழுத்திட வேண்டியதுதான். இப்போது வருவது, அவளுக்காகத்தான் என்று உண்மையைச் சொல்லியிருந்தால், ஓடியே போயிருப்பாள்!

வினாடிக்குள், விஷயத்தைக் கொஞ்சம் மாற்றிச் சொன்ன தனது கெட்டிக்காரத்தனத்தை எண்ணித் தன்னையே பாராட்டிக்கொண்டான் சசாங்கன்.

லேசான உறுத்தலையும், காதலிலும் போரிலும், எதுவும் சரிதான் என்று என்றோ எழுதிவைத்திருக்கிறார்களே என்று, தன்னை நியாயப்படுத்திக் கொள்ளவும் செய்தான்!

அடுத்து, இரு தினங்கள் கழித்து இருவரும் சந்தித்துக்கொண்டபோது, சுசரிதா மிகவும் உற்சாகத்தோடு இருந்தாள்.

“ஒரு நல்ல சேதி தெரியுமா? “ என்று கண்கள் பளிச்சிட அவளாகவே அவனை நெருங்கி வந்து, பேசத் தொடங்கியபோது, ஒரு கணம் சசாங்கனுக்கு உலகம் இருட்டாகிப் போயிற்று!

தனக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டதாகச் சொல்லப் போகிறாளா?

முகம் மாறாமல் மிகவும் முயன்று காத்தபடி, “சொன்னால்தானே, தெரியும்?” என்றான், கிண்டல் போல அவன்.

கலீரென்று நகைத்துவிட்டு, “ஐயையோ, ஆமாமில்லை?

இன்னமும் நான் அதைச் சொல்லவே இல்லையே! அப்புறம், உங்களுக்கு எப்படித் தெரிய முடியும்?” என்று, குதூகலமாகக் கலகலத்தாள் சுசரிதா.

ஐயோ, இந்தக் கலகலப்பு யாருக்கக் கொடுத்து வைத்திருக்கிறதோ என்று உள்ளூரத் தவித்தவாறே, “இன்னமும், அதே நிலைதான்! விஷயத்தைச் சொல்லவே காணோம்! இருட்டில்தான் இன்னமும் துழாவிக் கொண்டிருக்கிறேன்!” என்றான் அவன்.

ஒரு தரம் கிளுக்கிவிட்டு, “சொல்லி விடுகிறேன்., சொல்லி விடுகிறேன்! இப்படித் தவிக்கிறீர்களே!” என்று தொடங்கி விவரம் தெரிவித்தாள் சுசரிதா. “என் தங்கை பேச்சுப் போட்டியில் முதல் பரிசு வாங்கியிருக்கிறாள்!  மானில அளவிலான போட்டி!” என்றாள் பெருமையோடு!

எப்படிப்பட்ட தவிப்பு என்று இவளுக்கு என்ன தெரியும்?

உள்ளிருந்த இறுக்கம், வினாடியில் வடிந்துவிட, “வாட்?” என்று கண்களோடு, கைகளையும் விரித்தான் சசாங்கன். “மெய்யாகவே பேச்சுப் போட்டியில்தானா? இங்கானால், அரை மணி நேரம் ஆனாலும், ஒரு விஷயத்தை உருப்படியாகச் சொல்ல முடியவில்லை! ஆமாமிலும், இல்லையிலுமே ஓடிக் கொண்டிருக்கிறது! உன் தங்கை எப்படிப் பேச்சுப் போட்டியில் . . நம்பவே. . . . முடியவில்லையே!” என்று வெகுவாக ஆச்சரியப்பட்டான்.

மீண்டும் கிளுக்கிச் சிரித்தாள் சுசரிதா.

சிரித்து முடித்துவிட்டு, “என்னமாய் மிகைப் படுத்திச் சொல்லுகிறீர்கள்! இதே போலத்தான், கொஞ்சம் நன்றாகப் பேசினால், உடனே வாயாடிப் பட்டமும் கட்டி

விடுவீர்கள்!” என்றாள் சுசரிதா!

“அந்தத் தப்பு மட்டும் நான் ஒரு நாளும் பண்ண மாட்டேனாக்கும்! எங்கே, வாய் ஆடாமல் நீ பேசிக் காட்டு என்று திருப்பிக் கேட்டுவிட்டால்?”

ஒரு கணம் திகைத்துவிட்டு, மறுபடியும் நகைத்தாள் அவள். “ஆமாம்! நீங்கள் சொல்வது சரிதான்! வாய் ஆடாமல் எப்படிப் பேசுவது? இருக்கட்டும்! எங்கள் சுதாவை இனி யாரேனும் வாயாடி என்றால், இப்படிக் கேட்டு அடக்கி விடுகிறேன்! “ என்று கறுவினாள் .

இந்த வாயாடிப் பட்டம், அந்தத் தங்கைக்கு அடிக்கடி கிடைத்திருக்கும் போல!

கிடைத்திருக்கக் கூடும்தான். தங்கையின் துணிமணிகளை வாங்கிக்கொண்டு, மாப்பிள்ளை வீட்டாரை அவர்கள் வீட்டில் கொண்டு விடப் போய், சுசரிதாவை மறுபடியும் சந்தித்தானே, அன்று , அந்தத் தங்கை சுதா பேசிய தினுசுக்கு, நிச்சயமாக வாயாடிப் பட்டம் நிறையத்தரம் கிடைத்துதான் இருக்கும் என்று அவனுக்கு, இப்போது புரிந்தது!

ஆனால், அன்றைக்கு அந்தத் தங்கை பற்றியோ, அவளுக்கு "அநியாய"மாக அளிக்கப்படும் வாயாடிப் பட்டம் பற்றியோ பேச, சசாங்கனுக்கு விருப்பமில்லை.

சுசரிதாவின் மனநிலை மாறாமல் காக்க விரும்பி, "அடக்க வேண்டிய ஆட்களை அப்புறமாகக் கவனிக்கலாம், மேடம்! இப்போது, இந்த நல்ல செய்தியைக் கொண்டாட வேண்டாமா? பக்கத்தில் ஓர் அருமையான காஃபி ஷாப் இருக்கிறது! அங்கே போய், ஓர் இனிப்பு, ஒரு காரம், காஃபியோடு கொண்டாடலாமே! " என்றான் அவன்.

அவள் ஒரு கணத் தயங்குவது போலத் தோன்றவும், "வெளியே, சாலை ஓரமாகப் பொது இடம்தான், சுசரிதா! பெரிய வண்ணக் குடைகளின் அடியில்தான் சாப்பிடுவது! அத்தோடு, இன்று எனக்கும் ஒரு நல்ல சேதி கிடைத்திருக்கிறது! நீ அன்று வாழ்த்தியதாலோ, என்னவோ, அந்த "ஸ்டெப்இன்" உரிமையாளர், சரி சொல்லியிருக்கிறார்! அதையும் சேர்த்துக் கொண்டாட . . . " என்று இழுத்தான்.

முகம் பளீரென்று மலர, "ஓ! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள், சார்! மனமார்ந்த வாழ்த்துக்கள்! நீங்கள் சொல்லுகிற அந்தச் சாலையோரத்து காஃபி ஷாப் எனக்கும் தெரியும்! நல்ல இடம்தான். நானும் சம்யுக்தாவும், அங்கே போயிருக்கிறோம்! சம்யூ பிறந்தநாளைக்கு, வசு, மற்ற சினேகிதர்கள் எல்லாருமே வந்திருந்தார்கள். நன்றாக இருக்கும். வாருங்கள், போவோம்!" என்றாள் சுசரிதா.

பேசிக்கொண்டே சாப்பிட்டதில் ஒரு மணி நேரம் காணாமல் போயிற்று!

திடுமென, கையைத் திருப்பி, மணியைப் பார்த்துவிட்டு, "அச்சோ!" என்று என்று எழுந்தாள் சுசரிதா.

"என்னோடு அறையைப் பகிர்ந்து கொள்ளுகிறவள், எனக்கு என்ன ஆயிற்றோ என்று பயந்து போயிருப்பாள்! இன்று, நான் சுத்தம் செய்கிற நாள் வேறு! நான் கிளம்புகிறேன், சார்!" என்று தன் கைப்பை, தோள்பையை எடுக்கலானாள்.

அவன் தடுக்கவில்லை.

பில்லுக்குரிய பணத்தைக் கொடுத்துவிட்டதால், அவர்களைத் தடுப்பாரும் இல்லை.

சுசரிதாவின் தோள்ப் பையை எடுத்து, அவள் கையில் கொடுத்துவிட்டு, “இரண்டு நல்ல சேதிகள் கிடைத்த தினம். மூன்றாவதாகவும் ஒன்று கிடைக்குமா?” என்று வினயமாகக் கேட்டவன், அவள் சட்டென ஓர் எட்டு பின்னெடுத்து வைக்கவும், அதைக் கவனியாதவன் போலப் பேச்சில் தொய்வு விழாமல் தொடர்ந்தான்.

“வசுந்தரனுக்கும் எனக்கும் ஒரே வயதுதான். அவன் வசு, வசுந்தராக இருக்கும்போது, என்னை மட்டும் “சார்” என்றால், என்னமோ அப்பா, தாத்தா வயதாகி விட்ட மாதிரித் தோன்றுகிறது! என்னையும் பெயரிட்டே அழைக்கலாமே! நானும் நண்பன்தானே? “ என்று முடித்தான்.

சுசரிதாவின் இறுக்கம் தளருவதைப் பாராது, பார்த்தவன், இவளிடம் மிகுந்த கவனத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்று முடிவு செய்தான்.

மனதில் இருப்பதைச் சட்டெனச் சொல்லிவிடவே கூடாது! பிறகு, நத்தை ஒரேயடியாகக் கூட்டுக்குள் சுருட்டிக் கொண்டு விடக் கூடும்! அப்புறம், ஒன்றும் முடியாமலே போகக் கூடும்!

அவனது சிந்தனையில் குறுக்கிட்டு, “ ஐயோ, நீங்கள் ஒரு நிறுவனத்துக்கு எம்டி! உங்களை எப்படி,ப் பெயர் சொல்லி அழைப்பது?” என்றாள் அவள் தயக்கத்துடன்.

“வசுவை அழைப்பது போல, சொந்த வாயால்தான்!” என்று லேசாகக் கிண்டலடித்தபோதும், பேச்சை நிறுத்திச் சிரிக்காமல், மேலே தொடர்ந்தான்.

“அவனுக்கும் பெரிய வேலைதானே? அவனே, தனிமையில் என்னை ஒருமையில்தான் அழைத்துப் பேசுவான். என்னிடமே வேலை பார்க்கிறவனே, பேர் சொல்லிக் கூப்பிடும்போது, நீ மட்டும் ஏன் கூடாது? அவனைப் போலவே நண்பன் எனும்போது, என்னை மட்டும் வேறு மாதிரி அழைக்க வேண்டும்? அவனும், ஒன்றும், உனக்குச் சின்ன வயதிலிருந்து, தெரிந்தவன் இல்லையே! அவனை வசு என்பது போல, இது சசி!”

சட்டென அவளது கண்கள் பளிச்சிட்டன. “இது” வா? கால்கள், நாலா? ஆறா?”

“அப்பாடியோவ்! ஒரு வார்த்தை தவறாக விழுந்து விடக் கூடாது போலிருக்கிறதே!”

“விழுந்தால், உடைந்து விடாது?” என்று கெத்தாகக் கேட்டுக் கண்ணால் சிரித்தவள், உடனே இயல்புக்கு வந்தாள். “உங்கள் வயதுக்கு, சார் மோர் எல்லாம், அதிகப்படிதான். ஆனால் . . . முயற்சிக்கிறேன், சசசாங்கன்!” என்றுவிட்டு, “இதற்கு மேல் தாமதிப்பது, சற்றும் சரியல்ல. அதனால், கிளம்பிகிறேன், ச . . .சி!” என்று முடித்துவிட்டு, மடமடவென்று நடந்து சென்றுவிட்டாள்.

சுசரிதா கண்ணுக்கு மறையும் வரை பார்த்திருந்துவிட்டுக் காருக்குச் சென்றவனின் முகத்தில் புன்னகை மலர்ந்திருந்தது!

சின்னச் சின்னப் பொய்கள் சொன்னான்தான். ஆனால், “ஒயிட் லைஸ்” என்று ஆங்கிலத்தில் சொல்வதுபோல, யாரையும் கெடுக்காத, யாருக்கும் தீமை தராத பொய்கள். சுசரிதாவின் தேவையற்ற ஒதுக்கத்தைத் தவிர்ப்பதற்காக மட்டிலுமே சொல்லப் படும் பொய்கள். இவைகளால் தப்பில்லை!

இனி, வையகமும் வானும் கட்டாயம் வசப்பட்டுவிடும்!

அப்புறம், வாழ்வு முழுவதும் சந்தோஷம்தான்!

இப்படித்தான், அன்றைக்கு சசாங்கன் நினைத்தான்!

ஆனால், நினைப்பது மட்டுமே அவன் கையில்., நடப்பு கடவுளின் விருப்பம் என்று அவன் அப்போது அறிந்திருக்கவில்லை!

அந்தக் கடவுள், அவனது விருப்பத்துக்கு நேர் மாறாகச் செயல்படக் கூடும் என்றும் அவன் எதிர்பார்த்திருக்கவில்லை!

எந்த நண்பனின் திருமணம், அவனது எதிர்காலத் துணையைக் காட்டியதாக, மகிழ்ச்சியும், நன்றியுமாக எண்ணினானோ, அந்த நண்பனின் சொந்த விவகாரம் காரணமாகவே, சுசரிதாவைப் பிரிய நேரும் என்பதும், அப்போது, அவனுக்குத் தெரியாது!

அது, இந்தப் பொய்களுக்கான தண்டனையோ என்றும் தெரியாது!

இப்படியோ, அப்படியோ என்று வருந்தி வாடியதெல்லாம், பிறகுதானே?

# அத்தியாயம் - 6

இரண்டு வாரத்துத் தேனிலவு முடிந்து, வசுந்தரன் சம்யுக்தா ஜோடி திரும்பி வருமுன், சசாங்கனும், சுசரிதாவும், கிட்டத்தட்டத் தினந்தோறுமே சந்திக்கத் தொடங்கியிருந்தனர்.

காதலர்களாகத் தனியிடம் தேடி அலைந்தார்கள் என்று சொல்ல முடியாது.

சுசரிதாவின் வாக்குறுதிக்கு பங்கம் உண்டாக்கக் கூடிய எந்தப் பந்தத்தையும் அவன், அவள் மீது திணிப்பதாக இல்லை!

அவளுக்கோ, அந்த நினைப்பே இல்லை என்றும், அவன் ஊகித்திருந்தான்.

அதனாலேயே, நினைவூட்டிவிடக் கூடாது என்பதற்காகவே, இன்று இங்கே சந்திப்போம் என்று திட்டமிட்டு, அவளைச் சந்திப்பது இல்லை.

எல்லாமே, வெறும் தற்செயலான சந்திப்பாகவே தோன்றும்படி, அவன் பார்த்துக் கொண்டான். .

பெரும்பாலும், காஃபி ஷாப், ஐஸ்கிரீம் பார்லர் எங்காவது, அவள், அல்லது அவள் இருக்க, அந்தப் பக்கம் வரும் அடுத்தவர், கூடச் சேர்ந்து கொள்வார்கள்.

அல்லது வழியில் பார்த்துக் காரில் சாய்ந்தபடி நின்று பேசுவார்கள்.

அப்படிப் பேசும்போது, ரகுமானின் “ஜெய்ஹோ” இருவருக்கும் பிடித்தம் என்று தெரிந்துகொண்டார்கள். ரவிவர்மா படங்களின் பெரிய கண்கள், கேரளப் படகுப் போட்டிகளில் ஒரு லயத்தோடு துடுப்புத் தள்ளும் விதம், மழை நேரத்து மின்னல் . . . இப்படி, இருவருக்குமே பிடித்தமான நிறைய விஷயங்களைக் கண்டுபிடித்தார்கள்.

அவை என்னென்ன என்பது கூட, வெகு துல்லியமாக அவனுக்குத் தூக்கமின்றி உட்கார்ந்திருந்த இப்போது நினைவு வந்தது!

தன்னிச்சையாக மனத்திரையில் உலா வந்த பழைய சம்பவங்களை எண்ணிப் பார்க்கையிலேயே, அவை பற்றி சசி தீவிரமாக ஆராயவும் தொடங்கினான்.

அவ்வளவு இனிமையாகத் தொடங்கிய உறவு, எப்படி ஒரேயடியாகக் கசந்து போக முடியும்? அதுவும் ஒரே நாளில்?

எதிர்காலத்தையே ஒப்படைக்கலாம் என்கிற அளவு சுசரிதாவைத்

தெரிந்து வைத்திருப்பதாக எண்ணினானே, அவ்வளவு சீக்கிரமாக, அவளைத் தப்பாக எண்ண, அவனால் எப்படி முடிந்தது?

அவளும்தான் என்ன மாதிரிப் பேசிவிட்டாள்?

பிரிவின் காரணத்தை, இடையிலேயே அவன் புரிந்துகொண்டபோதும், உச்சந்தலையில் அடித்துச் சொன்னது போல அறியவும் நேர்ந்திருந்தாலும், விஷயத்தை அவன் முழுமையாகத் தெரிந்து கொண்டது, இந்த ஆராய்ச்சியின் பிறகுதான்!

பிழை, இருவரதும்தான்.

உலகத்தில் உள்ள அத்தனை விஷயங்களைப் பற்றியும், வெளிப்படையாக அவ்வளவு பேசியவர்கள், அவர்களை அறியாமலே செய்த பெரிய தவறு, அவர்கள் இருவருமே, அவரவர் சொந்த உணர்ச்சிகள், எதிர்கால வாழ்வு பற்றி, ஒரு வார்த்தை கூடப் பேசாததுதான!

பொதுவாகத் தன் “பெயருக்குச் சிறு களங்கமும் ஏற்பாதபடி திரும்பி வருவதாக”ச் சொல்லி, வேலைக்கு வந்திருக்கும் சுசரிதாவுக்கு, இருவரும் சந்திப்பதும், பொது விஷயங்களைப் பேசிக் கொண்டிருப்பதுமே, முதலில் சுகமாக இருந்திருக்கலாம்!

அவளுக்குமே, ஒரு கட்டத்தில் அடுத்து என்ன என்று தோன்றியிருக்கும்.

அவன் ஒன்றும் சொல்லக் காணோமே என்றுகூட எண்ணியிருக்கலாம்!

சொல்லுவான், சொல்லுவான் என்று காத்திருந்துவிட்டு, அவன் எதுவும் சொல்லாமலே இருக்கவும், அப்படிச் சொல்லுவதற்கு எதுவுமே இல்லை போலும் என்று எண்ணிக்கூட, அவள் அப்படிக் கடுமையாகப் பேசியிருக்கலாம்.

கடைசி நாளில், அவளது அந்த ஒரே ஒரு வாக்கியம் . . .அதைத்தானே எடுத்துச் சொன்னது?

அவள், தன் பெற்றோருக்குக் கொடுத்த வாக்குறுதிதான், எதையும் வெளிப்படையாகச் சொல்லவிடாமல், அவனையுமே பெருமளவு கட்டிப் போட்டிருந்தது என்று, அவளுக்குத் தெரிய வாய்ப்பில்லைதானே?

இன்னும், தங்கை திருமணம் பற்றிய பேச்சு வீட்டில் தொடங்கியிருந்ததால், அது முடியட்டும் என்று, அவன் காத்திருந்ததும், அவளுக்குத் தெரியாது!

தங்கையின் திருமணம் முடிந்ததும், தன் நேசத்தைப் பற்றிப் பெற்றோரிடம் சொல்லி, அவர்கள் மூலமாகவே, சுசரிதாவுடைய பெற்றோரை அணுகி, முறைப்படியே திருமணத்தை ஏற்பாடு செய்தால், அவளது வாக்குறுதிக்குப் பங்கம் நேராதிருக்கும் என்று, அவன் பொறுத்திருந்தான் என்பதும், அவளுக்குத் தெரிய வாய்ப்பில்லைதானே?

இது போல எதுவும் இல்லாதபோது, அவனையே சுசி தவறாக நினைத்ததையும் தப்புச் சொல்ல முடியாதுதான்!

ஆனால், இந்தப் பிரச்சினை இயல்பாகவே, பிரச்சினை என்கிற அளவுக்கு வராமலேயே தீர்ந்தும் போயிருக்கலாம்.

அப்படி நேராது கெடுத்தது, வசுந்தரன், சம்யுக்தா விவகாரமே! அவர்களுக்கு, இவர்கள் இருவருமே, உள்ளார்ந்த தோழன், தோழியாக இருந்து, அவர்களது பிரச்சினை முழுவதையும் அறிய நேர்ந்தது, அடுத்த பெரிய காரணம்!

தேனிலவு முடிந்து திரும்பி வந்தவர்களை, வீட்டுக்கு அழைத்து வந்ததே, சசாங்கனும், சுசரிதாவும்தான்.

அழைத்து வரும் யோசனை, சசாங்கனதுதான். அப்படி ஒரு தரம் அவளைப் பார்க்கலாம், அவளோடு சற்று நேரம் பேசிக் கொண்டிருக்கலாம் என்று அவன் நினைத்தது, அடிப்படைக் காரணம்!

அவளுக்கும் அந்த எண்ணம் இருந்துதான் சந்தோஷமாக ஒப்புக் கொண்டாள் என்றும் எண்ணினான், அவன்.

இருவரும் ஒரு குளிரூட்டப்பட்ட ஏலக்காய்ப் பால் பாக்கைட்டை வாங்கிக் கொஞ்சம், கொஞ்சமாக அருந்தியவாறே, ரயில் நிலையத்தில் ஆற்றலாக நடந்தபடி ரயில் வருவதற்காகக் காத்திருந்தது, இப்போதும் சசாங்கனுக்கு நன்கு நினைவிருந்தது!

ஸ்ட்ராவில், அவளது செவ்விதழ்கள் குவிந்து பதிந்திருந்ததுகூட!

இனிச் சீக்கிரமாகப் பெற்றோரிடம் சொல்லி, ஏதாவது ஏற்பாட்டைச் செய்தாக வேண்டும்., ரொம்ப காலம் அடக்கி வைக்க முடியாது என்று நினைத்ததும்!

அப்போதெல்லாம் மனதை அடக்காமல் வெளிப்படுத்தியிருந்தால் . . . ஒரு வேளைஎல்லாம் நல்லதாக நடந்திருக்குமோ என்று, இப்போதும் எண்ணாதிருக்க அவனால் முடியவில்லை!

அது வீண் வேலை என்று தெரிந்திருந்தும்!

தலையைக் குலுக்கி, இந்த வீண் மறுகலில் இருந்து விடுபட முயன்றால், சசாங்கனின் மனம், மறுபடியும் பழைய கதைக்கே ஓடிற்று!

அன்று வந்து சேர்ந்தபோது, பிரயாண அலுப்பையும் மீறி, மணமக்கள் இருவர் முகத்திலும் ஒரு “பளீர்” தெரிந்தது!

அழைத்துப் போக வந்திருந்தவர்களைப் பார்த்ததும், அந்த “பளீர்” இன்னமும் மெருகேறிப் பளபளத்தது!

“என்ன வசு, பயணம் எப்படி இருந்தது என்று கேட்கவே தேவையில்லை போலத் தெரிகிறது!” என்று கேலி செய்தபடி, சாமான்களை எடுப்பதில் உதவி செய்தான் சசாங்கன்.

சம்யுக்தாவின் கன்னங்கள் சிவக்கவும், “என்னப்பா, ஊட்டியிலிருந்து இரண்டு ரோஜாக்களைக் கன்னத்தில் ஒட்டவைத்துக் கொண்டு வந்துவிட்டாயா?” என்று தன் பங்குக்குக் கூறினாள் சுசரிதா.

கிளுகிளு சிரிப்பும் வேடிக்கையுமாக, வீடு வந்து சேரும்வரை, எல்லாம் நன்றாகத்தான் இருந்தது!

பூட்டியிருந்த வீட்டை வசுந்தரன் திறக்கும்போதே, சுசரிதாவுக்கு ஒன்று தோன்ற, காரிலிருந்து பொருட்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்த சசாங்கனிடம் போய்ச்

சொன்னாள்.

“அட, எனக்குத் தோன்றவில்லை, பார்! அவர்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டு, வாங்கி வரலாம்!” என்று, உள்ளே போய், காலை உணவுக்கு, இருவருக்கும் என்ன வேண்டும் என்று அவன் கேட்டது வரை, எல்லாம் சாதாரணமாகத்தான் இருந்தது.

இன்னமும் புன்னகை விரிய, “ரொம்பத் தாங்க்ப்பா! கொஞ்சம் இலகுவாகச் செரிமானம் ஆகிற மாதிரியாக இட்டிலி, சப்பாத்தி . . . உங்களுக்கும் அப்படித்தானே, சுந்தர்?” என்று சம்யுக்தா கேட்டது வரையும் கூட, அப்படித்தான்.

ஆனால், முகம் லேசாக வாட, வசுந்தர் உச்சுக் கொட்டினான்.

“எங்கள் ஊர் அம்மன் கோயில் திருவிழாவுக்குப் போனால், திரும்பி வர ஒரு வாரம் ஆகும்! திரும்பி வந்தால், பயண அலுப்புக்கும், வயிற்றுக்கும் நல்லது என்று, பூண்டு, வெந்தயம் எல்லாம் போட்டு, எங்கள் அம்மா ஒரு கஞ்சி செய்வார்கள்! தேங்காய்த் துவையலுக்கும் அதற்கும் எப்படி இருக்கும் தெரியுமா? துள்ளிக் குதிக்க வேண்டும் போல, உடம்புக்கும் நன்றாக இருக்கும்! உன் அம்மா, அது

போலெல்லாம், உனக்குக் கற்றுத் தரவில்லையா, சம்யூ?” என்று மனைவியைக் கேட்டான் அவன்.

“அது போலக் கிராமத்துப் பதார்த்தம் எல்லாம், என் அம்மாவுக்கு எப்படித் தெரியும்? “ என்றாள் சம்யுக்தா, எங்கோ பார்த்தபடி.

“ஏன்? கிராமத்தில் சோறு சாப்பிடுவதால், இங்கே சாப்பிடாமலா, இருக்கிறோம்? சரி போகட்டும். தெரியாது என்றால் விடு. சசி, அவள் சொன்னது போலவே, ஏதாவது வாங்கி வாப்பா! மதியத்துக்கு, இங்கேயே பார்த்துக் கொள்ளுகிறோம்!” என்றவாறு, உடல் அலுப்புத் தீரச் சோம்பல் முறித்தான் வசுந்தரன்.

மதியத்துக்குப் பார்த்துக் கொள்ளுகிறோம் என்று தன்மைப் பன்மையில் சொன்னபோதும், அந்த வேலைகளில், இவன் ஒரு விரலைக்கூட அசைக்கப் போவது இல்லை என்று, சுசரிதாவுக்குத் தோன்றியது.

கணவனின் முதல் பேச்சிலேயே முகம் கன்றியிருந்த சம்யுக்தாவும், இதையே எண்ணியது போல, அவள் முகத்தில் கடுப்பு அதிகரித்தது!

“இதோ வாங்கி வருகிறோம்.” என்று, சுசரிதாவும், சசாங்கனோடு சேர்ந்து கிளம்பிவிட்டாள். எதிலிருந்தோ தப்பிச் செல்வது போன்ற உணர்ச்சி, அவளுக்கு!

பதினைந்தே நாட்களுக்கு முன் அங்கே அனுபவித்த கோலாகலம், வெறும் கனவாகத் தெரிந்தது!

கார் கிளம்பியதும், “இந்த வசுந்தரனுக்கு என்ன ஆயிற்று, சசி? சம்யுக்தாவும் தானே, பயணததில் களைத்துப் போயிருப்பாள்? அவளிடம் போய், அம்மா, ஆட்டுக்குட்டி என்றுகொண்டு! இவ்வளவு மட்டமாக, அவர் நடந்துகொள்வார் என்று நான் எதிர்பார்க்கவே  இல்லை!” என்றாள் அவள்.

“மட்டம் என்பானேன்? ஆண்டுதோறும், அவர்கள் ஊரில், இந்தக் கோயில் விழா வெகு விமரிசையாக நடக்கும். கடை வரை மூடி வைத்துவிட்டு எல்லாருமாகப் போவார்கள். அங்கே, ஒத்த உறவினரோடு, பயங்கரமாக ஆட்டம் போடுவோம் என்பான், வசு. இப்போது, வெளியூர் சென்று திரும்பியதும், அந்தப் பயண நினைவு வந்து, தாயார் பற்றிப் பேசியிருக்கிறான். ஆனால், சம்யுக்தா சட்டென்று கிராமத்து உணவு என்று, இறக்கிப் பேசாமல் இருந்திருக்கலாம்! ஆனால், அவர்கள் இருவருக்குமே பயண அலுப்பு என்று, எனக்குத் தோன்றுகிறது! சாப்பிட்டுவிட்டு, நன்றாகத் தூங்கி எழுந்தால், எல்லாம்

சரியாகிப் போகும்! வரும்போது, இருவர் முகங்களையும் பார்த்தாயில்லையா?” என்றான் சசாங்கன்.

இருக்குமோ என்று யோசித்து, இருக்கக் கூடும் என்று முடிவு செய்து, “அதுவும் சரிதான்.” என்று, ஒப்புதலாகத் தலையாட்டினாள், சுசரிதா.

வசுந்தரன், சம்யுக்தா காரணமாக, முதல் முறையாகத் தாங்கள் இருவரும் வேறுபட்டுப் பேசுவதை, அவர்கள் இருவருமே, அப்போது உணரவில்லை!

தொடர்ந்து, அவர்களது உரையாடல்களின்போது, வசுந்தரனும், சம்யுக்தாவும் அதிகமாக இடம் பெறலாயினர்.

வசுந்தரன், சம்யுக்தா இருவருமே, ஓரொரு வகையில் குடும்பத்திடம் பற்றுதல் அதிகம் உடையவர்களே.

சின்ன விடுமுறை, அது இரண்டே நாட்கள் என்றாலும், வீட்டுக்குப் போய், தாயின் கைப்பக்குவத்தில் சுவையாக உண்டு, குடும்பத்தினர் அத்தனை பேருடனும் அரட்டை அடித்துவிட்டுக் கையிலும் முறுக்கு, முந்திரிக்கொத்து டப்பாக்களுடன் திரும்பி வருவது, அந்த வீட்டு வசுப் பையனின் வழக்கம்!

சம்யுக்தா, இதற்கு நேர் மாறு!

அவளுடைய தாயாரும் வேலைக்குச் செல்கிறவள் என்பதால், பள்ளி, கல்லூரி விடுதிகளில் இருந்தும் வேலை பார்க்கும் இப்போதும், மகள் வரும்போது வீட்டில் உட்கார்ந்து, விதவிதமாகச் சமைத்துப் போட்டுக் கொண்டிருக்க அவளால் முடியாது! ஏதாவது பீட்சா கொண்டுவரச் சொல்லிவிட்டு, டிவிடியில் ஏதாவது படத்தைப் பார்த்துக்கொண்டு பகலைக் கழிப்பாள் அவள். ஆனால், மாலை நேரம் வேறு மாதிரி இருக்கும்.

பெற்றோர் இருவரும் சற்றுச் சீக்கிரமாக வீடு திரும்பி, மகளை வெளியே அழைத்துப் போய்விடுவார்கள். சினிமா, ஷாப்பிங் என்று சுற்றிவிட்டு, வெளியேயே ஹோட்டலில் உணவை முடித்துக்கொண்டு, சந்தோஷமாகத் திரும்பி வருவார்கள்.

சும்மாவுமே, தாயும் வேலைக்குப் போகிறவள் என்பதால், சாதாரணமாய் வீட்டு உணவில் பிரமாதமாக ஒன்றும் இராது. என்றாவது, தனிப்பட வேண்டும் போல இருந்தால், வாங்கிவிடுவார்கள்!

இருவரும் காதல் கடலில் முக்குளித்துக்கொண்டு இருந்தபோது, இதெல்லாம் அவர்கள் இருவரில் யாருக்கும் பெரிதாகத் தெரியவில்லை.

இப்போது திருமணப் பரபரப்பு, தேனிலவுக் குதூகலம் எல்லாம் அமர்ந்து, குடும்ப வாழ்வைத் தொடங்கிய பிறகோ, இருவருக்குமே வாழ்க்கை வேறு விதமாகத் தெரியலாயிற்று!

இதில் பிரச்சினை என்னவென்றால், மணமான ஜோடியின் பிரச்சினை, அவர்களோடு நில்லாமல், சசி, சுசியையும் பாதிக்கத் தொடங்கியதுதான்!

ஆம். இருவருமே, அப்போதுதான் ஒருவரை ஒருவர் இயல்பாக சசி , சுசி என்று அழைக்கத் தொடங்கியிருந்தனர்.

இதற்காகவெல்லாம், ஒரு பெண்ணின் பெயர் கெட்டுவிடாதுதானே?

வசுந்தரன், அலுவலகத்தில் சசாங்கனைத் தினமும் பார்க்கிறவன்.

அடுத்து, சசாங்கனின் இடத்தில் இருந்து, அலுவலகத்தைக் கவனிக்க வேண்டியவன் ஆயிற்றே! கடைசியாக, எம்டியின் கேபினில் தனியே அமர்ந்து, அன்றாட வேலைகள், மற்ற திட்டங்கள் பற்றி, இருவரும் அலசி ஆராய்வது, எப்போதும் பழக்கம்!

இப்போது மனம் விட்டுப் பேசுவதற்கு முடியாமல், குடும்பத்தினர் விலகிப் போய்விட்டபடியால், புதிய வாழ்வு பற்றிய குறை, நிறைகளை நண்பனிடம் ஒப்பிப்பது, வசுந்தரனுக்கு இயல்பாகிப் போயிற்று! நண்பனும் ஆயிற்றே!

இதே போன்ற நிலை ஒன்று தோழிகளுக்கு இடையேயும் உருவாயிற்று.

முன்னர் ஒரே விடுதியில் தங்கியிருந்து, அருகருகே இருந்த அலுவலகங்களில் வேலை பார்த்தவர்கள் சுசரிதாவும், சம்யுக்தாவும். சேர்ந்தே போய், சேர்ந்தே வருவார்கள். மதியம் சேர்ந்தே சாப்பிடுவார்கள்.

இப்போதும், மதிய உணவின்போது சந்திப்பது, முன்போலவே நடந்தது. மாலையில் திரும்பி வரும்போது, சம்யுக்தா இடையில் இறங்கிக்கொள்ள, சுசரிதா விடுதிக்குப் போய்ச் சேருவாள்.

இதில் மதியச் சந்திப்பும், திரும்பி வரும் சமயமும், சம்யுக்தா தோழியிடம் புலம்புவதற்கு உரிய நேரமாகிப் போயிற்று!

புலம்பல்தான்.

முதலில் ஓரிரு சந்தோஷச் சம்பவங்கள் பற்றியும் அவள் சொன்னதுண்டுதான். ஆனால் மெல்ல மெல்லக் குறைகள் வரத் தொடங்க, பிறகெல்லாம் ஒரே வருத்தங்கள் மட்டும்தான்!

“தேனிலவிலேயே அப்படித்தான், சுசி. ஒரே “அம்மா” புராணம்தான். அவர் அம்மா இப்படி, அம்மா அப்படி என்று, காதில் துளையே

போட்டுவிட்டார் எனலாம். வந்த அன்றே, நீ கூடப் பார்த்தாயல்லவா? ஊரிலிருந்து வந்தால், கஞ்சி செய்வார்களாம்! நான் செய்யவில்லை என்று குறை! அந்தம்மா, வீட்டில் கடைப் பையன்களை வீட்டு வேலை முடித்த பிறகுதான் கடை வேலைக்கு அனுப்புசார்களாம். இருந்த இடத்தில் இருந்து, ஏவிச் செய்திருப்பார்கள்! எனக்கு எந்த வேலையாள் இருக்கிறார்களாம்? அது மட்டுமல்ல. அவர்கள் வீட்டில் சும்மா இருக்கிறவர்கள்! நான் அப்படியா? வீட்டிலும் செய்துவிட்டு, வேலைக்கும் போக வேண்டாமா? சொன்னால், வேலையை விட்டுவிடேன் என்கிறார் சுந்தர்! “

“என்னது?!” என்று அதிர்ந்தாள் சுசரிதா.

அவர்கள் இருவரும் திருமணத்தைத் திட்டமிட்ட கதை, அவளுக்கும் தெரியும்!

இருவர் சம்பளத்தில், எப்படி யெப்படியோ வாழலாம் என்று திட்டமிட்டுவிட்டு, வேலையை விடு என்றால், எப்படி?

அது பற்றிப் பேசியபோது, “கிளைப் பொறுப்பை முழுதாக ஏற்கும்போது, ஊதியம் நிறையவே கூடும். அதை வைத்துச் சமாளித்துக் கொள்ளலாம் என்று, வசுந்தரன் நினைத்திருக்கிறான். அதில், தப்பு என்ன?” என்று சசாங்கனும் நண்பனைத் தாங்கிப் பேசவும், சுசிக்கு ஒரு மாதிரியாகிப் போயிற்று!

“அதென்ன சசி, அப்படிச் சொல்லுகிறீர்கள்? அவர்கள் இருவரும், திருமணம் செய்யத் திட்டமிட்டபோது, அந்த அதிகப்படி ஊதியத்தையும் சேர்த்துத்தானே, கணக்கிட்டார்கள்?” என்று சசாங்கனிடம் கேட்டாள் அவள்.

“அதுதான் சமாளித்துக் கொள்ளலாம் என்று வசு சொல்கிறானே! “

“சமாளிப்பதா? கட்டு செட்டாகச் சிக்கனமாகச் செலவு செய்தா? அப்படி, அவளுக்கு என்ன கட்டாயம்? அப்புறம் கார் வாங்குவதுஎப்படி? பெரிய ஃப்ளாட் கட்டிப் பால் காய்ச்சுவது என்றைக்கு? அதைவிட, வசுந்தரன் சற்று நாவைக் கட்டி வைப்பதோடு, வீட்டுப் பராமரிப்பில், சம்யூவுக்குக் கொஞ்சம் உதவிகள் செய்யலாமில்லையா? நீங்கள் சொல்லுகிற சமாளிப்பை இப்படிச் செய்தால், பண வரவு குறையாமலே, வீடு கார் என்றும் இருக்கலாமே! அவர் விரல் அசைக்க மாட்டாராம். அவள் மட்டும் கஷ்டப்பட வேண்டுமா?”

சுசரிதாவின் இந்தத் தீவிரப் பேச்சில், சசாங்கனே சற்றுத் திகைத்துப் போனான்.

இப்போது நண்பனுக்காகப் பரிந்து பேசுவது, சுசியோடு சண்டையை மூட்டி விடக் கூடும் என்று புரிபட, “இது, அவர்கள் பிரச்சினை, சுசி! அவர்களே பேசித் தீர்த்தும் கொள்வார்கள். இப்படிச் செய்வது நல்லது, அப்படி நடந்தால் சரியாகாது என்று நாம் இருவரும் யோசிப்பது, எந்த விதத்தில் பயன்படும், சொல்லு ? அதைவிட, ரொம்பவும் ஆறிவிடுமுன், இந்த சூப்பைக் குடித்து விட்டோம் என்றால், இதற்குக் கொடுக்கிற காசு வீணாகாமல் இருக்கும். என்ன சொல்கிறாய்?” என்றான் சசாங்கன்.

“அ . .துவும் சரிதான் . . .” என்று, சூப் கிண்ணத்தைக் கையில் எடுத்தாள், சுசரிதா!

ஆனால், இது, இத்தோடு நிற்கவில்லை!

“தினசரி, இந்தப் புளி சோறும், எலுமிச்சம்பழச் சாதமும், சாப்பிட்டு, நாக்கு செத்துப் போயிற்று! ஒரு விடுமுறை நாளில் கூடவா, நல்ல சமையல் செய்யக் கூடாது? ஏனென்றால், அன்றைக்கு, அம்மையார் ஓய்வெடுக்கிற நாளாம். வெளியேதான் சாப்பிடப் போக வேண்டுமாம்! சரியென்று கூட்டிப் போனால், ஏதோ “எத்தனிக்” நகை என்று அவள் ஊதியம் முழுதுக்குமே வேட்டு வைத்துவிட்டாள்! வீட்டு வாடகை உட்பட, எத்தனை செலவு இருக்கிறது? அதை விடு! துவைத்த துணி மடிக்கக் கூடவா, முடியாது போகும்? எங்கள் வீட்டில், இது போலக் குப்பை கூளமெல்லாம் பார்க்கவே முடியாதுடா! அம்மா, கண்ணாடி போல வைத்திருப்பார்கள்! அதைச் சொன்னால், ஒரே சண்டை! அழுகை! வாழ்க்கையே வெறுத்துவிட்டது! “ என்று, வசுந்தரன் தொடர்ந்து புலம்பினான்.

நேரடியாகப் பார்த்தது இல்லை என்றாலும், மற்ற நண்பர்கள், வசுந்தரின் வீடு பற்றிப் பாராட்டிப் பேசி, சசாங்கனும் கேட்டிருக்கிறான்.

எப்படியும், வீடு பார்க்க நன்றாக இருந்தால்தானே, இதில் வசிப்பதற்கும் சுகமாக இருக்கும்?

அத்தோடு, வீட்டுச் சூழ்நிலை, வேலையையும் பாதித்துவிடக் கூடாது அல்லவா?

இதை, சுசரிதா தோழியிடம் இதமாகச் சொன்னால், நல்ல பலன் கிடைக்கக் கூடும் என்று , ஒரு நாள் தோழன் வீட்டு நிலை பற்றி, மெல்லத் தொடங்கினான், சசாங்கன்.

ஆனால், அவன் இரண்டு வார்த்தை சொல்லுமுன், அவள பொரியவே தொடங்கிவிட்டாள்.

“என்ன சசி, இது? இந்த வசு இப்படி இருக்கிறார்? எந்நேரமும்,

அம்மா ஜபம், அம்மா சாப்பாடு, அம்மாவின் வீட்டுப் பராமரிப்பு என்று, இதே பேச்சு! அவர் அம்மா

வீட்டில் மட்டுமாய் இருப்பவர்கள். விழுந்து விழுந்து, சமையலையும், வீட்டையுமே முழு நேரமும் பார்த்துக் கொண்டிருக்கலாம். சம்யுக்தாவால், அது முடியுமா? இப்படி எந்நேரமும் குறை சொல்வதற்கு, அவர் ஒரு சமையல்காரியையோ, வீட்டு வேலை செய்கிறவளையோ, திருமணம் செய்து கொண்டிருக்கலாம்! அதை விட்டு . . . .காதலிக்கும்போது மட்டும் என்னமோ இந்திர லோகத்தில் வாழ வைப்பதாகப் பேசிவிட்டு, இப்போது, முழு நேர வேலைக்காரியாக்குகிறாரே! " என்று ஆத்திரத்துடன் கொட்டித் தீர்த்தாள்.

வசுந்தர், சம்யுக்தாவுக்கு இடையே பெரிய யுத்தம் ஒன்று நடந்திருக்கிறது என்று சசாங்கனுக்குப் புரிந்தது!

வசு தோழனிடம் புலம்பியது போலவே, அவன் மனைவியும் தோழியிடம் போயிருக்கிறாள் என்று சசாங்கன் எண்ணமிடும்போதே, சுசரிதா தலை சரித்து அவனைப் பார்த்தாள்.

"என்ன? வசுந்தர் உங்களிடம் ஏதோ குறைப்பட்டார் போல?"

ஓர் அரைப் புன்னகையால் அதை ஒத்துக்கொண்டான் அவன். "அவன் அம்மா, மகன்களுக்காக ரொம்பச் செய்வார்கள். அந்த உறவே அறுந்துவிட்டது. அதை உணர்ந்து, மனைவிதானே அன்பைக் காட்டி, ஈடு செய்ய வேண்டும்? அதை விட்டுத் திருமணம் என்றால், ஆட்டிப் படைக்க ஓர் ஆண் கிடைத்தான் என்று இருக்கக் கூடாதில்லையா? குடும்பம் என்றால் உல்லாசம் மட்டுமேயா? பொறுப்புகளும் இருக்கும்!"

"அதே பொறுப்புகள் வசுந்தருக்கும் உண்டுதானே?" என்று திருப்பினாள், சுசரிதா. "ஒரு காலத்தில், ஆண் மட்டுமே வெளியே போய்ச் சம்பாதித்தான். பெண் வீட்டை முழுசாகப் பார்த்துக் கொண்டாள். ஆளுக்கு ஒரு பொறுப்பாகச் செய்தார்கள். இப்போது அவளும் சம்பாதிக்கிறபோது, வீட்டு வேலைகளை, அவனும் பகிர்ந்து கொள்வதுதானே, நியாயம்? அதை விட்டு, சம்பளம் இல்லாமல், ஒரு வேலைக்காரி கிடைத்தாள் என்று நினைத்தால் எப்படி? வக்கணையாகச் சாப்பாடு இல்லை என்று வேறு குறை! அவளும்தான் எவ்வளவு செய்வாள்? அவள் என்ன சமையல்காரியா அல்லது வேலைக்காரியா, உழைத்துக் கொட்டுவதற்கு?" என்று தொடர்ந்து, தான் நினைத்ததைப் படபடவென்று கூறி முடித்தாள்.

"ஊகூம். நீ பேசுவது சரியில்லை, சுசி. வசு தாயார் என்ன

வேலையாளாகவா, அந்த வீட்டில் அவ்வளவு செய்கிறார்கள்? மனதில் அன்பு இருந்தால், இதெல்லாம் வெறும் வேலையாகத் தோன்றாது! எல்லாம் யோசிக்கையில், சம்யுக்தா உள்ளத்தில், அந்த அன்பு இல்லை என்பதாகத்தான் தோன்றுகிறது." என்று நண்பன் மனைவியைக் கடுமையாக குறை கூறினான், சசாங்கன்.

தோழி, வசுந்தருக்காக உருகியது முழுதும் அறிந்திருந்த சுசரிதா கொதித்துப் போனாள்.

"யாருக்கு அன்பில்லை? உங்கள் நண்பர் மனதில் கொஞ்சமாவது அன்பு இருந்திருந்தால், வெளியேயும் வேலை செய்து, வீட்டிலும் உழைக்கிறாளே என்று, அவரும் சேர்ந்து வேலை செய்திருப்பார்! செய்தாராக்கும்? இதில்லை., அதில்லை என்று குறை மட்டும் பட்டிருக்கிறார்! அன்பற்ற நெஞ்சம் அவருக்குத்தான்! சம்பாதிக்கிற, அதே சமயம் சம்பளம் கேட்காத வேலைக்காரி தேடியிருக்கிறார் என்று இப்போதல்லவா புரிகிறது!"

இதுவும் கடுமையான குற்றச்சாட்டே!

முகம் சிவக்கப் பெரிய மூச்செடுத்துக்கொண்டு, வாதாடுவதற்காக நிமிர்ந்த இருவரும், ஒரு கணம் நிதானித்தனர்.

யாருக்காக, யாரிடம், யார் சச்சரவு செய்வது?

அப்போதைக்கு, அவர்களிடையே சமாதானம் தலை தூக்கியது.

ஆனால், அத்தோடும் அது நின்று விடவில்லை!

# அத்தியாயம் - 7

அன்றையச் சம்பவம் வரை, சசாங்கன், சுசரிதா இருவருக்குமே, ஒரு நிதானம் இருந்தது!

இது, அடுத்தவர் குடும்ப விஷயம். என்னதான் நட்பு என்றாலும், அவர்களது பிரச்சினைக்காக, இவர்கள் இருவரும், ஒருவரிடம் ஒருவர் குரலை உயர்த்துவது, பயனற்றது என்பதோடு, அசட்டுத்தனமும் கூட என்று, ஒரு கட்டத்தில் உணரவும் முடிந்தது!

குறைந்த பட்சமாக, ஒருவருக்கேனும் புத்தியில் உறைத்து, அவர் எச்சரிக்கும்போது, அடுத்தவரும் அதைப் பற்றிக் கொண்டார்கள்.

பற்றிக்கொண்டு, தங்கள் அளவில் விரிசல் பெரிதாகாமல் பார்த்துக் கொண்டார்கள்.

அவ்வளவே!

அதற்கு மேலாக, ஒருவர் கருத்தை, அடுத்தவர் ஏற்றுக் கொள்ள, இருவரில் யாரும் தயாராக இல்லை!

சுசரிதாவைப் பொறுத்த வரையில், வசுந்தரன் கெட்டவனாகிக் கொண்டே போனான். மனைவியை மதிக்கத் தெரியாதவன்., வேலைக்காரியாக எண்ணுகிறவன். அம்மாவோடு ஒப்பிட்டு, ஒப்பிட்டு, மனைவியை மட்டம் தட்டுகிறவன்! முக்கியமாக, அவனுக்கு மனைவியிடம் அன்பே கிடையாது! சில பல வசதிகளுக்காகவே மணம் செய்தவன்!

ஆனால், சசாங்கனிடம் இதைச் சொல்லி, இதமான மனநிலையைக் கெடுக்க அவளுக்குக் கொஞ்சமும் விருப்பம் இல்லை!

அவளைப் போலவே, சசாங்கனுக்கும், தோழன் மனைவியிடம் மதிப்புக் குறைந்துகொண்டே  போயிற்று! “கொள்ளுக்கு வாயைத் திறந்து, கடிவாளத்துக்கு மூடிக்” கொள்ளும் குதிரையாகவே, அவனுக்கு, அவள் தோற்றினாள்! வெறுமனே சுற்றிப் பார்க்கச் சென்றுவிட்டு, நகையை வாங்கி வந்ததை, அதற்கான அசைக்க முடியாத சான்றாக, அவன் எண்ணினான்.

ஆனாலும், இதைச் சுசரிதாவிடம் சொல்லி, அவளது அழகான முகத்தை வாட வைப்பதற்கு, அவனுக்கு மனம் வரவில்லை!

அது மட்டுமல்லவோ என்று, சசாங்கனுக்கு இப்போது  . . . மனம் மறுகத் தொடங்கிய பிறகான காலத்தில் அடிக்கடி தோன்றியதுண்டு.

ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் பேசி, வார்த்தைகள் முற்றி, தங்கள் இருவருக்கும் இடையேயே பிரிவு ஏற்பட்டுவிடக் கூடும் என்ற என்ற அச்சமும் காரணமாக இருந்திருக்கலாம்!

எப்படியோ, தொடர்ந்த சில நாட்கள், வசுந்தரன், சம்யுக்தா பேச்சு அவர்களிடையே எழவே இல்லை!

ஆனால, அதனால் சசாங்கனும், சுசரிதாவும் உற்சாகத்தில் துள்ளித் துள்ளிக் குதித்தார்களா என்றால், அப்படியும் நடக்கவில்லை!

ஏதோ கவலை! ஏதோ பரபரப்பு, கத்தி மேல் நடப்பது போன்றதொரு கவனம்.

என்னவோ காலின் கீழ்  எரிமலை வெடிக்கப் போவது போன்ற பிரமை!

இந்தக் கலக்கத்துக்கு அவசியம் இல்லை என்று சசாங்கன் தனக்குத்தானே, சொல்லிக் கொள்ளத்தான் செய்தான்.

இந்த நிறுவனத்து அடிப்படை வேலைகள் அத்தனையும் முடிந்தாயிற்று.

இன்னும் ஒரு மாதம் இதன் நடப்பைக் கூட இருந்து கவனித்துவிட்டு, அவன் சென்னைக்குப் போய்விடலாம்.

அங்கே போனதும், தங்கையின் திருமணம் பற்றிய பேச்சோடு, தன் காதலையும் பெற்றோரிடம் வெளியிட்டு, அவர்கள் மூலமாகவே, சுசரிதா வீட்டில் பெண் கேட்க வேண்டியது என்று மனதுள் திட்டமிட்டு வைத்திருந்தான் அவன்.

அதுதானே, சுசரிதா பெற்றோருக்கக் கொடுத்திருந்த வாக்குறுதிக்குச் சரியாக வரும்?

தங்கை சுவர்ணாவை விடவும், அவன் முழுதாக  ஐந்து ஆண்டுகள் மூத்தவன்  என்பதால் அவனது திருமணப் பேச்சு, ஏதோ அவன் அவசரப்படுவது போலத் தோன்றவும் வழியிராது!

சொல்லப்போனால், சென்ற ஆண்டே, பெற்றோர் இருவரும் அவனது திருமணம் பற்றி அவனிடம் பேசத்தான் செய்தார்கள். அவனுக்குத்தான், அப்போது அதில் ஆர்வம் இல்லாதிருந்தது.

ஏனெனில், அப்போது அவன் சுசரிதாவைச் சந்தித்திருக்கவில்லை!

இப்போதோ, இன்னின்ன, இப்படியிப்படி செய்ய வேண்டும் என்று அத்தனை  திட்டங்களும் அவன் மனதில் இருந்தன.

அவளுடைய பெற்றோருக்கு அளித்திருப்பதாக சுசரிதா சொன்ன வாக்குறுதிக்காகவே இவை அனைத்தும் அவனது மனதில் மட்டுமே இருந்தன!

அவனைப் பொறுத்தவரையில், எல்லாம் தெளிவாக இருந்தபோதும், நிறுவனக் கிளையின் பொறுப்பை ஏற்கும் நண்பனின் தகுதியை, அவன் மனைவி மடத்தனமாகக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விடுவாளோ என்றொரு பயம் மட்டும், அவனைச் சற்றுக் கலக்கியது எனலாம்!

அப்படி நேர்ந்தால், ஒரு நல்ல நண்பனின் வாழ்வு குட்டிச்சவர் ஆவதோடு, சசாங்கனின் திட்டங்களும் குழம்பிப் போகும். இந்தப் பங்களூர்க் கிளையை ஏற்று நடத்த, இன்னோர் ஆள் பார்த்து தயார்ப்படுத்தி . . . எவ்வளவு தாமதம் ஆகுமோ?

ஆனால், சசாங்கனின் இந்த அச்சமே பலித்துப் போயிற்று.

வசுந்தரன், சம்யுக்தாவின் குடும்பத்தில் மேலும் மேலும் சச்சரவுகள் அதிகம் ஆகி, உயிர்த் தோழன், தோழியையும் தாண்டி, விஷயம் வெளியேயும் பரவலாயிற்று.

உறவு அடியோடு முறிந்து விடுமோ என்கிற பயத்தில், திருமணத்தை ஆவலாக நடத்தி வைத்த நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து, கணவன் மனைவிக்குள் சமாதானம் செய்து வைக்க முயன்றனர்.

“தாய்க்குப் பின் தாரம், சிஸ்டர். அந்தத் தாயையே விட்டுவிட்டு, நீங்கள்தான் மேல் என்று மணந்து கொண்டிருக்கிறான். நீங்கள் அவனைச் சற்று அனுசரித்துப் போனால், எல்லாம் சரியாகிப் போகும்!” என்றார்கள், வசுந்தருடைய நண்பர்கள்.

எல்லோரும் தன்னைக் குறை கூறுவதாக எண்ணி, சம்யுக்தா கண்ணீர் சொரியவும், அவளுடைய தோழிகள் அவளுக்காகப் பரிந்து வந்தார்கள். “ஹலோ மிஸ்டர், என்ன பெரிதாகத் தாய்க்குப் பின் தாரம் என்கிறீர்கள்? எங்களுக்கு மட்டும் தாயே கிடையாதா? அல்லது, தாயன்புதான் கிடையாதா? நாங்கள் எல்லோருமே, அவரவர் அம்மாக்களை விட்டுவிட்டுத்தான், இப்படித் தாரமாக வந்து வாழ்கிறோம் என்பது, நினைவிருக்கட்டும். அதிலும், சம்யுக்தா, தாயை அடியோடு விரோதித்துக்கொண்டுதான், வசுந்தரை மணந்திருக்கிறாள். அதை யோசித்து, அவர் அனுசரித்துப் போவதற்கு என்னவாம்?” என்று பதில் கேள்வி கேட்டனர்.

இந்தப் பேச்சில் விரிசல் அதிகமாவதை உணர்ந்து, பேச்சு முறையை மாற்றி, “கோபப்படக் கூடாது. அன்பாக இருக்க வேண்டும். விட்டுக்

கொடுத்து வாழ வேண்டும்.” என்று பொதுப்படையாகப் புத்தி சொல்லிப் பார்த்ததில் எந்தப் பயனும் இருப்பதாகவே இந்த இளந் தலைமுறையினருக்குத் தெரியவில்லை!

அது மட்டுமின்றி, “எல்லாம் அவரவர் நேரடியாக அனுபவப் பட்டால்தானே, புரியும்? ஒன்றுமே தெரியாமல், எல்லாம் தெரிந்த மாதிரி, இங்கே புத்தி சொல்ல வந்துவிட்டீர்களாக்கும்? சும்மா, வாயை மூடிக்கொண்டு போங்கப்பா! எதுவும் தெரியாத உங்கள் பேச்சைக் கேட்டுக் கல்யாணம் செய்து கொண்டதே, படு முட்டாள்த்தனம்!” என்று, அவர்களுக்கு நல்லது நாடி வந்த நட்பு வட்டத்திடமே கணவனும் மனைவியும் பாயவும், இரு தரப்பினருமே, திகைத்துப் பின் வாங்கினர்.

“பிரிய நேர்ந்தால், உயிரையே விட்டுவிடுவோம்” என்று, முன்பு கண்ணீர் விட்டுக் கதறியவர்களின்

ஆனால், அவர்கள் இருவரும் எக்கேடும் கெட்டுப் போய்த் தொலையட்டும் என்று விட்டுப் போகவும், அவர்கள் யாருக்கும் மனம் வரவில்லை!

ஏதோ ஒரு வேகத்திலும், மன அழுத்தத்திலுமாக, உற்ற நண்பர்கள் என்பதையும் மறந்து பேசுகிறவர்கள், இதே மன நிலையில், தப்புத் தண்டாவாக ஏதேனும் முடிவெடுத்துவிடக் கூடாதே!

இந்தப் பயம் வந்ததும், அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து வேறு ஒரு வேலை செய்தனர். இரு தரப்புப் பெரியவர்களுக்கும் தகவல் கொடுத்தனர்.

நட்பு வட்டத்துக்கு அனுபவம் இல்லை என்பதுதானே, இப்போது, இவர்களது குற்றச்சாட்டு?

அனுபவம் உள்ள மூத்த தலைமுறை வரட்டும். வந்து பேசட்டும்! அவர்களை, இந்தக் குறை சொல்ல, இவர்களால் முடியாது அல்லவா?

அத்தோடு, திருமணமாகி ஒரு மாதத்துக்கும் மேலே ஆகிவிட்டது , பிடிக்காத திருமணம் என்றாலும் அதை ஒத்துக்கொண்டு அரைகுறையாகவேனும் ஆசீர்வாதமும் செய்துவிட்டுத்தான் போனார்கள்.

அவர்களும் பிள்ளைகளைச் சேர்த்து வைக்கத்தானே முயற்சிப்பார்கள்?

ஒத்த வயதுத் தோழர்களின் பேச்சை அறியாத்தனம் என்று ஒதுக்கிய தம்பதிகள் இருவரும் பெற்றோர் முன் பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போவார்கள்! அவர்களது சொல்படி, ஒழுங்காகக் குடும்பம் நடத்துவார்கள்!

அதுதானே, இந்தத் தோழர், தோழிகளுக்கும் வேண்டும்?

எனவே, எல்லாத் தோழமைக் கூட்டமும் ஒன்று சேர்ந்து, வசுந்தர், சம்யுக்தா இருவர் வீட்டுப் பெரியவர்களையும் வரவழைத்தார்கள்.

சென்னைத் தலைமை அலுவலகத்துக்கு சசாங்கன் சென்று வருமுன் இது நடந்திருந்தது.

நண்பர்கள் சேர்ந்து சமாதானம் பேசப் போகிறார்கள் என்று சுசரிதா மூலம் அவனுக்குத் தெரியும் என்றாலும், அவன் முன்னிலையில் பல நண்பர்கள் சற்றுச் சங்கடமாக உணர்வதை அறிந்து, சசாங்கன் இங்கிதமாக ஒதுங்கிக் கொள்வான்.

இப்போதும், தலைமை அலுவலக விஜயத்தை இந்தச் சமயத்தில் மேற்கொண்டு, மெல்ல ஒதுங்கிக்கொண்டான்.

ஒதுங்கி, சுசரிதாவிடம் ஒரு பாராட்டையும் பெற்றுக்கொண்டான்.

நட்பினர் எதிர்பார்த்தபடியே, இரு வீட்டுப் பெரியவர்களும், உடனே ஓடி வந்தார்கள்!

எதிர்பாராதது, சின்னவர்கள் இருவருமே, அவரவர் பெற்றோரிடம் காலில் விழுந்ததோடு, கெஞ்சிக் கதறி மன்னிப்புக் கேட்டது!

அதைக் கூட ஓரளவு ஒத்துக் கொள்ளலாம் என்றாலும், அடுத்து நடந்தது, எல்லோரையும் திணறடித்துவிட்டது!

தாயின் மடியில் முகம் புதைத்து அழுத சம்யுக்தா, “நானும் உங்களோடு வருகிறேன்ம்மா. என்னை இங்கே விட்டுவிட்டுப் போவிடாதீர்கள், அம்மா!” என்று கதறிக் கண்ணீர் சொரிந்ததும், “இல்லைடாக் கண்ணு., உன்னை இந்த நரகத்தில் அழ விட்டுவிட்டு, நான் எப்படிப் போவேன்? “ என்று அந்தத் தாய், மகளோடு கூடச் சேர்ந்து கண் கலங்கியதோடு, பெண்ணைக் கூட்டிப் போக ஏற்பாடுகளைச் செய்ததும், அந்த நட்பு வட்டம் சற்றும் எதிர்பாராதவை !

அந்தப் பெற்றோருக்குச் சற்றும் குறைவின்றி, வேலையை விட்டுவிட்டு வா என்று அழைத்தது, வசுந்தரனுடைய உறவு.

“நம்ம கடை, இன்னும் எத்தனை பேருக்கு வேணுமானாலும் சோறு போடும்.  பேசாமல், நீ வீட்டுக்கு வந்திரய்யா!” என்றார் அவனுடைய தந்தை.

“என்னை நம்பி என் சினேகிதன் இந்த அலுவலகத்தைத் தொடங்கி இருக்கிறான்! அதை, இடையில் விட முடியாதுப்பா. “ என்று வசுந்தரன் வருத்தத்துடன் மறுக்கவும்,

“எல்லாம் அந்த ஆளாலே வந்தது! அன்றைக்குப் போலீசைக் கூப்பிடுவேன் என்று, அவன் மிரட்டியதாலே அல்லவா, இந்தக் கல்யாணம் என்கிற கண்ணராவியே நடந்தது! எங்கே அவன்? எல்லாக் குசும்பையும் பண்ணி வைத்துவிட்ட, இப்போ, ஆள் காணாமல் போய்விட்டானா? உருப்படவே மாட்டான். பாவி!” என்று வசுந்தருடைய பெற்றோர் சசாங்கனைச் சபிக்க, அதில் மட்டும், சம்யுக்தாவுடைய பெற்றோரும் சேர்ந்துகொண்டனர்!

தங்கள் படிப்புக்கும், பதவிக்கும் சம்பந்தமே இல்லாத விதத்தில், “அவனைக் கண்டால் குத்திக் கொன்று விடுவேன்., கண்ணை நோண்டி விடுவேன். “ என்று அவர்களும் தங்கள் பங்குக்கு, சசாங்கனுக்கு அர்ச்சனை செய்தார்கள்!

நல்லவேளை, சசி ஊரில் இல்லை என்று எண்ணிக் கொண்டபோதும், இந்தத் திருமணம் ஒரு பெரிய தப்பு என்றே, சுசரிதாவுக்குத் தோன்றியது.

பணம், வசதிகளுக்காக, தெரிந்தே வசுந்தரன் செய்த தப்பு!

அவளது கருத்தையே வலியுறுத்துவது போல, இந்த அளவு வருமானம் வேறு எங்கும் கிடைக்காது என்பதற்காகவே வசுந்தரன் இங்கேயே இருக்க முடிவு செய்ய, அவனுடைய தாயாரும் மகனுடனேயே தங்கப் போவதாக அறிவித்தாள்.

திகைத்த கணவரிடம், “பாருங்கய்யா, பிள்ளை அரை உடம்பாக இளைத்துக் கிடக்கான். உடம்பைத் தேத்தியாக வேணும். கொஞ்சம் அப்படி யிப்படின்னாலும், அங்கே மூத்த மருமகள் பார்த்துக்கிடுவாள். இங்கே, இந்தப் பையனைத் தனியாக விடக் கூடாது. மனசு சரியில்லாமல் இருக்கிற நேரம்! அதனாலே, பிள்ளைக்கு உதவியாக, என்னை இங்கே விட்டுவிட்டு, ஊர் போய்ச் சேருங்கள்!” என்று, மறுப்புக்கு இடமின்றி, உறுதியாகக் கூறினாள், அந்த ஊர்க்காரப் பெண்மணி.

“அம்மா!” என்று தாயின் கையைப் பற்றிக் கண்ணில் ஒற்றிக்கொண்டான் அருமை மைந்தன்!

எல்லாம் பொதுவில்,எல்லோரும் காண நடப்பதுதானே?

உதட்டைப் பிதுக்கிவிட்டு, “நீ கிளம்புடா, செல்லம்! உன் சாமான்கள் என்ன, இரண்டு பெட்டிகள்தானே, இருக்கும்? மிச்சம் மீதி கிடந்தால், போய்த் தொலைகிறது என்று விட்டுவிடலாம். முதலில், நீங்கள் ஒரு டாக்சிக்கு ஏற்பாடு செய்யுங்கள். நிற்கக் கூட முடியாமல் மூச்சு முட்டுகிறது! “ என்று கணவனை ஏவினாள் சம்யுக்தாவுடைய தாயார்.

ஜாடைப் பேச்சுப் புரியாமலா போகும்?

“கண்ட சாமானும், கண்ட இறைந்து, வீடு கண்ணராவியாகக் கிடக்கிறதே! அந்த மேனாமினுக்கி, பையனுக்கு ஒரு வாய் சமைச்சுப் போட்டதில்லை போல! வாங்கி வாங்கிச் சாப்பிட்டு, அப்படியே போட்டு வைத்திருக்கிறாள்! எங்கே பார்த்தாலும், ஒரே அழுக்கு! முதலில் நாற்றம் போக, பினாயில் ஊற்றி, வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும்!” என்றாள் வசுந்தரனுடைய அன்னை!

“முதலில் அதைச் செய்! எல்லா நாற்றமும் சேர்ந்து போகட்டும்! “ என்றார் அவன் தந்தை!

சட்டைக் கையை மடக்கி விட்டுக்கொண்டு சண்டைக்குக் கிளம்பியவரை  சம்யுக்தா தடுத்தாள். “தகராறு வேண்டாம்ப்பா! எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக, இங்கிருந்து நாம் போய் விடலாம்!” என்ற கண்ணீர்க் குரலுக்கு அடங்கி, டாக்சியைப் பார்க்கப் போனார் அந்தத் தந்தை!

கையை அலட்சியமாக உதறிவிட்டு, “வசு ஒழுங்காகச் சாப்பிட்டு எத்தனை நாள் ஆயிற்றோ? பிள்ளைக்கு வாய்க்கு ருசியாக எதையாவது சமைத்துப் போடுவதைப் பார். என்னென்ன சாமான் வேண்டும்? சொல்லு, வாங்கி வருகிறேன். இங்கேதான், அந்த மாதிரி ஒன்றையும் காணோமே!” என்றார் அடுத்த தகப்பனார்.

எப்படியோ, நேரடிக் கைகலப்பு தவிர்க்கப் பட்டு, சம்யுக்தாவின் குடும்பம் கிளம்பிவிட, அடுத்த இலக்காகித் தாக்கப் படுமுன், நட்பு வட்டமும் சத்தமின்றி நழுவிப் போனது!

ஆனால், இந்தத் திருமண முறிவு, அவர்கள் எல்லோருக்குமே மிகுந்த வருத்தத்தைத் தந்தது. எல்லோருமாகப் பொறுப்பேற்று, நன்மை தீமை ஆராய்ந்து,

திட்டமிட்டுச் செய்து வைத்த திருமணம் அல்லவா?

அது தோற்றது, எல்லோருக்குமே, பலமாக ஓர் அடி விழுந்த மாதிரிதான்.

இளமை வேகத்தில், ஆராயாமல் தப்பு செய்துவிட்டோமோ என்ற ஒரு கலக்கம்!

ஆனால், இந்தக் காதல் விவகாரங்களில் இனி மிகவும் எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும் என்று  மனதில் உறுதி செய்துகொண்டதோடு, அவர்களுக்கு விஷயம் முடிந்தது!

அதாவது, சுசரிதா சசாங்கன் தவிர மற்றவர்களுக்கு!

குடும்பத்தை விட்டுத் தனித்திருந்த அந்த ஊரில், இவர்கள் இருவருக்கும், மிக நெருங்கிய நண்பன், சினேகிதி என்பதாலோ, என்னவோ, இந்தத் திருமணம் தோற்றது, அவர்களை அதிகமாகப் பாதித்தது!

“சுந்தர் சுந்தர்” என்று வசுந்தரனின் பார்வை, பேச்சு, அருகாமை அனைத்திலும் சொக்கிப்போய் வர்ணித்ததைக் கேட்டவள் ஆயிற்றே! அநியாயமாகத் தன் தோழியின் வாழ்வை வசுந்தரன் பாழாக்கி விட்டதாக, சுசரிதா நினைத்தாள்.

ஆனால், வெறும் பட்டாம்பூச்சி வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு, தன் சினேகிதனின் சந்தோஷத்தையும், முக்கியமாக அவனது சிறப்பான எதிர்காலத்தையும் சம்யுக்தா கிட்டத்தட்ட அழித்துவிட்டதாக, சசாங்கன் எண்ணினான்.

தன் தோழன் அல்லது, தோழி பக்கம்தான் நியாயம் என்ற கருத்து, இருவருக்குமே இருக்க, அதற்கான காரண காரியத்தையும் அருமையாகக் கோத்து உருவாக்கி வைத்திருந்தனர்!

அத்தோடு நில்லாமல், இவள் எப்படி இன்னமும் சம்யுக்தாவைத் தோழியாகக் கொண்டிருக்கலாம் என்று சசாங்கனும், வசுந்தரனை அடித்து விரட்டாமல், இன்னமும் அவனைக் கூடவே வைத்திருக்கிறானே என்று சுசரிதாவும், ஒருவர் மீது ஒருவரே ஆத்திரத்தை வளர்த்துக் கொண்டும் இருந்தனர்.

உள்ளூரக் குறுகுறுத்துக் குமுறிக் கொண்டிருந்த இந்த எண்ணம், ஒரு முக்கியமான தருணத்தில் வெடித்துச் சிதறி, எரிமலைக் குழம்பாய் எல்லாவற்றையும் நாசம் செய்தது!

பங்களூர்க் கிளையின் பொது நிர்வாகிப் பதவியை வசுந்தரனுக்குக் கொடுத்து, அவன் பதவியேற்று நடத்துவதற்கான மாறுதல்களைச் செய்து கொடுப்பதும், அதன்பின் அலுவலகம் நடைபெறும் விதத்தைக் கண்காணிப்பதுமாகச் சில தினங்கள், சுசரிதாவைச் சந்திக்கச் செல்லவே, சசாங்கனால் முடியாது போயிற்று!

எப்போதுமே, சந்திப்புகளைத் தற்செயல் போலவே அவன் காட்டி வந்ததால், அன்று சந்திக்க முடியாது என்று அவளுக்குத் தெரிவிக்கவும், அவனால் இயலவில்லை! சந்திப்பை முன்கூட்டியே திட்டமிட்ட மாதிரி ஆகிவிடும் அல்லவா?

கூடவே, உள்ளூர இருந்த கோபம் வேறு இருக்கவே, பிடிவாதமாக

அவளைப் போய்ப் பார்க்கவும் அவனுக்கு வேகம் வரவில்லை!

அதே போல, அன்றுவரையில் எந்த விதமான பந்தத்தையும் வெளிப்படையாக ஏற்படுத்திக் கொள்ளாத காரணத்தால், "ஏன் வரவில்லை" என்று, சுசியாலும் உரிமையோடு அவனைக் கேட்க முடியவில்லை!

அத்தோடு, சம்யுக்தா விஷயமாக, இன்னொரு விதத்திலும் சுசரிதா வேதனைப் பட்டுக் கொண்டிருந்தாள்!

இப்போது எப்படி இருக்கிறாள் என்று விசாரிப்பதற்காக ஒரு தரம், சுசரிதா அவளுக்கு ஃபோன் பண்ணியபோது, "மறக்க முயற்சிக்கிறாள். நாங்களும், அதற்காகப் படாத பாடு பட்டுக் கொண்டிருக்கிறோம். தயவுபண்ணி, இப்படி ஃபோன் செய்து, வேண்டாததை நினைவு மூட்டாதேம்மா." என்று அவளுடைய தாயார் சொல்லிவிடத் தோழியோடுகூட, அவளால் பேச முடியாது போயிற்று!

சம்யுக்தாவை, சசிக்குப் பிடிக்காது என்றாலும், தன் வேதனையை சசியிடமேனும் இறக்கி வைக்கலாம் என்றால், அவன், ஆளே காணாமல் போய்விட்டான்!

தோழியும் இல்லாமல், சசியையும் சந்திக்க முடியாமல் போகவே, சுசரிதா மிகவும் தவித்துப் போய்விட்டாள்!

அவனைப் பார்ப்பதிலும், அவனோடு பேசுவதிலுமே திருப்தியும் மகிழ்ச்சியுமாக இருந்தவள். இப்போது திடுமென அவனைக் காணவும் முடியாது போகவும், எந்த விதமான உறவுக்குமான சிறு சூசகம் கூடக் காட்டாமல், இந்த சுசி என்ன நோக்கத்தோடு அவளோடு பழகுகிறான் என்று முதல் முறையாக மூளை கேள்வி கேட்க, அது இன்னுமொரு தவிப்பாயிற்று!

இத்தனையையும், அவள் எப்படியோ சமாளித்திருப்பாள்தான். ஆனால், தொடர்ந்து சசியைப் பாராத துயரம் அவளை வாட்டிய விதத்தில்தான் சுசி ரொம்பவும் மருண்டு கலங்கிப் போனாள் எனலாம்!

சசியின் நோக்கம் பற்றித்தான், பெரும் கலக்கம்!

உரிமையுள்ள நட்பைக் கூட வேண்டாமல், வீட்டை விட்டு வந்திருக்கும் வேற்று மண்ணில், சும்மா ஒரு பொழுதுபோக்குக்காக மட்டுமாய், சசி அவளோடு பழகியிருந்தால்?

நினைத்துப் பார்க்கவும் முடியாமல், நெஞ்சு கசங்கியது, அவளுக்கு!

சசிக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை என்று அவளுக்குத் தெரியும்.

ஏனெனில் வசுந்தரோடு வேலை செய்யும் இருவரை, அவள் கடை வீதியில் சந்திதது, நின்று பேசியிருக்கிறாள். அவனுக்கு ஒன்று என்றால், அது பேச்சிடையே வந்திருக்கும்!

பின்னே?

அவனது செல் எண் அவளுக்குத் தெரியும். ஏதேனும் முக்கியத் தேவை என்றால், கூப்பிடும்படி, அவனேதான் கொடுத்தான்!

இன்று வரை, அவளாகக் கூப்பிட்டதில்லை., கூப்பிட நேர்ந்ததுமில்லை!

இப்போது கூப்பிட்டு, என்னவென்று கேட்டுவிட்டால்?

ஆனால், செல்லில் எண்களை அழுத்தும்போதே, சுசரிதாவுக்குத் தயக்கமும் ஏற்பட்டு விட்டது!

இவ்வளவு ஏங்குகிறாளே, அவளாக அவனை அழைத்து, அவனும் வந்து, இந்த அழைப்பில் தவறாக ஏதேனும் அர்த்தம் கண்டு, தப்பான உரிமை எடுத்துக் கொண்டால், மறுக்கும் திடம் அவளுக்கு இருக்குமா?

இல்லை. அவன் அப்படிப் பட்டவன் அல்ல என்று எண்ணும்போதே, அவளாகப்

பலவீனப்பட்டு அழைக்கட்டும் என்றுதான், தினமும் சந்தித்தவன் திடுமென இத்தனை நாள் தொடர்பே கொள்ளாமல் இருக்கிறானோ என்றும் தோன்றவே, அவளுக்குத் தலை சுற்றிவிட்டது!

அப்படிக்கூட இருக்குமா?

இருக்காது என்று பல முறை தனக்குத்தானே சொல்லிக்கொண்டபோதும், அவள் சசிக்கு ஃபோன் செய்து பேசவில்லை.

சம்யுக்தா எவ்வளவு நம்பிய வசுந்தர், கடைசியில் எப்படி நடந்துகொண்டான்? சசி மட்டும் மாறு என்று, எப்படிக் கணிப்பது?

எதற்கு வீண் வம்பு? வருவதானால், சசியாகவே வரட்டும்!

சசி, சசி என்று இந்த அழைப்பே, அவளது பலவீனத்தைக் காட்டுவதோ?

தான் வளர்ந்த முறை, இங்கே வருமுன் பெற்றோருக்குச் செய்து கொடுத்த வாக்குறுதி

எல்லாம், சுசரிதாவுக்கு வரிசையாக நினைவு வந்தன.

அவள் சுசரிதா! அவளது வாழ்க்கையில் தவறுக்கு இடம்

கிடையாது! நல்லவேளையாகச் சமயத்தில் புத்தி தெளிந்தது!

இந்தச் சமயத்தில், அவளுக்கு உதவி செய்வதற்காகவே உருவாக்கப் பட்டது போல, அவளது அலுவலகத்திலும், ஒரு வாய்ப்புக் கிடைத்தது!

மிகவும் யோசித்து, சுசரிதா ஒரு முடிவு எடுத்தாள்.

நல்லவேளையாக, இன்னமும் அவளைத் தவிக்க விடாமல், அன்று, அவளது அலுவலகத்து அருகில் இருந்த பஸ் நிறுத்தத்தின் அருகே, சசாங்கன் காத்திருந்தான்.

தன்னை மீறிப் பெருகிய கண்ணீரை ரகசியமாகத் துடைத்தவாறே, அண்மையில் இருந்த பீட்சா ஹட்டுக்கு அவனோடு சுசரிதா சென்றாள்.

அங்கே, தனக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பு பற்றி அவள் சொல்ல, தொடர்ந்து நடந்த உரையாடலில், அவர்களது உறவும் அடியோடு முறிந்தது!

# அத்தியாயம் - 8

அவளது அலுவலகத்தில் சுசரிதாவுக்குக் கிடைத்தது, ஒரு பதவி உயர்வு.

இங்கே, இவ்வளவு நாள் அவள் செய்த வேலைக்குரிய பாராட்டாக, ஓர் ஆண்டில் முடிப்பதான ஒரு வேலையை, முழுக்க அவளது பொறுப்பில் கொடுத்தார்கள்.

ஒரே ஒரு பிரச்சினை என்னவென்றால், வேலை செய்ய வேண்டியது, மும்பையில்! தங்கும் இடம், செலவெல்லாம் போகக் கையில் கணிசமான தொகையும் கிடைக்கும்.

தோழியின் திருமண முறிவு, சசாங்கனைப் பற்றிய ஏக்கம், குழப்பம் எல்லாம் தீர, மறக்க, இந்த இடமாற்றம் நல்லது என்று எண்ணி, சுசரிதா இந்த வேலையை ஒத்துக் கொண்டிருந்தாள்.

ஒரு வகையில் வீராப்போடும்தான்.

அதென்ன, இந்த சசாங்கன் நினைத்தால், சந்தித்து, உற்சாகமாக உரையாடுவது., அல்லது, ஒரு வார்த்தைகூடத் தெரிவியாமல், அடியோடு காணாமல் போவதா?

அப்படியெல்லாம், நினைத்தால் மாட்டிக் கொள்ளவும், வேண்டாம் என்றால் கழற்றி எறியவும், அவள் ஒன்றும், அவனது பழம் செருப்பு அல்ல!

அவளும், உயிர், உணர்ச்சிகள் உள்ள மனிதப் பிறவி! அவளுக்கும் தன் வரையில் முடிவெடுக்க முடியும்!

அவன் எப்படி, அவளைப் பாராமல் அலட்சியமாக இருந்தானோ, அதே போல, அவனைவிட்டு வெகு தொலைவில் அவளாலும் இருக்க முடியும்!

இப்படியெல்லாம் தனக்குத்தானே சொல்லிக்கொண்டு, சில நாட்களாகவே சற்று விறைப்பான இந்த மனநிலையில்தான் சுசரிதா இருந்தாள். இப்போதும், உள்ளூர அதே விறைப்போடுதான் தன் அலுவலகச் சேதியை, அவனிடம் சொல்லவும் செய்தாள்.

செய்தி கேட்டதும், பதறவோ, துடிக்கவோ இல்லாமல், “வேண்டாம் என்று சொல்லிவிடு.” என்று சசாங்கள் சர்வ சாதாரணமாகக் கூற . . .வெறுமனே கூறினான் என்று கூடச் சொல்ல முடியாது., அவன் சொன்னால், அது நடக்கும் என்பது போன்ற நிச்சயத்தோடு அவன் கூறவும், அவளுக்குச் சுள்ளென்று கோபம் வந்தது!

ஒரு வாரமாக, ஆள் இந்த ஊரில்தான் இருக்கிறானா, இல்லையா என்றுகூட, அவளுக்குத் தெரியாது!

அதாவது, அவன் தெரிவிக்கவில்லை! தெரிவிக்கும் அளவு, அவளை முக்கியமாகக் கருதவில்லை!

இப்போது, இவன் சொல்லிவிட்டான் என்று, இரண்டு மடங்கு அதிக வருமானம் வரும் ஒரு வேலையை, அவள் மறுக்க வேண்டுமாம்!

ஆண்பிள்ளை என்கிற திமிர்! வசுந்தர் மாதிரியே!

“புரியவில்லையே!” என்றாள் ஒற்றை வார்த்தையாக.

“என்ன புரியவில்லை? இந்த வேலை வேண்டாம் என்று சொல்லச் சொன்னேன்.” என்றான் அவன் மறுபடியும்.

சினம் சீற்றமாக மாற, “அதுதான் புரியவில்லை என்றேன். வேலை உயர்வு, என் அலுவலகத்தில், எனக்குத் தருவது! அதை, ஏற்பதும், விடுவதும் என் விருப்பத்தைப் பொறுத்தது! அப்படி இருக்க, அதை விட்டுவிடும்படி, நீங்கள் என்ன சொல்வது என்று, அதைத்தான் புரியவில்லை என்று, நான் விளக்கம் கேட்டேன்.” என்றாள் அவள், சற்றே ஏளனம் கலந்த குரலில்.

அந்தக் குரலில், அவனுக்கும் ஆத்திரம் வந்தது!

“நான் என்ன சொல்வதா? அது கூடத் தெரியாமலே, தினமும் என்னோடு சுற்றினாய் என்றால், நீ என்ன மாதிரிப் பெண்? சீச்சீ! அந்த சம்யுக்தாவை விட மோசம்!” என்றான் சற்று அருவருத்த குரலில் அவன்.

“என்ன உளறுகிறீர்கள்?”

“உளறலா? இதுவும் புரியவில்லை போலும்! விளக்கம் சொல்கிறேன், கேட்டுக்கொள்! உன் அருமைத் தோழியாவது, அடுத்தவன் பணத்தை அனுபவிப்பதற்காகக் கல்யாணம் வரை போனாள்! கல்யாணத்தில் சில கடமைகளும் உண்டு என்றதும், விட்டுவிட்டு ஓடிவிட்டாள். ஆனால் நீ! எந்தக் கட்டுப்பாட்டுக்குமே தயாராக இல்லை!  அந்த எண்ணமே இல்லாமல், தினமும் சந்தித்து, மணிக் கணக்காக என்னுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு, இப்போது, அதிகப் பணம் கிடைக்கிறது என்றதும் மும்பைக்கு ஓடுகிறாய்! அப்படித்தானே?”

சுசரிதா இப்போது திணறிப் போனாள்.

தற்செயலாகத் தினமும், அவர்கள் சந்திக்க நேர்ந்தது! முன்னரே அறிமுகம் ஆனவர்கள் சந்திக்கும்போது பேசிக் கொண்டிருப்பது

இயல்புதானே?

மணிக்கணக்காக என்பது, மிகைதான். ஆனால், இருவரும் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தது மெய்தான்.

சட்டென்று, நெஞ்சுக்கூடு காலியாவது போல அவள் உணர்ந்தாள்.

இந்தச் சந்திப்புகள், வெகு நேரம் பேசியது எதுவுமே, தானாக நடந்தது இல்லையோ? சசாங்கன் திட்டமிட்டு நடத்தியதா?

என்ன திட்டம்? எதற்காக?

இந்த ஒரு வாரமாய், அவனைப் பாராமல் பட்ட வேதனையும் தவிப்பும் சுசரிதாவுக்கு நினைவு வர, அவள் மேலும் கலங்கிப் போனாள்.

வசுந்தரனாவது, சம்யுக்தாவோடு திருமணம் என்ற ஓர் உறவையேனும் ஏற்படுத்திக் கொண்டான்! இவன்?

தவிப்புடன் அவள் யோசிக்கையிலேயே, சசாங்கன் மேலும் நெருப்பை உமிழ்ந்தான்.

“இப்படித் தினந்தோறும் என்னுடன் சுற்றிவிட்டு, ஒன்றுமே இல்லாத மாதிரி மும்பைக்குப் போய் விடுவாய்! அங்கே, யாரோடு, எப்படி நடப்பாயோ? அங்கிருந்து வந்து, அப்போதும் ஒன்றுமே இல்லாதமாதிரி, உன் பெற்றோர் சொல்லும் இன்னொருவனை மணக்கத் தயாராகவும் இருப்பாயா? கூசவில்லை? “

இந்தக் கடுமையான பேச்சில், சுசரிதாவுக்கு மூச்சு முட்டியது.

ஏன் இப்படிக் கொடூரமாகப் பேசுகிறான்? அவன் வேறு திட்டம் வைத்திருந்து அது நடக்குமுன், அவள் நழுவிவிடுவாளோ என்றா?

அப்படித்தான் இருக்க வேண்டும்!

அவளது திடீர்ப் பயணம் அவனை வெளிப்படுத்திவிட்டது! அவ்வளவே! எவ்வளவு சாதாரண மனிதன்!

என்னவோ, அவர்களுக்கிடையில் ஆழ்ந்த, அழகான ஏதோ இருந்த மாதிரி, என்ன ஒரு ஜாலப் பேச்சு!

அவனைப் பொறுத்தவரையில் அப்படித்தான் என்பது போலவும், அவள்தான் விட்டுவிட்டு ஓடுவது போலவும்!

தப்பைத் தன்னிடம் வைத்துக்கொண்டு, முந்திக்கொண்டு, அதை, அவள் மீது ஏற்றிப் பேசுகிறான்! “முந்தினவன் கை மந்திர வாள்” அல்லவா?

ஆனால், அவன் மனதில் அப்படி ஏதேனும் இருந்திருந்தால், ஒரு

தரமேனும் அன்பாகப் பேசியிருக்க மாட்டானா?

பேசியதே இல்லையே!

தாங்க மாட்டாமல் மனம் ஏங்கிவிட, “தினமும் சுற்றினோம் , சுற்றினோம் என்கிறவர், ஒன்றுமே சொல்லாமல் இருந்தால், நான் என்ன எண்ணுவது?” என்று தன்னை மீறிக் குரல் தளுதளுக்கக் கேட்டுவிட்டாள்.

ஆனால், அப்படிக் கேட்ட வினாடியே, இதை அவளது பலவீனமாகக் கருதித் தனக்கு சாதகமாகப் பயன்படுத்துவானோ என்று தோன்றிவிட, விறைப்புடன் நிமிர்ந்து, “ஆனால், மனதில் ஏதாவது நல்லது இருந்தால்தானே, அது வாயிலும் வரும்? நீங்கள் தப்பான எண்ணத்தோடு என்னுடன் பழகியிருக்கிறீர்கள். அந்த அசிங்க எண்ணம் நிறைவேறுமுன் கைவிட்டுப் போய்விடப் போகிறேன் என்ற ஆத்திரத்தில், என்னைத் தப்பானவளாக்கிப் புண்படுத்த முயற்சிக்கிறீர்கள். ஏதோ, இந்த மும்பை வேலையைத் தந்து, கடவுள் உங்களை இனம்காண வைத்தாரே! அது, என் நல்லகாலம்! இனி, எந்தக் காரணம் கொண்டும், என்னைப் பார்க்கவோ, பார்த்தாலும், என்னுடன் பேசவோ வேண்டாம்! “ என்று சீறிக்கொண்டு எழுந்தவள் சட்டென நின்றாள்.

“ஆகா! நான் நினைத்ததை விடவும் கெட்டிக்காரியாக இருக்கிறாய்! உன் அசிங்க புத்தியை என் மேல் ஏற்றுகிறாயா? உனக்கு, என்ன திமிர் இருக்க வேண்டும்? . . . .” என்று மேலும் கடுமையாக அவன் பேசியதைக் கவனியாதவள் போன்று, கைப்பையைத் துழாவியவள், “பலமுறை இது போன்ற வேளைகளில் நீங்கள் பணம் கொடுத்திருக்கிறீர்கள். அதெல்லாம் நினைக்கும்போது, வாந்தி வரும்போல, வயிற்றைக் கலக்குகிறது! இப்போது என்னால் முடிந்தது . . “ என்று கையில் வந்த ரூபாய் நோட்டுகளை, மேஜை மேல் போட்டுவிட்டு, அதற்கு மேல் நில்லாமல் மடமடவென்று போய்விட்டாள்!

“ஏய் . .ஏய் . .” என்று சசாங்கன் அழைத்ததை அலட்சியம் செய்து!

அன்றளவில், சுசரிதா பற்றிய தன் அபிப்பிராயம்தான் சரி என்றே, சசாங்கன் நிச்சயமாக நினைத்திருந்தான்!

என்ன திண்ணக்கம் இருந்திருந்தால், தன் மீது, இவ்வளவு கேவலமான குற்றத்தை, அபாண்டமாகச் சுமத்தி அவளால் பேச முடிந்திருக்கும் என்று நினைத்து, அந்தக் கோபத்தை வளர்த்தும் இருந்தான்.

அத்தனைக்கும் மீறி, “ஒன்றுமே சொல்லாமல் இருந்தால், நான் என்ன எணணுவது?” என்று தளுதளுத்த குரல், அவ்வப்போது அவனுக்கு நினைவு வரும்.

அப்தோதெல்லாம், நல்ல நடிப்பு என்று அதை ஒதுக்கினான்.

அவனைப் பார்க்கும்போதெல்லாம், கண்ணில் ஓர் ஒளி, முகத்தில் ஒரு புன்னகை என்று, வார்த்தையால் சொல்லாத நேசத்தை, அவள் செய்கையால் காட்டவில்லையா?

அதாவது, காட்டி நடிக்கவில்லையா?

அடேயப்பா! என்ன பிரகாசம்! என்ன மலர்ச்சி! அப்படியே பதிதாகப் பூ விரிவது போல இருக்குமே! கண்களில் அவ்வளவு பளபளப்பைக் கொண்டு வந்தாளே!

அதைப் பார்த்தல்லவா, அவனும் ஏமாந்து போனான்!

தன்னைப் புரிந்துகொண்டாள்., புரிந்துகொண்டு ஒப்புதலாகச் சிரிக்கிறாள் என்றல்லவா எண்ணிவிட்டான்.

அவளுடைய பெற்றோருக்குக் கொடுத்த வாக்கு மட்டும் இல்லை என்றால், இருவருமே வெளிப்படையாகப் பேசி, மகிழ்ந்திருக்கலாமே என்று எத்தனை முறை நினைத்திருப்பான்! வருந்தியிருப்பான்!

அந்த உறுதிமொழியை எண்ணி, அவள் ஒரேயடியாக நத்தையாய்ச் சுருட்டிக்கொண்டு பின்னடைந்துவிட்டால் என்ன செய்வது என்று பயந்தல்லவா, பெற்றோர் மூலமாகவே போய்க் கொள்ளலாம் என்று, பல்லைக் கடித்துப் பொறுத்திருந்தான்!

கடைசியாகப் பார்த்தால், வெங்காயத்தை உரிப்பது போலத்தான்! உள்ளே ஒன்றுமே கிடையாது! எல்லாமே நாடகம்!

காதல் என்று ஒன்றுமே கிடையாது! தங்கள் தங்கள் வசதிக்கு, சில பல தேவைகளை அடைவதற்காக, இளைஞர்கள் இப்படி ஒரு மாயையை உருவாக்கிப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

அதிலும், பெண்கள் அதிகமாக!

அவன் அறிய, முதலில் சம்யுக்தா. அடுத்து சுசரிதா!

ஒரு சாரார் இதைப் பயன்படுத்திக்கொள்ள, அடுத்த இனம், அதில் ஏமாந்து அல்லல் படுகிறது என்று, அப்போது சசாங்கன் நிச்சயமாக நினைத்தான்!

அதாவது, அவன் படுவது போல!

எனவே, பங்களூர்க் கிளையை வசுந்தரன் நிர்வாகத்தில் விட்டுவிட்டுச் சென்னைக்குத் திரும்பி வரும்போது, அவனுள்ளே இருந்த தவிப்பில், காதல் என்ற வார்த்தைக்கே, அவன் விரோதியாக இருந்தான்.

ஏனென்றால், என்ன முயன்றும், அந்தப் பொல்லாத சுசரிதாவை மறக்க, அவனால் முடியவே இல்லை!

திடும் திடும் என்று அவளை நினைப்பதிலும், மறக்க முயன்று முடியாமல் போனதிலுமாக, அவனுள் ஒரு சீற்றம் அதிகரித்துக்கொண்டே போயிருந்தது!

இங்கே வந்து பார்த்தால், அவனுடைய அன்புத் தங்கை சுவர்ணா ஒருவனைக் காதலிப்பதாகப் பெற்றோர் கூறவும், அவனுள் தீயே பிடித்துவிட்டது!

காதல், கீதல் என்ற பேச்சே, இந்த வீட்டில் யார் வாயிலும் வரக் கூடாது என்று கத்துக் கத்தென்று, கத்தித் தீர்த்துவிட்டான்.

அண்ணனிடம் அன்றுவரை, இந்தக் கோபத்தைக் கண்டிராத சுவர்ணா பயந்து நடுங்கி, வாய் மூடி மௌனியாகிவிட்டாள்.

மகள் அருகில் இல்லாத நேரத்தில், அவனுடைய பெற்றோர் வந்து அவனிடம் பேசிப் பார்த்தார்கள்.

“நல்ல இடம்தான், சசி. தீபனும் நல்ல பையனே!” என்று அவர்கள் எடுத்துச் சொல்ல முயன்றதை, அவன் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை!

“இப்போது அப்படித்தான் தோன்றும்! திருமணமாகி ஒரு மாதத்தில் சாயம் வெளுத்துவிடும்! அதில் மாட்டிக்கொள்ளும் நல்லவர்களுக்கு வேதனை மட்டும்தான் மிஞ்சும்! சுவி மிகவும் நல்ல பெண், அப்பா! அவள் கஷ்டப்பட நான் விட மாட்டேன். அப்படி என்னை மீறிச் செய்வது என்றால், உங்கள் விருப்பம்! என் தங்கையின் வாழ்வு அழிவதைப் பார்த்துக்கொண்டு, நான் இந்த வீட்டில் இருக்க மாட்டேன்! “ என்று அவன் பிடிவாதமாக நின்றான்.

அவனது பிடிவாதத்தைப் பார்த்துவிட்டு, சுவர்ணாவே, “வேண்டாம்ப்பா. விட்டுவிடுங்கள். அண்ணன் இவ்வளவு மறுக்கும்போது, தட்டிவிட்டு மேலே எதையும் செய்ய, எனக்குமே மனமில்லை! அண்ணன் மனம் மாறும்வரை, என்னால் காத்திருக்க முடியும். அவரும் காத்திருப்பார் என்றுதான் நினைக்கிறேன். பார்ப்போமே, இது, தீபனுக்கான பரீட்சையோ, என்னவோ? பொறுத்துத்தான் இருப்போமே!” என்று முடித்துவிட்டாள்.

சுந்தரத்துக்கு வருத்தம்தான்.

"என் தப்பு! கெட்டிக்காரனாக இருக்கிறான் என்று, சின்ன வயதிலேயே பொறுப்பைக் கொடுத்துக் கெடுத்துவிட்டேன். ஜெயிக்க, ஜெயிக்க, எல்லாம் தனக்குத்தான் தெரியும் என்ற மமதை, இவனுக்கு உண்டாகிவிட்டது! பெற்றவர்களும், மகள் நன்றாக இருக்க வேண்டும் என்றுதானே பார்ப்பார்கள் என்று யோசிக்கத் தெரியவில்லையே!" என்று மனைவியிடம் வருத்தப்பட்டார்!

எப்போதும் கலகலப்பாக இருக்கும் பெண்மணி, சரோஜினி. அவளுக்கும் வருத்தம்தான்!

மகன்தான், நிறையச் சாதிக்க வேண்டும்., அதன் பிறகுதான் மணம் என்றுவிட்டான். மகள் வயிற்றுப் பிள்ளைகளையாவது, தூக்கிக் கொஞ்சலாம் என்று பார்த்தால், அதையும், இந்தப் பையன் தடுத்து நிறுத்திவிட்டானே என்று வருந்தினாள், அவள்!

இத்தனைக்கும், பையன், பையனுடைய தாயார் எல்லோரும் மிகவும் நல்லவர்கள்!

நல்ல தோற்றம். நல்ல தொழில்!

எல்லா வகையிலும் பொருத்தமான பையனிடம்தான் மனதை விட்டிருக்கிறாள் மகள் என்று மகிழ்ந்தால், இப்படித் தடை வந்துவிட்டதே என்ற வருத்தம், அந்தத் தாய்க்கு!

ஆனால், மகள் சொல்லுவதைப் போல, இதற்கும், ஏதோ காரணம் இருக்கும்., நடக்க வேண்டிய நேரம் நல்லபடியாக நடக்கும் என்று எண்ணி அவளும் மனதைத் தேற்றிக் கொண்டாள்.

ஆனாலும், பழைய கலகலப்பு வீட்டிலிருந்து விடை பெற்றுப் போய்விட்டது!

தானாகச் சிரிப்பதற்கும், மன வருத்தத்தைக் காட்டிக்கொள்ளாமல் இருப்பதற்காகச் சிரிப்பதற்கும், வேறுபாடு இருக்கிறதல்லவா?

ஒரு நாளல்ல., இரண்டு நாட்களல்ல., கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் சென்ற பிறகுதான், சரோஜினி நினைத்த, அந்த "நடக்க வேண்டிய நேரம்" வந்து சேர்ந்தது!

வந்த நேரம், சும்மா வராமல், சசாங்கனின் உச்சந் தலையில் ஓங்கியடித்து, உண்மையை புரிய வைத்து, வந்தது.

முதலும், முக்கியமுமாக, ஆண்பெண் நேசம் என்பது உண்மை என்று புரிந்தது! நேசம் கொண்ட நல்லவர்கள் பற்றிப் புரிந்தது!

முக்கியமாக, சுசரிதாவின் மனப் பாங்கு குறித்து, நன்கு புரிந்தது!

அவளது நிலையில் மனதை நிறுத்தி, திருப்பித் திருப்பி அன்றைய நிகழ்ச்சிகளை அசை போட்டு, ஆராய்ந்து பார்த்தபோதுதான், சுசரிதா என்ன மாதிரி உணர்ந்திருப்பாள், ஏன் அப்படிப் பேசினாள் என்றெல்லாம் அவனுக்குப் புரிந்தது.

"ஒன்றுமே சொல்லாமல் இருந்தால் நான் என்ன எண்ணுவது என்று, குரல் தளுதளுக்க அவள் கேட்டது, இப்போதும் துல்லியமாகக் காதில் ஒலிக்கும்!

அப்படி ஒலிக்கும் போதெல்லாம், அதைச் சொன்னபோது அவள் எப்படித் தவித்திருப்பாள் என்று, அவனால் உணர முடிந்தது. உணர்ந்து, அதற்கு இரு மடங்கு வேதனையை அனுபவிக்கவும் நேர்ந்தது!

அவளைப் பார்க்க வேண்டும்., பார்த்துப் பேச வேண்டும் என்று முன் போலவே, சசாங்கனின் மனம் துடித்தது!

ஆனால், அவள், அவனைக் கண்ணெடுத்துப் பார்ப்பாளா? என்னென்ன பேசிவிட்டான்!

அவளும் பேசினாள்தான். அவனை ரொம்பவும் கேவலமாகவே!

ஆனால், அவள் பேசியது, திருப்பியடிக்கும் செயல்! அவன் பேசியதற்குப் பதிலடி! அவ்வளவே!

அந்த ரோஷம்கூட இல்லை என்றால், அவள் என்ன, உயிரும் உணர்ச்சியும் உள்ள மனிதப் பிறவி?

அந்தக் கோபத்தில், அவனைப் பார்த்துப் பேச சுசி மறுத்தால்கூட, அதில் தப்பே இல்லை என்று வாதித்தது அவன் மனம்.

அவளுக்கு ஆதரவாக, அவளையே விடவும் இரு மடங்கு அதிகமாக!

புதுப் பூ மாதிரிப் பெண்! அவனை அவள் என்ன வெறுத்தாலும் நியாயமே! ஆனால், அவளைக் கண்ட வார்த்தை சொல்லித் துன்புறுத்தியதற்காக, அவளிடம் மன்னிப்பேனும் கேட்டாக வேண்டாமா?

ஆனால், சுசியைத் தேடிப் போனால், அவளைக் கண்டுபிடிப்பது, அவ்வளவு எளிதாக இருக்கவில்லை!

அலுவலகத்தில் கேட்டால், யாருக்கும் முகவரியைக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள்.

அவனறிய நெருங்கிய தோழி சம்யுக்தா! அவளுக்கும் தெரியவில்லை!

அதற்கு மேலாக, வெளிப்படையாக அதிகம் விசாரித்துத் தேடவும், அவனுக்கு மனம் வரவில்லை!

அவள் பெற்றோருக்கு அடங்கிய பெண். ஒரு வேளை, அவர்கள், அவளுக்கு ஏதாவது வாழ்க்கையை அமைத்துக் கொடுத்து, மறுக்க முடியாமல், அவளும் அதை ஏற்றிருந்தால்? இவனது தேடலே, அவளுக்குத் துன்பமாகி விடலாம் அல்லவா?

சசாங்கன் நம்பிக்கை இழந்து, ஓய்ந்திருந்தபோதுதான், கடவுளாகப் பார்த்து, அவளை மறுபடியும், அவனது கண்ணில் காட்டியது!

பார்த்ததே அவனுக்கு சந்தோஷம்தான் என்றாலும், அத்தோடு திருப்தி அடைய, அவனால் முடியவில்லை!

நடுவில் நடந்தது எல்லாம் மறைந்துபோய், அவள், அவனுக்குக் கிடைப்பாள் என்றால் . . . அந்த சொர்க்கம் அவனுக்குக் கிடைப்பது சந்தேகமே!

ஆனால், குறைந்த பட்சமாக அவளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமே!

ஒரு வேளை மன்னித்தாள் என்றால், அப்புறம் மேலே . . .

யாரோ விளக்கைப் போட்டார்கள்.

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தால், அவனுடைய தாயார்.

அவளுமே, மகன் ஜன்னலருகே நிற்பதைப் பார்த்துச் சற்றுத் திகைத்தாள்.

உடனேயே முறுவலித்து, “என்னடாம்மா, மணி நாலுதான் ஆகிறது. அதற்குள்ளாகவா, விழித்துவிட்டாய்? நாங்கள்தான், சுவி தலைக்குக் குளித்து, கூந்தல் காய்ந்து, அலங்காரம் பண்ண வேண்டுமே என்று சீக்கிரமே எழுந்தாக வேண்டும். நீ சற்றுத் தூங்குவதற்கென்ன? போ. போய்ப் படுத்துத்தூங்கு! இன்னும் ஒரு மணி நேரமாவது, தூங்கலாமே!” என்றாள் பரிவுடன்.

தாயின் கரிசனம் மனதிற்கு ஆறுதல் அளிக்க, “என் தூக்கம் இருக்கட்டும்மா. இப்போது என்ன தேடி வந்தீர்கள்?” என்று வினவினான் மைந்தன்.

“ஹேர் டிரையர்ப்பா. எடுத்து வைத்தேன். ஆனால் எதில் வைத்தேன் என்று மறந்துவிட்டது. ஏதோ, உன் சாமானோடு என்று மட்டும் ஞாபகம். எதில் என்று . . . “ என்று பார்வையால் அறையை அலசினாள் அன்னை.

“கிளம்பும்போது கடைசியாக நினைவு வந்து எடுத்துத் தந்ததுதானே?

நான் பத்திரமாகப் பெட்டியில் வைத்தேன். “ என்று , அதை எடுத்துக் கொடுத்தான்.

கொடுத்துவிட்டு, “பார்த்தீர்களா, அம்மா? நான் விழித்திருந்ததால்தானே, இப்படி உடனே எடுத்துக் கொடுக்க முடிந்தது! கும்பகர்ணனாகத் தூங்கிக் கொண்டிருந்தால், எவ்வளவு நேரம் தேட நேர்ந்திருக்குமோ? என் மறதிக்கார அம்மாவுக்கு உதவுவதற்காக, எவ்வளவு கெட்டிக்காரனாக, இந்த விடிகாலையிலும் விழித்திருக்கிறேன், பாருங்கள்!” என்று, மார் தட்டி, ஜம்பம் அடித்தான்.

“மறதிக்கார அம்மாவா? ஆனால், அம்மா என்கிறாயே, நீ யாரப்பா? என் பிள்ளை அறைக்குள் வேறு வந்து உட்கார்ந்திருக்கிறாய்? “ என்று புருவம் சுருக்கிக் கேட்டுவிட்டுச் சிரித்தாள் சரோஜினி.

கேட்கும்போதே மகன் முகத்தைக் கவனித்து, “இரவும் ரொம்பத் தாமதமாகப் படுத்தாயாம்மா? கண்ணெல்லாம் சிவந்து கிடக்கிறதே! மெய்யாகவே, சற்று நேரம் படுத்துத் தூங்க முயற்சிசெய். ஐந்தரை மணிக்கு எழுப்பிவிட ஆள் அனுப்புகிறேன். அதனால், அதிகம் தூங்கிவிடுவாயோ என்ற பயமின்றிப் போய்ப் படு! போ!” என்றுரைத்து, விளக்கை அணைத்துவிட்டு, “டிரையரோ”டு வெளியேறினாள் தாய்.

இரவு அவன் உறங்கவே இல்லை என்று தெரிந்தால், இந்தத் தாய்க்கு எப்படி இருக்கும்?

# அத்தியாயம் - 9

மணமகளுக்கு அண்ணனாக, சுவர்ணாவின் அருகிலேயே சசாங்கன் பெரும்பாலும் நிற்க வேண்டியிருந்தது. சும்மா நிற்பது அல்ல.

இந்த மாலைத் தட்டைக் கொஞ்சம் அந்தப் பக்கம் வையுங்கள், அதை எடுத்துத் தாருங்கள், இன்னும் கொஞ்சம் நெய் வேண்டும். சமையல்கட்டிலிருந்து வாங்கிவரச் சொல்லுங்கள் என்று, திருமணம் நடத்தும் புரோகிதர் அவ்வப்போது கேட்கையில் உடனே உதவுவதற்காகவும், பக்கத்தில் இருப்பது, அவசியமாக இருந்தது!

சந்தோஷமான பணிதான்.

புன்னகையும், பொன்னகையுமாகத் திருமண அலங்காரத்தில் தங்கையைப் பார்க்கையில் , நெஞ்சு பூரித்து விம்மிதமுற்றது!

விழிக் கடையில் அரும்பிய நீரை, அன்னை சுண்டி விட்டபோது, இன்னமும் அதிகமாக!

ஆனால் கூடவே, இதுபோல உறவினர் யாரும் இல்லாமல், இளைஞர்களாக நடத்திய இன்னொரு திருமணமும் கூடக் கூட நினைவு வந்துகொண்டே இருந்ததுதான் , அவனுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது!

சம்யுக்தா திருமணத்தின்போது நடந்தவை, மனதில் படமாக ஓட, அதிலுமே சுசரிதா நின்றது, நடந்தது, சிரித்தது என்று அவன் மனதில் பதிந்திருந்த அந்தக் காட்சிகள் இன்னமும் தெளிவாகத் தெரிந்தன. ஆனால், அவனைப் போலவே, அங்கேயே மணமகனோடு நின்ற சுசியை அறியாதவன் போன்று நிற்கும்படி ஆனதுதான், அவனுக்கு மாபெரும் சோதனையாகத் தோன்றியது!

இங்கே தீபன், சுவர்ணா கழுத்தில் தாலி கட்டினான்!

பார்த்துக் கொண்டிருக்கும்போதே, வசுந்தர், சம்யுக்தாவுக்குத் தாலி கட்ட, மணமகளின் விருப்பப்படி, சுசரிதா கடைசி முடிச்சைப் போட்டாள்.

இங்கே மணமக்கள், அதற்கென்றே அழகாகத் தொடுக்கப் பட்டிருந்த மெல்லிதான ஒரு மல்லிகை மாலையைக் கொண்டு மாலை மாற்றினர்!

அங்கே, இரண்டாவது மாலை வாங்காததால், தடிமனான ரோஜா மாலையையே மாற்றி மாற்றிஅணிவிக்க, ஒவ்வொரு தடவைக்கும்,

அதிலிருந்த ரோஜா இதழ்கள் உதிர, “என்னப்பா, மூன்றாம் தடவைக்கு நார் மாலையா?” என்று ஒரு நண்பன் கிண்டலடிக்க, மணமக்கள் உட்பட, எல்லோரும் நகைத்தனர்.

அத்தோடின்றி, “என்னதான் பசி என்றாலும், மாலையில் உள்ள பூவையெல்லாம், இப்படியா சம்யூ சாப்பிடுவது? கேட்டால், ஒரு காஃபி கூடவா, தரமாட்டோம்? இப்போது மிஸ்டர் பூபதி நார் மாலை என்கிறார், பார்!” என்று, சுசரிதா அலுப்புக் காட்டி உரைக்க , இன்னொரு தரம் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தனர்!

சிரிப்பினால் பளபளத்த சுசியின் கண்களைச் சந்தித்ததும் சசிக்கு அச்சுப் பிசகாமல் நினவு வர, இதிலிருந்து, விடுதலையே இல்லையா என்ற தவிப்புடன் கண்களை அழுந்த மூடித் திறந்தால், எதிர்ப் புறமாக, சுசரிதாவும், அதே போலச் செய்து கொண்டிருப்பது, சசாங்கனுக்குத் தெரிந்தது!

ஒப்பனையால் மறைக்க முயன்றும் முடியாத சிவந்து தெரிந்த கண்கள்!

அவனைப் போலவே, அவளுக்கும் தூக்கமில்லை!

பழைய நினைவுகள் அவளையும் பாதிக்கின்றன என்று சசிக்கு உள்ளம் துள்ளுமுன், முகத்தைத் திருப்பி, அவள் பேசினாள்.

“இரவு தாமதமாகப் படுத்ததோ, என்னவோ, காலையில் விழித்ததில் இருந்தே ஒரே தலைவலி! பெரியம்மாவானால், மாத்திரை போட்டுக் கொண்டேனும், தீபண்ணனோடுதான் நின்றாக வேண்டும் என்கிறார்கள்! ஆனால், இந்த மேளச் சத்தம், தலையைப் பிளந்துவிடும்போல இருக்கிறது! எனக்குப் பதிலாக இனிமேல், நீ அண்ணன் பக்கத்தில் நில்லேன், சுதா?” என்று பாவாடை தாவணியில் பளிச்சென்று இருந்த தங்கையிடம் கேட்டாள் அவள்.

“உக்கும்! ஆசையைப் பார். காலில் வேர் முளைத்த மாதிரி, நான் இங்கே ஒரே இடத்தில் நிற்க வேண்டும்., நீ ஜாலியாகச் சுற்றிவிட்டு வரலாம் என்று பார்த்தாயா? அதெல்லாம் முடியாது! பெரியம்மா உன்னைத்தானே, நிற்கச் சொன்னார்கள்? நீயே நில்லு! நான், சமையல்கட்டில், ஒரு பிஸ்தா ரோல் எடுத்துத் தின்னப் போகிறேன்!” என்றுவிட்டு, ஜிமிக்கி குலுங்க ஓடிப் போனாள், தங்கை.

கிட்டத்தட்ட, சுசரிதா சொன்ன அதே காரணமாகவேதான், சசாங்கனும், தங்கை அருகிலேயே நின்று கொண்டிருந்தான்.

தங்கை பக்கத்தில் வீட்டு மனிதனாக நிற்பது!

சும்மாவே அழகி! இப்போது பட்டுச்சேலையும் நகைகளுமாக ஜொலித்த

சுசரிதா காந்தம் போலக் கண்களை இழுக்க, அவளைப் பார்த்தும் பாராதது போல நிற்க வேண்டிய நிலையே, அவனுக்குப் பெரும் சித்திரவதையாக இருந்தது!

இதற்கு மேல், பழைய நினைவுகள் வேறு!

அவளுக்கும் அதே பிரச்சினையாகத்தான் இருக்கும் என்று ஓர் அற்பத் திருப்தி அடையப் பார்த்தால், அதுவும் இல்லை, தலைவலி என்கிறாளே!

ஒரு கணம் ஏமாற்றமாக உணர்ந்தவனுக்கு, உடனேயே சுசரிதா தலைவலியில் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறாளே என்று மனம் வலித்தது.

அவளிடம் கேட்கவோ, அவளுக்கென்று தனிப்பட எதையும் செய்யவோ தைரியம் இல்லாமல், திருமண வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த நிறுவன ஆள் ஒருவரை அழைத்து, “இங்கே எல்லோருக்கும் தொண்டை காய்ந்துவிட்டது. சூடாகக் காஃபி அனுப்புங்கள்! சற்று சீக்கிரமாக.” என்று சொல்லி அனுப்பினான்.

இந்தப் பேச்சைக் கவனித்துவிட்டு, “என்னண்ணா, தொண்டை வறண்டால், குளிர் பானம் ஏதாவது சொல்லுங்களேன்.” என்றாள் சுவர்ணா.

தலைவலிக்குக் காஃபிதான் இதமாக இருக்கும் என்று அவளிடம் எப்படிச் சொல்லுவது?

“அதில்லைம்மா. குளிர்பானம் என்றால், ஓரொருத்தருக்கு, ஒவ்வொன்று பிடிக்கும்., பிடிக்காது என்று இருக்கிறது! காஃபி என்றால் அப்படியில்லை பார்! எல்லோரும் குடிப்பார்கள்! குறைந்த பட்சமாக, நம் பக்கத்தில் . . . என்ன பழனி, போங்கள். போய்க் காஃபிக்கு ஏற்பாடு செய்யுங்கள்!” என்று, அண்ணன் தங்கை பேச்சைக் கேட்டுத் தயங்கி நின்றவரைப் போகச் சொன்னான் சசாங்கன்.

காஃபியும் விரைவிலேயே வந்தது.

அவன் சொன்னது போல, மேடை மேல் இருந்த பலரும் காஃபியை விருப்பமாகவே வாங்கி அருந்தினார்கள். பிஸ்தா ரோலைத் தின்றுவிட்டு வந்த சுதா உட்பட!

ஆனால், அவன் யாருக்காகக் காஃபியை வரவழைத்தானோ, அவள் அதைக் கையில் வாங்கக் கூட மறுத்தாள்.

“ஏண்டாம்மா, தலைவலி என்றாயே! காஃபி குடித்தால் தலைவலிக்கு இதமாக இருக்கும், காஃபி அருமையாக இருக்கிறது., குடி. .” என்று

மணமகனுடைய தாயாரும், சுசரிதாவுடைய பெரியன்னையுமான அன்னபூரணியும் கூடத் தங்கை மகளிடம் சொல்லிப்  பார்த்தாள்.

ஆனால், ஒரே பிடிவாதமாக மறுத்ததோடு, “கொஞ்சகாலமாவே, சுமார் ஆறேழு மாதங்களாக, எனக்குக் காஃபியே பிடிப்பதில்லை, பெரியம்மா! காஃபி, அது தொடர்பான எதுவுமே! அதனால், அடியோடு விட்டுவிட்டேன்! “ என்று காரணம் வேறு சொன்னாள் பெண்!

பங்களூருவில் காஃபி ஷாப்புக்கு அழைத்துப் போன அவனையும் பிடிக்காததால் விட்டுவிட்டதாக, அவனுக்குக் குறிப்பால் உணர்த்துகிறாளாம்!

அவளுக்காகக் கொண்டு வரச் சொன்னதைப் புரிந்துகொண்டு வேண்டாம் என்றாளா? அல்லது, அவன் கொண்டுவரச் சொன்னதற்காக வேண்டாம் என்றாளா?

இரண்டுமே அவனை வெறுத்து ஒதுக்குவதுதான்! இதில் எந்தக் காரணமாக இருந்தாலும், அதில் என்ன லாபம்?

ஆனால், ஆறேழு மாதங்களாக, அவன் சம்பந்தப் பட்டதைக்கூட விலக்குவதானால் .
 வெறுப்பு எவ்வளவு ஆழமாக வேரோடிப் போயிருக்க வேண்டும்?

“சார், அந்தக் காமாட்சி விளக்கை எடுத்து, மாப்பிள்ளையோட சகோதரி கையிலே கொடுங்கள். விளக்கோடு சகோதரி முன்னே செல்ல, பின்னோடு போய், மணமக்கள் அக்கினியை மூன்று தரம் வலம் வரட்டும்! “

என்னவோ, வலிக்கு ஆறுதலாக இருந்தது சசிக்கு.

ஒளி விளக்கை அல்லவா எடுத்து, அவள் கையில் கொடுக்கச் சொல்லுகிறார்!

ஏற்றப்பட்ட விளக்கு இருந்த தட்டை எடுத்து அவளிடம் கொடுத்தபோது, அவனை ஏறிட்டும் பாராமல், சுசி தட்டை வாங்கிக் கொண்டது கூட, அப்போது பெரிதாக வலிக்கவில்லை!

ஆனால், தொடர்ந்து, அவன் ஒருவன் அங்கே இல்லாதது போன்ற பாவனையுடன் அவள் நடந்துகொண்டது, கஷ்டமாகவே இருந்தது!

இந்தப் பாராமுகம் மற்றவர்களுக்கும் புரியக் கூடும்தானே? இப்போது இல்லாவிட்டாலும், விரைவில் தெரிந்துதான் தீரும்!

அதைப் பார்த்து, யாரேனும், என்னவென்று கேட்குமுன்பாகச் சீக்கிரமே, அவளிடம் தன்னை விளக்கிவிட வேண்டும் என்று எண்ணினான்

சசாங்கன்.

அது மட்டுமல்ல. அவனுக்கே பொறுமையை இழுத்துப் பிடிப்பது கடினமாக இருந்தது!

பெண் வீட்டுக்காரன் என்கிற பிரச்சினை இருந்தாலும் கூட, நல்ல காரியம் சிறப்பாக நடந்தேறிவிட்டதால், எல்லோரும் இறுக்கம் தளர்ந்து இலகுவாகப் பழகும் நேரமும் வந்துவிட்டதுதானே?

பிறர் கண்ணை உறுத்தாத அளவு, மெல்ல சுசரிதாவைப் பின் தொடரலானான் சசாங்கன்.

ஆனால், அவளும் கெட்டிக்காரி அல்லவா?

அதுவும், சூடு பட்ட பூனை!

அவனது அணுகுதல்களைத் தற்செயலான சந்திப்புகள் என்று அப்போது எண்ணியிருந்தாலும், அவை, தற்செயல் போலத் தோன்றும்படி சசாங்கனால் ஏற்படுத்தப் பட்டவை என்று, இத்தனை நாளில் கண்டுபிடிக்காமலா இருப்பாள்?

கண்டுபிடித்ததாலேயே, இன்னமும் எச்சரிக்கையோடும் இருந்தாள்.

திருமணம் முடிந்து, பரிசளிப்புகள், வாழ்த்துகள் எல்லாம் முடியவே வெகு நேரம் ஆயிற்று.

அடுத்து, இருவர் இடங்களிலும் மணமக்கள் பால் பழம் அருந்தித் திரும்பி வந்து, காப்பு அவிழ்த்து, சாஸ்திரிகளை அனுப்பும் வரை, சசாங்கனுக்கே வேலைப் பொறுப்பு சரியாக இருந்தது!

திருமண விருந்தின்போது, பந்தி விசாரிப்பது போலப் பக்கத்தில் போனால், அவள், அருகில் இருந்த யாரோ உறவுக்காரப் பெண்மணியோடு, ரொம்பத் தீவிரமாக உரையாடிக் கொண்டிருந்தாள்.

அதை, உரையாடல் என்றே சொல்ல முடியாது. அந்த நடு வயதுப் பெண்மணி சொன்னதை, மிகுந்த கவனத்துடன் கேட்கும் பாவனையில், பார்வையைக்கூட அந்தம்மாவிடம் இருந்து திருப்பாமல் அமர்ந்திருந்தாள்.

அப்போதும் விடாமல், “ஏதேனும் வேண்டுமா? கொண்டு வரச் சொல்லவா?” என்று சசி கேட்கத்தான் செய்தான்.

ஆனால், “உங்களுக்கு வேண்டுமானால் சொல்லுங்கள், அத்தை!” என்று, அத்தையிடம் இருந்த பார்வையை அகற்றாமல் பெரியவளையே பேசச் செய்துவிட்டு, அந்தம்மாள் ஏதோ சொல்லி முடித்ததும், அவனை

அலட்சியம் செய்து, "அப்புறம் என்ன ஆயிற்று, அத்தை?" என்று, பழைய பேச்சையே தொடர்ந்தாள் சுசி!

உணவின் பிறகோ, சுசியைக் கண்ணிலேயே காணோம்.

அவளைக் குறிப்பிட்டுக் கேட்க முடியாமல், ஐஸ்கிரீம், குளிர்பானம், யார் யாருக்கு வேண்டும் என்று விசாரிப்பது போல, மாப்பிள்ளை வீட்டார் இருந்த அறைகளுக்குச் சென்று பார்த்தான்.

தாய்க்கும், பெரியன்னைக்கும் பின்னே அமர்ந்துகொண்டு, தனக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லாதது போலக் கதைப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள், சுசரிதா.

அவள் எழுந்து சென்றால், பின்னோடு போய், "உன்னிடம் ஒரு விளக்கம் சொல்ல வேண்டும். தயவு பண்ணி, அதைக் கேட்க மட்டுமேனும் செய்." என்று மடமவென்று சொல்லி விட வேண்டும் என்று எண்ணி, "மற்ற அறைகளில் இருக்கிறவர்களுக்கு என்னென்ன வேண்டும் என்று, கேட்டுச் சொல்லுங்களேன், அத்தை!" என்று மணமகனுடைய தாயிடம் உரிமையோடு, பதவிசாகவும் கேட்டுக்கொண்டான் சசாங்கன்.

"அதற்கென்னப்பா?" என்று தங்கை மகளிடம் திரும்பி, "சுசிம்மா . . ."என்று அந்த அம்மாள் தொடங்குமுன், அருகில் கிடந்த ஒரு செல்லை எடுத்து, அவள் கையில் கொடுத்தாள் சுசரிதா.

"அங்கே தீபண்ணன் சினேகிதர்கள், இன்னும் யார்யாரோ தெரியாத உறவுக்காரர்கள் எல்லாம் இருப்பார்கள். நீங்களே கேட்டுச் சொல்லி விடுங்கள், பெரியம்மா!" என்று மீண்டும் புத்தகத்துக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

சூதறியாமல், "அதுவும் நல்ல யோசனைதான். " என்று ஒவ்வோர் அறையிலும் இருந்தவர்களுக்கு ஃபோன் செய்து விவரம் கேட்டுச் சொல்லி அனுப்பினாள் அந்த அம்மாள்.

சலிப்பின்றி, மாலை வரவேற்புக்கு எவ்வளவு பூ வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மீண்டும் வந்து நின்றான் சசாங்கன்.

"பூ நிறைய வந்திருக்கிறது, அத்தை! என்னென்ன பூ வேண்டும் என்று, யாரையாவது அனுப்பி எடுத்துக் கொள்ளும்படி, அம்மா சொல்லச் சொன்னார்கள்." என்று

தாயின் செய்தி போலத் தெரிவித்தான்.

இயல்பாக சுசரிதாவைத்தானே அனுப்புவார்கள் என்பது, அவனது

கணிப்பு!

மறுப்பது, அவளுக்கும் கடினமே!

ஆனால், “தங்கை கல்யாணத்தில், உனக்குத்தான் ஒரே வேலை! இல்லையாப்பா?” என்று அவனைப் பாராட்டிய அன்னபூரணி “சுசி, நீ . . “ என்று தொடங்கும்போதே, “ஐயையோ, நான் மாட்டேன், பெரியம்மா. அங்கே அவர்களிடம் போய், அது வேண்டும், இது வேண்டும் என்று சொல்ல, எனக்குக் கூச்சமாக இருக்கும்! நீங்கள் அண்ணியை அனுப்புங்கள். தாய் வீட்டு ஆட்கள் என்பதால், அண்ணிக்குத் தயக்கம் இராது!” என்று முடித்துவிட்டாள் சின்னவள்.

“நான் அண்ணியோடு போகிறேன்!” என்று புது அண்ணி மயக்கத்தில் சுதாவும் கிளம்பிவிட, சசாங்கன்தான் வாயை மூடிக்கொண்டு, திரும்பும்படி ஆயிற்று!

லேசாகத் திரும்பி ஓரக் கண்ணால் பார்த்தால், இன்னொரு புத்தகத்துள் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்தாள் சுசி.

சற்றுத் தயங்கி, “சுவிம்மா, என்னென்ன பூ, எவ்வளவு வேண்டும் என்று கேட்காமலே வந்துவிட்டோமே! எதற்கும், திரும்பிப் போய்க் கேட்டுவிட்டு வருவோமா?” என்று தங்கையிடம், சசாங்கன் கேட்டான்.

“ பூ மொத்தமாக “ஆர்டர்” செய்திருப்பதாக அம்மா முன்பே சொல்லியிருந்ததால், நாங்கள் ஏற்கனவே, அதெல்லாம் பேசி முடித்துவிட்டோம். எனக்கு அலங்காரத்துக்கும் சேர்த்து, அங்கேயே எடுத்து வரும்படி, அத்தை சொன்னார்கள். சுசி, சுதா, நான் மூவரும் கொஞ்சம் ஒரே மாதிரி தோன்றும் வண்ணம் அலங்காரம் செய்துகொள்ளப் போகிறோம். அங்கே எல்லோரும் நல்ல குணம் . . . “

அண்ணனின் தவிப்பு அறியாமல், சுவர்ணா தன் புதிய உறவுகள் பற்றி வளவளத்துக்கொண்டே வந்தாள்.

அதே மண்டபத்தில் கணவன் வீட்டாரோடு அவ்வளவு நேரம் இருந்த மகளைப் பார்த்ததும், ஏதோ காணாததைக் கண்ட மாதிரி, சரோஜினி உருகி உபசரித்தது, அண்ணன் தங்கை இரண்டு பேருக்குமே, வேடிக்கையாக இருந்தது!

“எங்களுக்கு ஒன்றும் வேண்டாம்மா. மதியம், உங்களோடு சேர்ந்து உட்கார்ந்துதானே, நாங்களும் சாப்பிட்டோம். ஊகூம். பலகாரம் எதுவும் வேண்டாம்! காஃபிக்குக் கூட, வயிற்றில் இடமில்லை!” என்றாள் சுவர்ணா.

“எனக்கும் அப்படித்தான்!” என்று சுவர்ணாவோடு ஒத்துப் பாடிய

சுதா திடுமென, "ஒன்று தெரியுமா, அண்ணி. . .ஒன்று என்றால், வெறும் "ஒன்று" அல்ல! ஒரு விஷயம்! என்னவோ, எங்கள் சுசிக்கா, காஃபியே குடிப்பது இல்லை என்று ஒரு போடு போட்டாளே, எல்லாம் பொய்! அவள் நன்றாக காஃபி குடிப்பாள். நிறைய அல்ல! தினம் இரண்டு கப் கட்டாயம்! அப்புறம், எப்போதாவதும்! நேற்று ஏனோ, அக்காவுக்குக் குடிக்கப் பிடிக்கவில்லை! "லிப்ஸ்டிக்" அழிந்துவிடும் என்று நினைத்தாள் போல. . . ." என்று அளந்துகொண்டே போனாள்.

"ஓகோ, அப்படியா? இப்போது பூவைப் பார்ப்போம், வா!" என்று சின்ன நாத்தனாரைக் கூட்டிச் சென்றாள் சுவர்ணா.

அப்படியானால், அவன் வரவழைத்தது என்றுதான், குடிக்க மறுத்திருக்கிறாள்!

ஆனால், முன்பே நினைத்தது போல, எதற்காக என்றாலும், மறுப்பு, மறுப்புதானே?

இப்போது வெகுளித்தனமாக சுதா "ஏனோ பிடிக்கவில்லை" என்றது போல, எத்தனை பேர் நினைத்தார்களோ?

ஏன் பிடிக்கவில்லை என்று யோசிக்கவும் தொடங்கலாம்.

இது பெரிதாகுமுன், சுசரிதாவிடம் பேசிவிடுவது நல்லது!

ஆனால், பலபேர், அவர்களிலும் பெரும்பாலோர் உறவினர்கள், நடமாடும் திருமண மண்டபத்தில் இதற்கு மேல் அவளை அணுகுவது எப்படி?

அதுவும், அவள் மிகுந்த முன்னெச்சரிக்கையோடு, அவனைத் தவிர்த்துக் கொண்டிருக்கும்போது? சூடுபட்ட பூனை உதாரணம்தான் இருக்கிறதே! இரு மடங்குக் கவனமும் இருக்கும்!

இதற்கு மேல், இங்கே அவன் முயற்சி செய்தால், அதுவே பேச்சுக்கு இடமாகிவிடக் கூடும்!

யோசித்துவிட்டு, அவன் வேறு வழி ஒன்றை நிச்சயித்தான்.

திருமணம் முடிந்த மறுநாள், "சம்பந்தம் கலப்பது" என்று மணமக்கள் இருவருடைய குடும்பங்களும், நெருங்கிய உறவினரோடு சேர்ந்து விருந்து உண்டார்கள்.

விருந்து முடிந்து திரும்பிச் சென்றுவிட்டு, அடுத்த நாள் காலையில், பெண்ணும் மாப்பிள்ளையும், பெண் வீட்டுக்கு "மறுவீடு" வருவதாக ஏற்பாடு.

அதற்கு மறுநாள், சுசரிதாவுடைய குடும்பம் அவர்களுடைய ஊரான

சிவகாசிக்குச் சென்றுவிடப் போவதாகக் கேள்வியுற்ற சசாங்கன், தங்கை மறுவீடு வரும் நாளை, சுசியைச் சந்திப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டான்.

சுவர்ணா கணவனோடு, பெற்றோர் வீட்டில் இருப்பாள்.

மறுநாள் கிளம்புமுன் சில சாமான் வாங்க வேண்டும் என்று, சுசரிதாவுடைய அன்னை தன் தமக்கையோடு “ஷாப்பிங்” செல்வதாகத் திட்டம் இருந்தது, சசாங்கன் காதில் விழுந்திருந்தது!

அவன்தான், சுசரிதா விஷயத்தில் காதைத் தீட்டி வைத்துக்கொண்டு அலைந்தானே!

அவளுக்காக ஏதோ வாங்குவதற்காகத்தான் சகோதரிகள் கிளம்புவதாக ஏற்பாடு!

சுசரிதாவையும் கூப்பிட்டுக்கொண்டு இருந்தார்கள். ஆனால், அவள்தான் கூடச் செல்ல மறுத்துக் கொண்டிருந்தாள்.

மும்வை வேலை முடிந்து வந்து, உடனே திருமணப் பரபரப்பு, அது இது என்று அலுப்பாக இருப்பதாகவும், பெரியவர்கள் பார்த்து வாங்குவது நன்றாகத்தான் இருக்கும் என்பதால், அவள் வரவில்லை என்று சொன்னதாகவும், அவளுடைய தங்கை சுதாவின் வாயரட்டையில் வெளி வந்திருந்தது!

ஆனால், தான் அன்னையரோடு போகப் போவதாகவும், அவள் சொல்லியிருந்தாள்.

“அப்படியே, எனக்கும் ஒன்றிரண்டு பீராயலாம் என்று இருக்கிறேன்! பின்னே பாருங்கள் அண்ணி, எதைப் பார்த்தாலும், சுசிக், சுசிக்கு என்று அக்காவுக்கேதான் வாங்குகிறார்கள். அவளை விட, நான் ஐந்தே வயதுதானே சின்னவள்? இரண்டு பேருக்கும் ஒரே மாதிரி வாங்க வேண்டியதுதானே?” என்று அண்ணியிடம் குறைப்பட்டாள் சுதா.

ஒரே மாதிரியா?

நமுட்டுச் சிரிப்புடன், “ஒரு வேளை, பள்ளிச் சீருடையோடு பொருந்தாது என்று எண்ணியிருப்பார்கள்!” என்று, சாதுவாகச் சொன்னான் சசாங்கன்.

பள்ளிச் சிறுமி என்று, அவன் சொல்லாமல் சொன்னது புரிந்து கண்கள் பளபளத்தாலும், புதிய நாத்தனாருக்கு ஏற்ற விதமாக, இப்படியும் அப்படியுமாக அவளைப் பார்த்து, “உங்கள் இருவருக்கும் ஒரே மாதிரி வாங்கினால், அவ்வளவாகப் பொருந்தாது, சுதாம்மா. உனக்குக்

கொஞ்சம் நீளமாக . . கல்யாணத்தின்போது போட்டிருந்தாயே, இரட்டை வரிசை ஜிமிக்கி . . அது போல வாங்க வேண்டும்!” என்று அவளது கவனத்தை வேறு புறம் திருப்பினாள் சுவர்ணா.

சந்தோஷமாக, அதைப் பின்பற்றி, சளசளத்தாள் சின்னவள்.

ஆனால், சசாங்கனுக்குத் தேவையான விவரம் கிடைத்தது!

சுவர்ணாவின் புகுந்த வீட்டில், சுசி இருப்பாள். வேலையாட்கள் தவிர, ஓரளவு தனியாகவே!

சுவர்ணாவுக்கு முறைப்படித் தர வேண்டியது வேறு ஏதேனும் இருக்கிறதா என்று கேட்க வந்ததாகக் காரணம் காட்டி, அங்கேயே போய், எப்படியும் அவளைப் பார்த்துப் பேசிவிடவேண்டியதுதான்.

ஒரே ஒரு பிரச்சினை! இந்தப் பெரியவர்கள் அவளை வற்புறுத்திக் கூட அழைத்துச் சென்றுவிடாமல் இருக்க வேண்டும்!

ஆனால், அப்படியே அவர்களோடு அவள் சென்றிருந்தாலும், திரும்பி வரும்வரை காத்திருந்து, சுசியிடம் பேசிவிட்டுத்தான் திரும்பிவர வேண்டும் என்றுபதில் அவன் உறுதியாக இருந்தான்.

தனியாகப் பேசுவதற்குக் காட்டக் காரணம் கூடத் தயார்!

சுசி பங்களூருவில் வேலை செய்தபோது, கூட வேலை பார்த்த ஒரு பெண்ணைப் பற்றிய தனிப்பட்ட தகவல் தேவை! திருமண விஷயமாக என்று சொன்னால், அதை மறுக்க முடியாதுதானே?

இப்படியெல்லாம் எந்த வித ஓட்டையும் இல்லாத ஒரு திட்டத்தோடு, தங்கையின் புகுந்த வீட்டுக்குப் போனால், கேட்டருகே செல்லும்போதே அவனுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.

உள்ளே அவனுடைய தந்தை சுந்தரத்தின் நீளக் கார், கம்பீரமாக நின்றது!

தந்தை, இந்த நேரத்தில், இங்கே, எங்கே வந்தார்?

# அத்தியாயம் - 10

சற்று நேரம், சசாங்கனுக்கு ஒன்றுமே ஓடவில்லை!

முதல் விஷயமாக மனதில் தோன்றியது, தந்தை அவனை, இப்போது ,இங்கே பார்த்துவிடக் கூடாது என்பதுதான்!

முடிந்தவரை ஓசையின்றிக் காரைக் கிளப்பி, அடுத்த தெருவிற்குள் போய் மறைவாக நிறுத்திவிட்டு யோசித்தான் .

சுவர்ணாவும் தீபனும் இப்போது அங்கே, தங்கள் வீட்டில் இருக்கும்போது, அப்பா எதற்கு இங்கே வந்தார்?

ஒரு வேளை, அவன் பொய்யாகக் காரணம் காட்ட எண்ணியது போல மெய்யாகவே நினைத்து, மகளுக்கு ஏதேனும் செய்யாமல் விடுபட்டிருக்கிறதோ என்று கேட்க, அவள் இல்லாத நேரமாகப் பார்த்து, இப்போது வந்திருப்பாரோ?

சுவி ஒன்றுமே வேண்டாம், வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருப்பதால், அதுவும் சாத்தியமே!

ஆனால் அதற்கு, இப்போது பார்த்தா வரவேண்டும்?

இன்னும் எவ்வளவு நேரம், அவர் இங்கே இருப்பார்?

அதை விட முக்கியம், அவர் இப்போது என்ன பேசிக் கொண்டிருக்கிறார்?

இந்த விவரம், அவனுக்குக் கட்டாயமாகத் தெரிந்திருக்க வேண்டிய ஒன்று! ஏனெனில், அதற்கு ஏற்றாற்போலத்தான், பின்னர் அவனும் பேசியாக வேண்டும்! அதில் முரண்பாடு தெரியக் கூடாது!

எப்படியும், அந்த வீட்டுக்குப் போவதும், சுசரிதாவுடன் பேசுவதும், நிச்சயமாகச் செய்தாக வேண்டியது!

எனவே, எல்லா விவரங்களையும் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்று எண்ணினான்!

நல்லவேளையாகத் தந்தைக்கு ஃபோன் செய்வது பற்றி அவன் தயங்க வேண்டியது இல்லை! தொழில், தங்கை திருமணத் தொடர்பான விஷயங்கள் என்று அவருடன் பேச, அவனுக்கு எத்தனையோ விஷயங்கள் இருந்தன!

எனவே, செல்லை எடுத்துத் தந்தையோடு தொடர்பு கொண்டான் சசாங்கன்.

செல்லில் பேசிய சுந்தரத்தின் குரலில் வியப்பு இருந்தது! வியப்பும், கூடவே இன்னொன்றும்! மகிழ்ச்சி . . . அதிசயம் . . .

அதன் காரணம் புரியாதபோதும் காட்டிக்கொள்ளாமல், “அப்பா, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? சுவர்ணா திருமணத்தில் வீடியோ எடுத்தோமே, அதை சிடியில் காப்பி எடுப்பது பற்றி, வீடியோக்காரர்களிடம் சொல்ல வேண்டும். உங்களிடம் . . . அம்மாவிடம் கேட்டுச் சொல்வதாக . . . “ என்று, எதையும் தெளிவாகச் சொல்லாமல் இழுத்தான் மகன்.

ஒரு கணம் செல்லில் சத்தமின்றிப் போனது.

ஒலி வழியை மூடிக்கொண்டு, தந்தை, அங்கே யாரிடம் பேசுகிறார்?

முக்கியமாக, என்ன பேசுகிறார்?

மீண்டும் செல் உயிர் பெற, “சசி, நீ எங்கே இருக்கிறாய்?” என்று கேட்டார் சுந்தரம்.

அலுவலுக்கு அன்றும் யாரும் போகவில்லை என்பதால் கேட்கிறார்! ஆனால், எங்கென்று, எப்படிச் சொல்வது?

“எஎன்னப்பா?” என்று கேட்டு, பதிலைத் தவிர்த்தான் மகன்.

“அது வந்து . . ., சசி, இப்போது நாங்கள் சுவர்ணா மாமனார் . . வந்து, சுவர்ணா

வீட்டில் இருக்கிறோம். இந்தப் பக்கம் எங்கேனும் இருந்தால், நீயும் இங்கே வாயேன்.!” என்றவர், அங்கே வேறு குரல்கள் ஏதோ சொல்ல, “நீ எங்கே இருந்தாலுமே, இங்கே வந்துவிடப்பா! அம்மா உன்னிடம் ஏதோ கேட்க வேண்டுமாம்!” என்று முடித்தார்.

உள்ளே குறுகுறுத்தது, சசாங்கனுக்கு.

அவனிடம் அம்மா கேட்க என்ன இருக்கிறது?

சுசி விஷயமாக, ஏதேனும் புகார் எழுந்திருக்குமோ? புகார் செய்யும் அளவு, அவன் பெரிதாக வைத்துக் கொள்ளவில்லையே!

இந்தப் பகுதியில், அவனது காரைக்கூட, யாராவது பார்த்திருக்கலாம்!

என்னவானாலும், போய்க் கேட்டால் தெரிந்துவிட்டுப் போகிறது!

ஒரு கணம் யோசித்துவிட்டு, “நானே, அங்கேதான் வந்துகொண்டிருக்கிறேன், அப்பா. சுவர்ணா அத்தைக்கு, நம் பக்கத்துக் கல்யாண சிடி ஒரு காப்பி வேண்டுமா என்று கேட்க நினைத்தேன்.

இதோ வந்துவிடுகிறேன்!" என்று கூறி, ஓர் ஐந்து நிமிஷம் அசையாமல் உட்கார்ந்திருந்துவிட்டுக் கிளம்பிப் போனான் அவன்.

அங்கே போனால், சுற்று மதில் இரும்புக்கதவை அகலத் திறந்து வைத்துக்கொண்டு காவலாளி காத்திருந்தான்.

காரை நிறுத்திவிட்டு இறங்கி உள்ளே போனால், தீபன் வாயிலில் வந்து, கையைப் பிடித்துக் கூட்டிப் போனான்! காத்திருந்து வந்ததுபோல!

மைத்துனன் உபசாரமா?

ஆனால், மறுவீட்டுக்கு என்று, அவன் வீட்டுக்கு வந்திருந்த புது மாப்பிள்ளை, இங்கே இருப்பது எப்படி?

உள்ளே போய்ப் பார்த்தால், சுவர்ணாவும் அங்கேதான் இருந்தாள்.

அவனுடைய தாயும்!

இரு குடும்பங்களிலும் கிட்டத்தட்ட எல்லோருமே இருந்தார்கள்.

சுவர்ணாவுக்கு என்னவோ என்று ஒரு கணம் கலங்குமுன், எல்லோர் முகத்திலும் இருந்த புன்னகை, அதைத் தெளிவித்தது!

என்னவாக இருக்கும்?

பெரியவர்களுக்கு வணக்கம் தெரிவித்தவனை, எல்லோரும் புன்னகையோடு வரவேற்றார்கள்.

உட்கார வைத்துப் பானம் கொடுத்து உபசரித்தார்கள்.

மரியாதை நிமித்தம் பானத்தை ஒரு மிடறு அருந்திவிட்டு, சரோஜினியைப் பார்த்து, "என்னம்மா, என்னிடம், என்ன கேட்கவேண்டும்?" என்று, சசாங்கன் நேரடியாக விஷயத்துக்கு வந்தான்.

"அது . . ." என்று புன்னகையோடு சற்றுத் திணறிவிட்டு, "அது நான் எப்போதும் சொல்வதுதான். ஆனால், அப்பாவும் பிள்ளையும்தானே, மணிக்கணக்காகப் பேசுவீர்கள்? இப்போதும், நீங்களே கேளுங்களேன்?" என்று கணவனிடம் கூறினாள் தாயார்.

எதையோ ரசித்தாற்போல, சிறு சிரிப்பு, அலையெனப் பரவிக் கிளுகிளுத்தது.

"அம்மாவோ, அப்பாவோ, யாராவது வெட்கப்படாமல் சொல்லுங்களேன்! என்ன, உங்களுக்கா திருமணம்?" என்று சிரித்தார் தீபனுடைய தந்தை!

சசாங்கனின் மனம் ஜிவ்வென்று வானத்தில் சிறகடித்தது! அவன்

நினைப்பது போல இருக்குமா? இருக்கக் கூடுமா? ஆனால் . . .

சுசரிதா இங்கே இல்லை என்பது தனியாக மனதில் பட்டது!

அவன் யோசிக்கும்போதே, சுந்தரமும் லேசாகத் தொண்டையைக் கனைத்துக்கொண்டு, அதையே சொன்னார். “அது வந்துப்பா, நம் மாப்பிள்ளையுடைய சித்திக்கு இரண்டு அருமையான பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். . . .” என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, சுதா குறுக்கே புகுந்தாள்.

“குழந்தைகளா? மாமா, நாங்கள் ஒன்றும் குழந்தைகள் இல்லை! அக்காவுக்கு வயது இருபத்து மூன்று., எனக்குப் பதினெட்டு!” என்றாள் அவள்.

“ஷ் பெரியவர்கள் பேசும்போது, குறுக்கிடாதே!” என்று அவளுடைய தந்தை கூற, கப்பென்று வாயைப் பொத்திக் கொண்டாள் அவள்!

மூச்சே நின்றுவிட, அதைக் காட்டிக் கொள்ளாதிருக்க முயன்றபடி, சசாங்கன் தந்தை பேசுவதைக் கவனித்தான்.

அந்த ஒரு கணத்தில் அவன் நினைத்ததுதான் விஷயம்!

“சுசரிதா மிகவும் நல்ல பெண். அழகு குணம் எல்லாம் இருக்கிறது! சுவி திருமணத்தின்போதே, தனித்தனியாக, எங்கள் எல்லோருக்கும், இதுவே தோன்றியிருக்கிறது! நம் வீட்டுக்கு வந்ததும், சுவியும் மாப்பிள்ளையும் இது பற்றிப் பேசினார்களா? இன்றைக்கு நல்ல நாளாகவும் இருக்கிறது., தள்ளிப் போடுவானேன் என்று, கிளம்பி வந்துவிட்டோம். நீயும் சமயத்தில் ஃபோன் பண்ணினாய். . . .உன் அபிப்பிராயம் என்னப்பா?” என்று, ஒரு வழியாக, நேரடியான கேள்வியே வந்தது!

சொல்வது என்ன?

அவனது விருப்பத்துக்கு விட்டால், இப்போதே போய்த் தாலியைக் கட்டி, பதிலைச் செயலிலேயே காட்டிவிடுவானே!

ஆனால், இந்தத் திருமணம் அவ்வளவு எளிதல்ல!

தொற்றுநோய் கண்டவனைப் போல அவனைக் கருதி, அவனிடமிருந்து விலகி, ஒதுங்கிப் போகிறவள் அல்லவா, இதற்குப் பதில் சொல்ல வேண்டும்?

ஆனால், இவ்வளவு பேச்சு வந்திருக்கும்போது . . . சுசிக்கும் ஒன்றும் தெரியாமல் இராது!

சூழ்ந்திருந்த நிசப்தமே, அவனது பதிலுக்காக எல்லோரும் காத்திருப்பதை உணர்த்த, தந்தையின் முகத்தில் மட்டும் பார்வையைப் பதித்து, “இதே போல, தீபன் தங்கையிடம் கேட்டீர்களா, அப்பா?” என்று வினவினான்.

அவரது பார்வை ஒரு தரம், மற்றவர்களைச் சுற்றிவிட்டு வந்தது.

“அங்கே சரி என்றால், உன் அபிப்பிராயம் என்னப்பா?”

ஆவலை அதிகம் காட்டாமல், “அப்படித்தான் என்றால், உங்கள் விருப்பப்படி நடத்தலாம். ஆனால், முதலில் அங்கே கேட்டுவிடுங்கள். “ என்றான் அமைதியாகவே.

“சின்னத்தை, நீங்கள் போய் சுசியிடம் கேட்கிறீர்களா?” என்று சுவர்ணா உடனே தொடங்க, “நீயோ கேட்டுவாம்மா!” என்றாள் அந்த அம்மாள் அவசரமாக.

“நீதான் ஒத்த வயது. கூடவே இருந்து சளசளத்துக்கொண்டே இருக்கிறீர்கள். அதனால், உன்னிடம்தான் மனம் விட்டுப் பேசுவாள். “ என்று தமக்கை மருமகளையே, மகளிடம் போகச் சொன்னாள் அந்த அன்னை!

மகளிடம் பேச, அன்றைக்கே அந்தப் பெண்மணி ஆள் தேடியது, சசாங்கனுக்கு நினைவு வந்தது.

எப்போதும் மறுக்கிறவள் என்கையில், எந்த நம்பிக்கையில், சுசியிடம் சம்மதம் பெறுமுன்னே, அவனைக் கேட்டார்கள்?

ஆனல், குட்டையைக் கலக்கினால்தான் மீன் கிடைக்கும். இந்தப் பேச்சு வந்ததும் நல்லதே. ஏதோ ஒரு வழி நிச்சயம் கிடைக்கும்.

அதை நல்லதாக ஆக்கிக் கொள்வது, அவன் திறமை!

“ஆமாம்மா. எங்களை விட, உன்னிடம் இலகுவாகப் பதில் சொல்வாள் என்றுதான் எனக்கும் தோன்றுகிறது! ரஞ்சனி சொல்கிறது போல, சும்மாவுமே, சுசி உன்னோடுதானே, அதிகம் பேசுகிறாள்!” என்றாள் சுவர்ணாவுடைய மாமியார்.

சும்மா என்றால் புகுந்த வீட்டினர், தங்கையைச் சிறப்பாகப் பேசியதில், சசாங்கனுக்குக் கொம்பே முளைத்திருக்கும்!

ஆனால் இப்போது, மனதுக்குச் சற்று இதமாக இருந்ததோடு சரி!

இப்படி, யார் என்ன என்று விவாதம் நடத்தி நேரத்தை வீணாக்காமல், சுசரிதாவிடம் யாராவது சீக்கிரமாகசென்று, எப்படியாவது அவளது சம்மதத்தையும் உடனே பெற்று வந்தால் நன்றாக இருக்குமே என்று

உள்ளூர நெஞ்சு படபடத்தான் அவன்!

நெற்றியில் வியர்வைத் துளி எட்டிப் பார்க்கிறதோ என்றுகூடச் சந்தேகம்!

துடைத்தால், இன்னும் அசிங்கமாகத் தெரியுமே என்று அசையாமல் உட்கார்ந்திருந்தான், அவன்!

மற்றவர் கேலிக்கும் நகைப்புக்கும் ஆளாகி விடக் கூடாதில்லையா?

சிரித்துக்கொண்டே, சுவர்ணா திரும்பி வருவதைப் பார்த்த பிறகுதான், சசாங்கனுக்குச் சரியாக மூச்சு விடவே முடிந்தது எனலாம்!

ஆனாலும், பிரச்சினையின்றி, எப்படி நடந்தது?

“பச்சைக் கொடிதான், அத்தை! ஆனால், எல்லோரும் இந்த விஷயம் கேளுங்கள்.

சுசியிடம் இப்படி யிப்படி என்று விவரம் சொல்லிக் கேட்கப் போனால், அண்ணனைப் போலவே, அவளும் அதே கேள்வி . . “

“ஏய் சுவி, மாப்பிள்ளைக்குத் தங்கை முறை! உனக்கு நாத்தனார்! அவள் இவள் என்று, இப்படி, மரியாதையில்லாமல், ஒருமையில் பேசக் கூடாதடா.” என்று மகளை எச்சரித்தாள் சரோஜினி.

“அவளை அதட்டாதீர்கள். ஒரு வயதுப் பிள்ளைகள். மனம் ஒத்து, சினேகிதமாகப் பழகுகிறார்கள் என்று நாங்கள் எல்லோருமே, சந்தோஷமாக இருக்கிறோம்!” என்றாள் அன்னபூரணி.

சுசரிதாவுடைய தாயாரும் தலையாட்டியபோதும், தாய் முகம் தெளியாதது கண்டு, “மெய்யாகவே இதில் ஒன்றுமே இல்லைம்மா!” என்றாள் மகளும்.

“சுசியும் நானும் ஒரே வயதுதான். பார்த்ததுமே பிடித்துப் போய்விட, அதனால், பேர் சொல்லி, தோழிகளாகப் பழகுவது என்று, நாங்கள் இருவருமே பேசி முடிவு செய்துவிட்டோம். இப்போது கூட, அடுத்த வாரமே, அவர்கள் வீட்டுக்கு விருந்து சாப்பிட வரவேண்டும் என்று சொல்லியிருக்கிறாள். வருவது, சனிக் கிழமையும் சேர்த்து அங்கே இருக்கும்படி வரவேண்டுமாம்.  . . “ என்று சுவர்ணா கூறியபோது, “ஆமாம்மா. “ என்று சுசரிதாவுடைய தந்தை, மகளது அழைப்புக்கு விளக்கம் கொடுத்தார்.

“சிவகாசியில் சனிக்கிழமை என்றால் தனிதான். புதிதாகத் தயாரிக்கும் வாணம், வெடிகளை எரிய வைத்துப் பார்ப்பது, அன்றுதான்! இலவச வாண வேடிக்கை பார்க்கலாம்!” என்றார் அவர்.

“ஓகோ! அப்படியா விஷயம்? சனிக்கிழமை அங்கே கண்ணுக்கும் விருந்து வைப்போம் என்றாள். என்ன விருந்து என்று யோசித்தேன். ஆனால், இப்போது முக்கியமான விஷயத்தைக் கேளுங்கள்! நாங்கள் எல்லோரும் இப்படி ஆசைப்படுகிறோம், என்ன சொல்லுகிறாய் என்று சுசியிடம் கேட்டால், இதே போல, உன் அண்ணனிடம் கேட்டீர்களா என்று, அண்ணன் கேட்ட அதே கேள்வி கேட்கிறாள். நானும், அப்பா மாதிரியே சொன்னேனா? மீண்டும், பேசி வைத்த மாதிரி, அண்ணனின் அதே பதில்! அப்படியானால், உங்கள் விருப்பம் என்று! இது எப்படி இருக்கு?” என்று அவள் சினிமா பாணியில் கேட்க, எல்லோரும் நகைத்தனர்.

இன்னொரு திருமணம் வரப் போகிறது என்று, எல்லோருக்குமே சந்தோஷம்.

“எனக்கு இன்னொரு பட்டுப் பாவாடை செட் கிடைக்குமே!” என்று குதித்தாள் சுதா!

“இரண்டே நாட்களில், என்னைப் பழைய மாப்பிள்ளை ஆக்கிவிடப் பார்க்கிறீர்களே!” என்று தீபன் சிரித்தான்.

வேண்டாம், வேண்டாம் என்ற மகள், கல்யாணத்துக்குச் சம்மதித்திருக்கிறாள் என்று, சுசரிதாவுடைய பெற்றோருக்கு ஆனந்தம்.

சுந்தரம் சரோஜினிக்கும், கிட்டத்தட்ட அதே மகிழ்ச்சிதான். மகனிடம் திருமணப் பேச்சை எடுக்கவே தயங்கிக்கொண்டு இருந்தவர்கள் ஆயிற்றே!

எல்லோரும் கலகலப்பாகப் பேசி மகிழ்ந்தனர்.

இந்தக் கோலாகலத்தின் இடையே, சசாங்கனுக்கு மட்டும், ஏதோ நெருடியது!

பயங்கரமான ஒட்டுவாரொட்டி நோயாளி போல, அவன் இந்தப் பக்கம் வந்தால், எதிர் எல்லையில் போய் நின்று கொண்டிருந்தவள், சுசரிதா! அவள் எப்படி, இவ்வளவு சாதாரணமாக, இந்தத் திருமணத்துக்குச் சம்மதித்திருப்பாள்?

ஆனால், தங்கை பொய் சொல்லக் கூடியவள் அல்ல! லேசாக மாற்றிக் கூடப் பேசாத காந்தீயவாதி, அவன் தங்கை!

பின்னே?

ஒரு வேளை தன்னைப் போலவே சுசிக்கும் மனம் தெளிந்திருக்குமோ என்றால், அப்படி நினைக்கவும் வழியில்லை! மனம்

மாறியிருந்தால், சுவர்ணா திருமணத்தின்போது, அவ்வளவு பாராமுகம் . . . வெறுப்புக் காட்டியிருக்க மாட்டாள்!

இப்போதும், அவன் வருமுன்னே கூட எப்போது உள்ளே போனாளோ? வெளியே வரவே இல்லையே!

மற்றவர்களைப் போல, இதை வெட்கம் என்று, சசாங்கனால் கருதமுடியவில்லை.

என்னவோ இருக்கிறது! அது என்ன என்றும், அவனுக்குத் தெரியும். அப்படி இருக்கையில், ஏன் மறுக்கவில்லை என்று, அதுவே அவனைக் குழப்பியது.

இப்படிப் பல்வேறு யோசனைகளில் அலைபாய்ந்து கொண்டிருந்த சசாங்கனால், மற்றவர்களைப் போல உற்சாகத்தில் குதிக்க முடியவில்லை!

நல்லவேளையாக, தற்போதைய மண மக்களின் “மறுவீட்டு” விவகாரம் அன்னபூரணிக்கும் சரோஜினிக்கும் நினைவு வர, அடுத்த திருமணத்தின் விவரங்களை, அப்புறம் பேசிக்கொள்ளலாம் என்ற முடிவுடன், மகளையும் மருமகனையும் தங்களோடு அழைத்துக்கொண்டு, சுந்தரம் குடும்பம் சந்தோஷமாக வீடு திரும்பியது.

குதூகலப் பேச்சின் போர்வையில், அண்ணன் அருகில் வந்து, “என்னண்ணா, உன் “காதலே பொய்” கதையின் நாயகி, சுசிதானா? “ என்று, அவனுக்கு மட்டும் கேட்கும்படி வினவினாள்.

தூக்கிவாரிப் போட்டுக்கொண்டு சசாங்கன் திகைத்து நோக்கவும், “அவ்வப்போது உன் பார்வையில் இருந்தே கண்டுகொண்டேன். அதுதான், சுசியிடம் உன்னைப் பற்றியே பேசினேன். உன் செல் எண்கூடக் அவளுக்குக் கொடுத்திருக்கிறேன். அப்பாவுக்கும் இந்தத் திருமண ஐடியாக் கொடுத்தேன்! ஆனால் ஒரு சின்ன ஆலோசனை. உங்களுக்குள் என்ன மிச்சம் மீதி இருந்தாலும், இரண்டு பேரும் பேசித் தீர்த்துவிடுங்கள்! காதலில் ஒளிவு மறைவு ஒத்து வராது. எதையும் மூடி வைத்து வளர்க்காதீர்கள்!” என்றாள் தங்கை.

அறியாத சாதுப் பெண் , அடம் பிடிக்கக் கூடத் தெரியாதவளை அநியாயமாக வாட்டிவிட்டோமே என்று வருந்தியது, சசாங்கனுக்கு நினைவு வந்தது!

அவளுள்ளும், இவ்வளவு கெட்டிக்காரத்தனமா?

தங்கையை வியப்புடன் நோக்கி, “சரிங்கம்மா! இனிமேலே, இந்தப்

பாட்டியம்மா புத்திமதிப்படியே நடந்து கொள்கிறேனுங்கம்மா!" என்றான் பணிவு போலக் காட்டி!

கூடவே, "ஆனாலும் மாப்பிள்ளை வீட்டை, இரண்டே நாட்களில் மதுரையாக்கி விட்டாயே!" என்று புருவங்களை உச்சி வரைத் தூக்கி வியந்தான்.

சுவர்ணா சிரிக்கவும், "என்ன என்ன?" என்று வந்த கணவனிடம், "அண்ணனைப் பாருங்கள்! உங்களை அதிகாரம் பண்ணுகிறேன் என்கிறார்!" என்று குறைப்பட்டாள்.

"அதிகாரமா? சேச்சே! அப்படியெல்லாம் இல்லையே! இதுவரை, நான் உனக்கு, ஒரு தோப்புக்கரணம் கூடப் போட்டதே கிடையாதே! "என்று சீரியசாகக் கூறிய தீபன், தொடர்ந்து, "இப்போது, இங்கே உட்கார, எனக்கு உன் அனுமதி உண்டா, கண்மணி. இல்லையென்றால் பரவாயில்லை. அடக்கமாக நின்றுகொண்டே இருந்து விடுகிறேன்!" என்று அடக்கமாகச் சொல்ல, சசாங்கன் அடக்க மாட்டாமல் நகைக்க, மற்ற இருவரும் சிரிப்பில் சேர்ந்து கொண்டார்கள்.

சிரிப்பும் விளையாட்டும் ஒரு புறம் நடந்தாலும், சசாங்கனின் மனம் புயலை எதிர்பார்த்து அமைதி இல்லாமலே இருந்தது!

அவன் எதிர்பார்த்த புயல், அன்று மாலை சுமார் நாலு மணியளவில் வீசத் தொடங்கியது!

செல் ஒலித்ததும் எடுத்துப் பார்த்தால், அவன் அறியாத எண் திரையில் வந்தது!

யார் என்று யோசிக்கும்போத, அவனது செல் எண்ணை, சுசரிதாவிடம் கொடுத்திருப்பதாக, சுவர்ணா சொன்னது நினைவு வந்தது!

ஆவலும் கவலையுமாகப் பேசினால், அவளேதான்!

கிட்டத்தட்ட, அவன் அச்சத்தடன் எதிர்பார்த்த வார்த்தைகளையும் சொன்னாள்.

அவன் "ஹலோ சொன்னதுமே, "நான்தான்." என்றாள் மொட்டையாக. தொடர்ந்து, "பாருங்கள், நான் சொல்லப் போவது, நல்ல விஷயம் அல்ல. . . இல்லையில்லை! உங்களுக்கு நல்லதாகத்தான் தோன்றும். இந்தத் திருமணத்தை எப்படியாவது, நிறுத்தி விடுங்கள்." என்றாள் அவசரமாக.

செய்தி எதிர்பார்த்ததே என்றாலும், சசாங்கனுக்கு வலித்தது!

அவளது பேச்சில் ஒன்றை மட்டும் பற்றி, "அதெப்படி எனக்கு மட்டும் நல்லதாகத் தோன்றும்?" என்று கேட்டான்.

“அது . . “ என்று ஒரு கணம் தயங்கிவிட்டு, “பாருங்கள் என்னால் இங்கிருந்து அதிகம் பேச முடியாது. தயவு பண்ணி, நான் சொன்னதைச் செய்யுங்கள். அவ்வளவுதான்.” என்று பேச்சை முடிக்க முயன்றாள் அவள்.

“பொறு. இது, இப்படி செல்லில் இலகுவாகப் பேசி முடிக்கிற விஷயம் அல்ல. நான் உன்னிடம், நேரில் பேச வேண்டும்.” என்றான் அவன்.

“உங்களிடம் பேச, எனக்கு எதுவும் இல்லை. என்ன பேசினாலும் என் முடிவு மாறப் போவதும் இல்லை!”

“மாறாது என்று அவ்வளவு நிச்சயம் இருந்தால், என்னோடு பேசுவதற்கு ஏன் பயப்பட வேண்டும்? “

“எனக்கு ஒன்றும் பயமில்லை. ஆனால் தேவையில்லாமல் எதற்குப் பேசுவது?”

“தேவையா, இல்லையா என்று பேசிப் பார்த்தால் தெரிந்து விடுகிறது!”

“ப்ளீஸ், இந்த மாதிரிப் பேச்செல்லாம் வேண்டாம்.”

குரலில் இருந்த வலி புரிந்தது. பழைய சிறுசிறு இலகுவான கால்வாரல்களின் நினைவில், அவனும் சில வினாடி பேசாதிருந்தான்.

அதன்பின், “எப்படியும், சில விஷயங்கள் உன்னிடம் நான் சொல்லியே ஆக வேண்டும், சுசி. அதற்காக, உன் வீட்டுக்கே வருவதானாலும், சரி! “ என்றான் உறுதியான குரலில். “இன்று காலை, நானாகவே வருவதாகத்தான் இருந்தேன்.”

மீண்டும் தொடர்ந்த சிறு அமைதியின் பின், “எங்கே வர வேண்டும்? உங்கள் வழக்கமான, தெருவோரக் காஃபி ஷாப், ஜூஸ் கடை எதுவும் வேண்டாம். என் வீட்டார் யாரும், என்னை உங்களோடு பார்ப்பதை, நான் விரும்பவில்லை! “ என்றாள் முகத்தில் அடித்தாற்போல, அவள்.

எதற்காக அந்த மாதிரி இடங்களை, அவன் தேர்ந்தெடுத்தான் என்பது, அவனுக்கு நினைவு வந்தது!

அதையும் கூடச் சொல்ல வேண்டும்தான். ஆனால், அவள் காது கொடுத்துக் கேட்பாளா?

முயற்சிதான் அவன் கையில்! ஆனால் அதுவே மெய்வருந்தக் கூலி தரும் என்று வள்ளுவர் சொல்கிறாரே! அவனும், முயற்சியில் குறை வைக்கப் போவது இல்லை!

“நீ திநகருக்கு வா. அங்கங்கே சின்ன “ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்” கள் , பூங்காக்கள் இருக்கின்றன. உன் வீட்டார் கண்ணில் படாமலே பேசி

முடிக்க முடியும். “

கவனத்துடன், முன்னே நடந்த எதையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத விதமாக, நன்கு பராமரிக்கப்படும் ஒரு பூங்காவுக்கு அவளை அழைத்துச் சென்றான் அவன்.

நடைப் பயிற்சி செய்யும் அகலமான பாதை ஓரமாகக் கிடந்த பெஞ்ச் ஒன்றில் அவன் அமர்ந்ததுமே, அவள் பொரியத் தொடங்கிவிட்டாள்.

“கூடப் படித்த ஒருத்தியைப் பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லி . . அம்மாவிடம் பொய் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்! தற்செயலாகவேனும், யாராவது உங்களோடு, என்னைப் பார்த்தால், பிரச்சினை ஆகாதா? எதற்கு அனாவசியமாக, இந்த அலைச்சலும், சந்திப்பும்? நீங்கள் என்ன சொன்னாலும், என் முடிவு என்னவோ மாறப் போவதில்லை!  அப்படியிருக்க . . .”

“இவ்வளவு சொல்கிறவள், காலையில் சுவர்ணா கேட்கும்போதே, மறுத்திருக்க வேண்டியதுதானே? அப்போது, தலையாட்டிவிட்டு, அப்புறம் என்ன, வீரம், வேகம்?”

“வேகம் அல்ல. விவேகம்! அங்கே வைத்துச் சொல்லியிருந்தால், என்ன ஏது என்று குடைந்திருப்பார்கள். சுவிக்கு, அண்ணன் கடவுள்! எல்லோருக்கும் உங்களிடம் மதிப்பு, மரியாதை! நம் பழைய கதையைச் சொல்லி, அதைக் கெடுக்க எனக்கு மனமில்லை! அதனால்தான், உங்களிடமே கேட்கச் சொன்னேன். ஆனால், ஏற்கனவே, என்னைப் போலவே நீங்களும் தலையாட்டி இருப்பீர்கள் என்று தெரியாது! ஆனால், இவ்வளவு தூரம் வந்த பிறகு, என் பெற்றோரை மீறுவது, எனக்குக் கஷ்டம். அதனால்தான் உங்களைச் சொல்லச் சொன்னேன். செல்லில் ஏதோ பேசியபோது, இருவர் கருத்தும் ஒத்துப் போகவில்லை., அதனால் வேண்டாம் என்று நீங்களே சொல்லி விடுங்கள். . . . “

“ஆனால், வேண்டுமே!”

“எ.எஎன்னது?!”

“எனக்கு நீ வேண்டும், சுசி! முதலில் இருந்தே, என் மனதில் நீ மட்டும்தான்! உன்னை மணந்துகொள்ள ஆசைப்பட்டுத்தான், என் தந்தையிடம் சம்மதம் சொன்னேன்! “

“ஆச்சரியமாக இருக்கிறதே! நானோ ஒரு மகா மோசமான பெண்! வேலைக்கு வந்த இடத்தில், சும்மா தீனிக்காகக் கூட, ஒருவனோடு சுற்றுகிறவள்! அதிக வருமானம் வரும் என்றால், உடனே உதறிவிட்டு . . .ஏன், இன்னொருத்தனைக் கூட . . .”

“இல்லை! அன்று நான் பேசியது எல்லாம் தவறு! அவலை நினைத்து, உரலை இடிப்பது என்று பழைய வாசகம் ஒன்று உண்டு! அது போல, சம்யுக்தா மேல் உள்ள கோபத்தில், உன்னைத் தப்பாக . . . “

“ஆனால், நான் தப்பாக எண்ணவில்லை! சரியாகத்தான் கணித்திருக்கிறேன்! நீங்கள், ஆண்கள் எல்லோரும் மோசமானவர்கள். வசுந்தர் என்னென்னவோ சொல்லி மயக்கி, சம்யுக்தாவைத் திருமணமே செய்துகொண்டு ஏமாற்றினார்! என் நல்ல வேளை! அந்த அளவு ஏமாறுமுன், நான் விழித்துக்கொண்டுவிட்டேன்! எனக்கு அது போதும்! இத்தோடு, எல்லாமே போதும்! நல்ல ஆண்கள் சகாப்தம் எல்லாம், என் அப்பா, பெரியப்பா காலத்தோடு மடிந்து, முடிந்தும் போய்விட்டது! சுவியின் அதிருஷ்டம், கொஞ்சம் தப்பிப் பிறந்தவன், எங்கள் தீபண்ணன். வசுந்தர், நீங்கள் எல்லாம் . .சே! எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்! அழுக்குக் குட்டையில் ஊறிய மட்டைகள்!”

யோசனையோடு, அவளைப் பார்த்தான் சசாங்கன்.

பிறகு, “சம்யுக்தாவைக் கடைசியாக எப்போது பார்த்தாய்?” என்று கேட்டான்.

“எதற்குப் பார்ப்பது?” என்றாள் சுசரிதா ஆத்திரத்துடன். “கண்ணும் கண்ணீருமாக அவள் சோர்ந்து கிடப்பதைக் கண்டு ரசிப்பதற்கா? அல்லது, கொஞ்சம், கொஞ்சமாக அவள் மறந்து வருவதை நினைப்பூட்டி, இன்னும் அழ வைப்பதற்கா? வேண்டாம் என்று, அவள் அம்மா அப்போதே சொன்னார்கள்! நானும் அத்தோடு விட்டுவிட்டேன். “ என்றாள் அவள் வெறுப்புடன்.

அவளை ஒரு தரம் நோக்கிவிட்டு, சசாங்கன் செல்லை எடுத்துப் பேசினான்.

எரிச்சலாகப் பார்த்துவிட்டுத் தலையைத் திருப்பிக்கொண்டாள் அவள்.

“பத்தே நிமிஷம்.” என்று செல்லை அணைத்துவிட்டு, “ஓர் இடத்துக்குப் போய் வரலாம், வா!” என்று அழைத்தான்.

“அவசியமில்லை. வர முடியாது! “ என்றாள் அவள் இருந்த இடத்தை விட்டு அசையாமல்.

“ஏன்? என்னிடம் நம்பிக்கை இல்லையா?”

பார்வையில் சினத்துடன், “இந்த வார்த்தையை, உங்களைச் சந்தித்த முதல்நாளே, நான் மறுத்திருக்கிறேன். எங்கே போனாலும், என் முடிவில் மாற்றம் இராது எனும்போது, எதற்காகப் போவது என்பதுதான், எனக்கு!” என்றாள் சுசரிதா, அழுத்தம் திருத்தமாக.

வியப்புடன் அவளைப் பார்க்கும்போதே, அவனுக்கு நம்பிக்கையும் அதிகமாயிற்று!

“முதல்நாளே சொன்னதாக” அவ்வளவு துல்லியமாகச் சொல்லுகிறாளே!

அவனைப் போலவே, அவளுக்கும் எல்லாம் தெள்ளத் தெளிவாக நினைவு இருப்பதானால், அவனைப் போலவே, அன்பும் நேசமும் கூட, இருக்கத்தானே, செய்யும்?

இந்த ஆத்திரத்தைப் போக்க முடிந்துவிட்டால்?

“அதை, அங்கே போயே பார்க்கலாமே!” என்றபோது, குரலில் காட்டாமல் அடக்கிய உற்சாகம் அவன் மனதில் இருந்தது!

அந்த வீதியில் கார் திரும்பும்போதே, “இங்கே, எங்கே . . “ என்று தொடங்கியவள், பெரிய காம்பவுண்டின் உள்ளே போய், கார் நின்ற இடத்தைப் பார்த்ததும், அவனை ஆத்திரத்துடன் முறைத்தாள்.

“சம்யுக்தாவுடைய அம்மா அவ்வளவு சொன்னார்கள் என்ற பிறகும், என்னை இங்கே கூட்டி வந்திருக்கிறீர்களே! அவர்கள் என்னை, என்ன நினைப்பார்கள்?” என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, சசாங்கன் இறங்கி வந்து, அவள் புறம் கார்க் கதவைத் திறந்து, “வா!” என்று அவள் கையைப் பற்றி, அழைத்தான் .

கையைப் பற்றி!

திகைத்துப் போய் அவன் முகத்தைப் பார்த்தவளுக்குத் திகைப்பு மேலும் அதிகமாயிற்று!

கையை விடுவித்துக் கொண்டபோதும், மேற்கொண்டு மறுக்காமல், அவனோடு சென்றாள்.

அழைப்பு மணி ஓசையில், கதவைத் திறந்த வசுந்தரனைப் பார்த்ததும், அவளது திகைப்பு பரிபூரணம் ஆயிற்று!

திகைப்பின் முழு அளவையும் தாண்டிவிட்டதாகத்தான், சம்யுக்தா வீட்டில் வசுந்தரனைப் பார்த்ததும், சுசரிதா நினைத்தாள்.

ஆனால், சிரித்த முகத்துடன் வசுந்தரன் குரல் கொடுக்கவும், சந்தோஷமாக வந்த சம்யுக்தாவோடு, அவளுடைய பெற்றோரையும் பார்க்கவும், அவள் தலை சுற்றிக் கீழே விழாத குறைதான்!

# அத்தியாயம் -11

மெய்யாகவே, சுசரிதாவின் மூளை சற்று நேரம் வேலை நிறுத்தமே செய்தது போலத்தான் அவள் உணர்ந்தாள்.

வசுந்தரனுக்கும், சம்யுக்தாவுக்கும் இடையே, எப்படியோ சமாதானம் ஆகியிருக்க வேண்டும் என்று, சுசியால் புரிந்துகொள்ள முடிந்தது!

இந்த நாட்டில் இது ஒன்று! கல்யாணம் ஆயிரம் காலத்துப் பயிர், அது இது என்று பெண்களை மூளைச் சலவை செய்து, உதவாத திருமணத்தைக்கூட, உயிர் பெற்று, வாழ வைத்துவிடுவார்கள்.

சம்யுக்தாவுடைய தாத்தா பாட்டிகள் கூட, இதன் காரணமாக இருந்து, சம்யூவும் பொறுத்துப் போக முடிவு செய்திருக்கலாம்!

ஆனால், இந்த சந்தோஷம்?

சம்யுக்தாவுடைய பெற்றோர் முகத்தில் வரை தெரியும் பூரிப்பு?

அதை விடவும், “யார் வந்திருக்கிறார் பாருங்கள்!” என்று வசுந்தரன் அழைக்க, எல்லோரும் வந்து, சசாங்கனை வாயெல்லாம் பல்லாக வரவேற்று, உபசரித்த விதம்?

குத்திக் கிழிப்பேன்., கண்ணை நோண்டுவேன் என்று கத்தி, உருப்பட மாட்டான் என்று சபித்தவர்கள், இவர்களேதானே?

இந்த மாற்றம் எப்படி வந்தது?

இந்த இடத்தில்தான் சுசரிதாவின் மூளை செயல்பாட்டை நிறுத்தி, மரத்துப் போனது!

பிரமித்து நின்றவளின் தோளைப் பற்றி, “உட்கார், சுசி!” என்று சசாங்கன் உட்கார வைத்தபோதுதான், அங்கிருந்தவர்கள், சுசரிதாவைக் கவனித்ததே!

“ஹாய், சுசி!” என்று சம்யுக்தா துள்ளிக் குதிக்க, “இப்படிக் குதிக்காதே!” என்று மூன்று குரல்கள் அவளை அன்பாக அடக்கின.

அப்படியென்றால்? எல்லோரின் பூரிப்பின் காரணமும், இதுதானோ?

“காலையில்தான், டாக்டரம்மா உறுதி செய்தார்கள். !”

வாழ்த்துக் கூற வாய் திறந்தால், அப்போதும், எல்லோரும் சசாங்கனைத்தான் அன்பும், மதிப்புமாகப் பார்த்துக்

கொண்டிருந்தார்கள்!

என்ன நடந்திருக்கக் கூடும்?

மேலும் அங்கிருந்த பத்து நிமிஷங்களில், சம்யுக்தாவுக்கும், அவளுடைய புகுந்த வீட்டினருக்கும் நல்லுறவு வளர்ந்திருப்பது புரிந்தது.

மருமகளை அலுங்காமல், நலுங்காமல் அழைத்து வர, ரயிலடிக்குக் காருடன் வருவதாக, மாமனார் சொல்லியிருக்கிறாராம்!

மூத்த மருமகள், கொழுந்தன் மனைவிக்கு இந்த நேரம் வாயில் ஒதுக்கிக்கொள்ள நன்றாக இருக்கும் என்று, நாரத்தங்காய் உப்பு ஊறுகாய் போடுகிறாளாம். கோயில் விழா முடிந்து கிளம்பும்போது, சரியான அளவு ஊறியிருக்குமாம்!

ஆனால், ஓசியில் ஊறுகாய் கொடுத்தால் உறவு கெட்டுப் போய்விடும் என்பதால், காசு வாங்கிக்கொண்டுதான் கொடுப்பாளாம்!

இங்கிருந்து கொண்டு போவதற்காக, அவரவருக்குப் பொருத்தமாக, அலங்காரப் பொருட்கள் வாசனைத் திரவியங்கள் வாங்கி வைத்திருப்பதும் தெரிந்தது!

அன்பாகட்டும், பொருளாகட்டும்., ஒரு வழிப் பாதையாக எதுவுமே இல்லை!

"உங்களைப் பார்த்தால், நன்றி சொல்லும்படி, சம்பந்தி கூறினார்." என்றார் சம்யுக்தாவுடைய தந்தை.

அன்று, வரிந்து கட்டிக்கொண்டு, சண்டை போடப் போனவர்!

கிடைத்த சில நிமிஷத் தனிமையில், "இந்த அருமையான வாழ்க்கையையும், சுந்தரின் அன்பையும் தொலைக்க இருந்தேன்! சசாங்கன் சார் உதவியால், எல்லாம் தப்பியது!" என்றாள் சம்யுக்தா!

எல்லோருக்குமே அந்த உணர்ச்சி இருப்பது, சுசரிதாவுக்குப் புரிந்தது!

சொன்னது போலப் பத்தே நிமிஷங்களில், அவளைக் கூட்டிக்கொண்டு, சசாங்கன் கிளம்பிவிட்டான்.

அந்த வீட்டில் இருந்த நாலு பேர் முகத்திலும் இருந்த பரவசம் தொற்றிக் கொண்டது போல, சுசரிதாவின் முகத்தில் இருந்த கடுப்பும் காணாமல் போயிருந்தது!

கூடவே ஆச்சரியம்!

புரியாத தலையசைப்புடன், "எல்லாம் "மாஜிக்" வேலை மாதிரி இருக்கிறதே! என்ன நடந்தது?" என்று வியப்புடன் விசாரித்தாள்.

காரை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டு,  சசாங்கன் விவரம் சொன்னான்.

அன்று பங்களூருவில் இருவரும் சண்டை போட்டுக்கொண்டபின், சுசரிதா மும்பை சென்று விட, சசாங்கனும், அந்தக் கிளை அலுவலகத்தை வசுந்தர் பொறுப்பில் விட்டுவிட்டு, சென்னைக்குத் திரும்பி வந்துவிட்டான்!

வந்தவன் சும்மா வரவில்லை! காதல் என்கிற வார்த்தைக்கே விரோதியாக வந்தான்.

அதனால், தங்கையின் திருமணத்தையே நிறுத்தி வைத்து, அவளையும் அவள் காதலித்த தீபனையும் வாட்டி, ஓரளவு அவனுடைய பெற்றோரையும் கஷ்டப்படுத்தி . . . அது வேறு கதை!

ஆறு மாதங்கள், இதே முசுட்டுத்தனத்துடன் கழிய, அதன் பின் ஒரு நாள், வசுந்தருடைய பெற்றோர், அவனைத் தேடி வந்தார்கள்.

வசுந்தரின் வேலையில் ஒரு குறையும் இல்லை! ஆனால், அவன் மெலிந்துகொண்டே போவது, சசாங்கனுக்கே கவலையாகத்தான் இருந்தது!

அது பற்றிக் கேட்டு, மறந்து தொலைக்க வேண்டிய சம்யுக்தாவை நினைவுபடுத்தவும், அவனுக்கு விருப்பம் இல்லை!

மாறாக, மனதுக்குள் நன்றாக சம்யுக்தாவுக்கு அர்ச்சனை செய்வான்.

“கூடவே, சாரிம்மா, உன்னையும் சேர்த்துதான் திட்டுவேன். உங்களைப் போல, உள்ளார்ந்த பாசம், நேசம் இல்லாத பெண்களால், ஆண் சமுதாயமே, அல்லல் படுகிறது என்று!” என்றவன், அவள் வியப்புடன் நோக்கவும், “என்ன? இதே போலவே, பால் மாற்றி, வசுந்தரையும் என்னையும் போன்ற இதயமற்ற ஆண்களால், பெண்களின் வாழ்வு நாசமாவதாக நினைத்தாயாக்கும்?” என்று, சரியாகவே ஊகித்துக் கேட்டான்.

ஒப்புவது போல ஒரு கணம் பேசாதிருந்துவிட்டு, “மேலே சொல்லுங்கள்!” என்றாள் அவள்.

“இந்தச் சமயத்தில்தான், அவனைத் தேடி வசுந்தருடைய பெற்றோர் வந்ததும். அவர்கள் ஒரு பக்கம், மகனின் துன்பம் பற்றிச் சொல்லி அழுதார்கள்.

“எப்போதும் உணவில் விருப்பம் உள்ளவன் வசு. உரியபடி சமைத்தால், வழித்து வழித்துச் சாப்பிடுவான். இப்போது, பார்த்துப்

பார்த்து என்ன பதார்த்தம் செய்தாலும், பெற்றவள் திருப்திக்காக ஒன்றிரண்டைக் கொறிப்பதோடு சரியாம்!

"மிகையில்லை. அவன் மெலிவதைத்தான் நானே பார்த்துக் கொண்டிருக்கிறேனே! ஒவ்வொரு மாதம் செல்லும்போதும், முன்னை விட மெலிந்துதான் இருப்பான். கன்னத்து எலும்பே தூக்கத் தொடங்கிவிட்டது! "

வசு சரியாகத் தூங்குவதும் இல்லையாம். எப்போதும், விட்டத்தை வெறித்தபடி, படுத்தே கிடப்பானாம். என்ன கேட்டாலும், சரியாகப் பதில் சொல்வதும் இல்லையாம்!

வேலையை விட்டுவிட்டு ஊருக்கு வா என்றால், "சம்யுக்தாவைப் பிரிந்த பிறகு, இந்த வேலை ஒன்றுதான் என்னை உயிரோடு வைத்திருக்கிறது. அதையும் விட்டு வரச் சொல்லுகிறீர்களா? " என்றானாம்.

அவ்வளவுதான். பெற்றவர்கள் நடுங்கிப் போனார்களாம்.

"தம்பி, என்ன நினைத்தோ, நீங்கள்தான், இந்தக் கல்யாணத்தை நடத்தி வைத்தீர்கள். அந்தப் பெண்ணின் நினைவில்தான் அவன் கரைகிறான் என்று தோன்றுகிறது! வேறு பெண் பற்றி, அவனிடம் வாயைத் திறப்பது கூட முடியாது! ஒரு நாள், அவள் படத்தைச் சற்று மறைவாக வைத்ததற்கே அந்த ரகளை பண்ணிவிட்டான். அந்தக் கடவுள் ராமபிரான் மாதிரி, அவனுக்கு, அந்த சம்யுக்தா மட்டும்தான். நீங்கள்தான், அந்தப் பெண் வீட்டில் போய்ப் பேசி, ஏதோ வழி பண்ண வேண்டும். அவர்கள் என்ன சொன்னாலும் செய்கிறோம். " என்றார்கள்.

"நம்பவே முடியவில்லையே!" என்றாள் சுசரிதா. "வசுந்தருக்கு, சம்யூ மேலே அன்பே கிடையாது என்று நான் நினைத்தேன். . ."

"அதே உல்டாவாக, சம்யுக்தா மீது, அப்போது எனக்கு என்ன கோபம் வந்தது, தெரியுமா? ஆனால், என்ன அதிசயம், பார். நாங்கள் பேசிக் கொண்டிருந்த அதே நேரத்தில், இன்னும் இரண்டுபேர், என்னைப் பார்க்க வந்திருப்பதாகப் பையன் வந்து சொல்கிறான். யார் என்று கார்டைப் பார்த்தால், சம்யுக்தாவுடைய பெற்றோர்!

"இவர்களை இந்த அறையிலேயே வைத்துவிட்டு, அந்தப் பெற்றோரை, இன்னோர் அறையில் போய்ப் பார்த்துப் பேசினேன். பெண் கண்ணீரில் கரைகிறாள் என்றார்கள் அவர்கள். அவளைத் தனியே வீட்டில் விட்டுவிட்டு, வேலைக்குப் போகக் கூட, இருவருக்கும் பயமாக இருக்கிறதாம். இந்த மனவுளைச்சலில், அவள் என்னவாவது

செய்துகொள்வாளோ என்று, அவர்களுக்கு அச்சம்! அந்த அளவுக்கு சம்யுக்தாவும் தவித்திருக்கிறாள். . . “

“தவித்திருப்பாள் என்று எனக்குத் தெரியும்! சுந்தர், சுந்தர் என்று பைத்தியமாக இருப்பாளே!” என்றாள் சுசரிதா.

“வசுவின் தவிப்பு எனக்குத் தெரிந்தது போல, அவன் மனைவியின் தவிப்பு உனக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது! நம் வாழ்வில் பிரச்சினை பெரிதானதற்கு, அதுவும், அவர்களது பிரச்சினையை நாம் பெரிதாக நினைத்ததும் ஒரு காரணம். ஆளுக்கு ஒரு பக்கமாகச் சாய்ந்ததும் கூட! “ என்றான் சசாங்கன், ஒரு பெருமூச்சுடன்.

உண்மைதான் என்று அவளுக்கும் தோன்றியது. ஏனெனில் சசியும் வேதனைதானே பட்டிருக்கிறான்?

சிறு மௌனத்தின் பின், “அப்புறம் என்ன நடந்தது?” என்று கேட்டாள் சுசரிதா.

“இரு தரப்பாரையும் பேச விட்டேன். பெற்றவர்களுக்குத் தேவை, பிள்ளைகளின் சந்தோஷம்தானே? இருவர் பெற்றோரும், எந்த அளவு பணியவும் தயாராக இருந்தார்கள்.

ஒருவரை ஒருவர் புரிந்து, சமாதானமும் ஆகிவிட்டார்கள். அவர்களுடைய மக்களுக்கு இடைய இருந்த அன்பு அந்தப் பெரியவர்களை ஒன்றுபடுத்திவிட்டது!

“ஆனால், இது மட்டும் போதாதே! அதாவது, வசு, சம்யுக்தா காதலைப் பற்றிச் சொல்லுகிறேன். இவ்வளவு அன்பு இருந்தாலும், இருவரும் ஒரு தரம் பிரிந்து போலத் திரும்பவும் பிரிய மாட்டார்கள் என்று என்ன நிச்சயம்?

“எனவே, வசு, சம்யுக்தா இருவரிடமும் பேசினேன். இருவரின் குறைகளையும் கேட்டேன்.”

“எதற்கெடுத்தாலும், அம்மாவோடு ஒப்பிட்டு, வசுந்தர் மட்டம் தட்டுவதாக, சம்யுக்தா சொல்லுவாள். “ என்றாள் சுசரிதா.

“அதையேதான் என்னிடமும் சொன்னாள். ஆனால், அது மட்டம் தட்டுவது அல்ல! கடைக்குட்டி என்பதால், அவனுக்குத் தாயிடம் பாசம் அதிகம். ஒரேயடியாகப் பிரிவு என்று ஆகிவிட்டதா? தாயைப் பற்றிய ஏக்கத்தை, அவர்களைப் பற்றி உயர்வாகப் பேசித் தீர்த்துக் கொண்டிருக்கிறான். அதே பாசம், சம்யுக்தாவுக்கும் உண்டுதானே? அவனிடம் சண்டையும், அழுகையுமாக, அவள் அதைக்

காட்டியிருக்கிறாள்! தாயோடு ஒத்துப் பார்த்து, வசுந்தர் தன்னைக் கழித்துக் கட்டுவதாக அவள் எண்ணம். ஏதோ ஒரு மோகத்தில் மணந்தாலும், சம்யுக்தாவுக்குத் தன்னைப் பிடிக்கவில்லை., அதனால்தான் அழுகிறாள்., சண்டை போடுகிறாள் என்று, வசு நினைத்தான்.

“இரண்டு பேரும் செய்த பெரிய தப்பு, இருவரும் மனம் விட்டுப் பேசாதது!

திருமணம் செய்துகொள்ளவே திட்டம் போட்டபோதும், இருவரும் சம்பாதிப்பதால், எதிர்காலத்தில் எப்படியெப்படி வாழலாம் என்கிற திட்டத்தைத்தான் பெரிதாகப் பேசியிருக்கிறார்கள்! அதனாலேயே, இருவரும், அடுத்தவரின் வருமானத்துக்காக மட்டும் தன்னை மணந்து கொண்டார்களோ என்று சந்தேகமும் பட்டிருக்கிறார்கள்!

“அதனாலேயே, முதலில் பிரிவது மேல் என்று பிரிந்தும் விட்டார்கள். பிறகானால் பிரிவு தாங்காமல் பயங்கரமான ஏக்கம்! அடுத்தவருக்கும், சற்றும் குறையாத அதே அன்பு இருப்பது தெரியவும், எல்லாம் சரியாகிவிட்டது! இருவருமே இப்போது, ஒருவருக்காக ஒருவர் என்ன செய்யவும் தாயாராக இருக்கிறார்கள். பிள்ளைகள் மகிழ்ச்சிக்காகப் பெற்றவர்களும் அப்படியே!

“ஆனால், இந்த வருத்தம், பிரிவு எதுவுமே, இருவரும் மனம் விட்டு அன்பைச் சொல்லியிருந்தால் நேர்ந்தே இராது! அன்புக்கு முன்னே வறட்டு கௌரவம் பார்க்கக் கூடாது! எதையும் மனம் விட்டுப் பேசுங்கள் என்று சொல்லி அனுப்பினேன். சந்தோஷமாக இருக்கிறார்கள். நீதான் பார்த்தாயே!” என்று முடித்தான் சசாங்கன்.

இப்போது ஆறுதலாகப் பெருமூச்சு விட்டவள் அவள்.

நிம்மதியான நெடுமூச்சின் பின், “அவர்கள் எல்லோரும் உங்களைப் பாராட்டுவதில் அர்த்தம் இருக்கிறது. விவரம் கேட்டபின் எனக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது!” என்றாள் பாராட்டுதலாக.

தொடர்ந்து, “அத்தோடு, நீங்கள் சொன்ன இன்னொன்றும் சரியே. வசுந்தர், சம்யுக்தா பிரச்சினையில், நாமும் சற்று அதிக உணர்ச்சி வசப்பட்டுவிட்டோம் என்றுதான், அப்போது இல்லாவிட்டாலும், இப்போது தோன்றுகிறது. வசுவைப் போல நீங்களும் என்று நானும், சம்யூவைப் போலவேதான் நான் என்று நீங்களும், அவர்களையும் தப்பாக நினைத்து, அடுத்து நமக்குமே தப்பு வண்ணம் பூசிவிட்டோம் என்று தெரிகிறது!” என்றாள் அவள்.

“ஆனால் அவர்களால்தான், காதல் என்பதில் எனக்கு மறுபடி நம்பிக்கை வந்ததும். அதில்லாமல், இவ்வளவு ஏங்கியிருக்க மாட்டார்கள் இல்லையா? வெறும் இனக் கவர்ச்சி என்றால், என்றைக்கோ வேறு தேடியிருப்பார்களே! இந்த அன்பு . .காதல் உண்மை என்று புரிந்த பிறகுதான், சுவர்ணா, தீபன் நேசத்தையே என்னால் ஏற்க முடிந்தது!” என்றான் சசாங்கன்.

“அண்ணனும் சுவியும் ஒரு நல்ல ஜோடி! காதல் உண்மை என்று பறை சாற்றும் இன்னொரு ஜோடி! “ என்று, முகம் மலர்ந்து அவனை நோக்கினாள் சுசரிதா.

“செய்தி புரியும் அளவுக்குப் புத்தி இருக்கிறது!  “ என்று, அவன் சிரிக்க, அவளும் அதில் கலந்துகொண்டாள்.

உடனே முகம் இருள, “ஆனால் . .” என்று அவள் தொடங்கவும், சட்டென இடைமறித்து, சசாங்கன்  பேசினான்.

“ஆனால், கடைசியாக ரொம்பவும் மோசமாக வாயை விட்டுவிட்டோம், இல்லையா? அதற்கு முன்பே நாமும் மனம் விட்டுப் பேசியிருந்தால் . . . மனதில் இருப்பதை, ஒருவருக்கொருவர் வாய்விட்டுச் சொல்லுங்கள் என்று வசு, சம்யுக்தாவிடம் நானே சொன்னேன்! அப்போது,  உச்சந்தலையில் அறைந்த மாதிரி, எனக்கு எப்படி இருந்தது, தெரியுமா? பெரிய பாட்டியம்மாவாக, சுவியும் என்னிடம் அதையேதான் சொன்னாள். அந்தக் கடைசி நாளன்று, நீ ஒரு வார்த்தை சொன்னாயே, “ஒன்றுமே சொல்லாமல் இருந்தால், என்னவென்று எண்ணுவது என்று! உள்ளே ஏக்கம் இல்லாமல், அந்த வார்த்தை வருமா? சொல்லியிருந்தால் . . .சொல்லியிருந்தால் என்று எப்படித் துடித்துப் போனேன், தெரியுமா?” என்றான் அவன் அப்போதும் தவிப்புடன்.

முகம் இளக, ஒரு விரலால், அவன் தோளை மெல்ல வருடி விட்டாள், அவள்.

அவன் திரும்பிப் பார்க்கவும், “ஏன் சொல்லவில்லை?” என்று மெல்லக் கேட்டாள்.

அவள் கையைப் பற்றி அழுத்தி “நல்ல  கேள்வி கேட்டாயே!” என்று, ஒரு சலுகைக் குரலில் குறைப்பட்டான் சசாங்கன்.

அவள் கேள்வியாக நோக்கவும், “முதல் சந்திப்பிலேயே, என்னமோ பெற்றோருக்க் கொடுத்த வாக்கு, அப்படி இப்படி என்று மிரட்டிவிட்டு, அதைக் கடைப்பிடிப்பதாக வேறு அறிவித்துவிட்டு, இப்போது

கேள்வியா, கேட்கிறாய்? உதைக்க வேண்டாம்? முதல் நாளே, நீதான் என்று எனக்குப் பெரிதும் புரிந்துவிட்டது. என் மனம் பற்றித் தெரிந்தால், ஒரேயடியாக ஒதுக்கிவிடுவாயோ என்று, அது வேறு பயம். உன்னைப் பாராமலும் இருக்க முடியவில்லை! நம் சந்திப்புகளை எல்லாம் தற்செயலானவை போலக் காட்ட என்ன பாடு பட்டேன், தெரியுமா?"

"இப்போது தெரிகிறது!" என்று சிரித்தாள் அவள்.

"ஆமாம். இப்போது சிரி.!" என்று செல்லமாகக் கூறியவன், அவளை முகம் திருப்பி நேராகப் பார்த்துக் கேட்டான்.

"இப்போது எப்படி? முடிவு மாறியதா, இல்லையா?"

"இம்!" என்று ஒப்புதலாகத் தலையாட்டினாள் அவள்.

முகம் மலர, "உன் வாக்குறுதிக்காக, ரொம்பவும் கட்டுப் படுத்திக்கொண்டு இருந்தேன். இப்போது ஒரு சின்ன . . . ரொம்பச் சின்னதாக என்றாலும், ஓர் அடையாளம் கிடைக்குமா?" என்று ஆவலாக, ஆர்வமாகக் கேட்டான் அவன்.

கட்டுப்படுத்தி இருந்தது, அவளுக்காக! அவனது வாக்குறுதிக்காக!

சட்டென எம்பி, அவன் கன்னத்தில் முத்தமிட்டவள், அவன் "ஆஹா!" எனவும், முகம் சிவக்க, அவனது தோள் வளைவிலேயே தன் முகத்தை அழுத்தி, மறைத்துக் கொண்டாள்!